GENERAL GEOGRAPHY

OF

THE MADRAS PRESIDENCY

சென்னை இராஜதானியின் பொது விவரணம்

By

K. DORAISWAMY IYENGAR

Formerly Teacher, Pachaiyappa's Institution, and Author of Vernacular Atlas Geography Series

C. COOMARASAWMY NAIDU & SONS
MADRAS

1919

[Rights Reserved]

[Price As. 6.

PRINTED AT
THE INDIA PRINTING WORKS, MADRAS.

முகவுரை.

இச்சிறிய பூகோள புத்தகம் இப்போதிய ஐந்தாவது வகுப்புப் பிள்ளைகளுக்கென்றே வரையப்பட்டுள்ளது. இது தற்காலம் வெளியாயிருக்கும் இதர சென்னை இராஜதானி பூகோள புத்தகங்களைப் போலல்லாமல், சிறு பிள்ளைகளின் புத்திக்கும் பகுத்தறிவுக்கும் ஏற்றதாய் படிப்பிலாகா அதிகாரியால் விதிக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகளை யனுசரித்து சுருக்கமாகவும் தெள்ளிய நடையிலும் எழுதப்பட்டுள்ளது. இதில் பூகோள சம்பந்தமான பொது விவரங்களுடன் பிள்ளைகளுக்கு மனோத்ஸாகத்தை யுண்டுபண்ணி இப்பாடத்தை மேலும் மேலும் கற்க ஆவலைக் கொடுக்கக்கூடிய பல விஷயங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இராமேசுவரம் விலகும் பாலம் (Suspension bridge), நீலகிரி இருப்புப்பாதை (The Nilgiri Railway), மேற்குக் கரைக் கழிகள் (The Malabar back-water), கோலார் தங்கச் சுரங்கம் (The Kolar Gold Fields), உதக மண்டலம் இராஜாங்க அரண்மனை (Ooty Government House) முதலியவற்றின் சித்திரங்களும், விவரங்களும், இன்னும் இவைபோன்ற பல நூதன விஷயங்களும் இப்புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ளன. கூடுமான வரையில் அவசியமான இடங்களில் சரித்திரம், பூதத்துவ சாஸ்திரம், பிரகிருதி சாஸ்திரம், இரஸாயன சாஸ்திரம் முதலியவைகளையும் அனுஸரித்து எழுதப்பட்டிருக்கிறது. இவையன்றி விஷயங்களை நன்கு விளக்குவதற்காக வேண்டுமிடங்களில் படங்களும் சித்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறு பிள்ளைகளின் மனதைப் [illegible]ளுப்படுத்தும்படியான அநேகம் பெயர்களும் சங்கியைகளும், அனாவசியமான இதர விவரங்களும் இப்புத்தகத்தினின்றும் நீக்கப்பட்டிருக்கின்றன. எவ்வாறெனில் இவ்விராஜதானியிலுள்ள முக்கியமான பெரிய மலைகள், ஆறுகள், இருப்புப்பாதைகள் முதலியவைகளும், ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள முக்கியமானபட்டணங்களும் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் மேலே சொன்ன விஷயங்களெல்லாம் இவ்வகுப்புப் பிள்ளைகள் தெரிந்துகொள்ளக்கூடிய அளவு சொல்லப்பட்டிருக்கின்றன. நமது தேசத்தில் நாளடைவில் நசித்துப் போனதும் தற்காலம் நடைபெறும் கைத்தொழில்களைப்பற்றியும் விவரமாய் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸ்தாவர வஸ்துக்களைவிட உயிருள்ள அசையும் பிராணிகளைப்பற்றிச் சொல்லுவதைக் கேட்க சிறுவர்களுக்கு அதிக ஆசையும் வேடிக்கையும் உண்டாவதால் இம்மனோ குணத்திற்குத் தகுந்தாப்போல் ஒரு பிரதேசத்தின் இயற்கையமைப்பைப்பற்றிச் சொல்லும்போது அங்குள்ள ஜனங்கள், மிருகங்கள் முதலியவற்றைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது.

க, து.

உபாத்திமார்களுக்குக் குறிப்பு.

1. பூகோளசாஸ்திரத்தைக் கற்பிக்கும்போது சாதாரணமாய் தெரிந்த வஸ்துக்களைக்கொண்டு தெரியாதவற்றை விளக்கவேண்டும். அதாவது, நதிகளைப்பற்றி கற்பிக்கும்போது பிள்ளைகள் சாதாரணமாய்ப் பார்த்திருக்கும் கால்வாய்களை உதஹரித்தும், சமுத்திரங்களைப்பற்றிச் சொல்லும்போது பிள்ளைகள் தங்கள் ஊரில் பார்த்திருக்கும் ஏரிகளை உதஹரித்தும் கற்பிக்கலாம்.

2. மலைகள், ஆறுகள், சமுத்திரங்கள் முதலியவை சமீபத்திலிருந்தால் கூடுமானவரையில் பிரத்தியக்ஷத்தில் பிள்ளைகளுக்குக் காட்டியே கற்பிப்பது உத்தமம். இப்படிச் செய்ய அனுகூலமிராதபோது, அதாவது, தீவுகள், தீபகற்பங்கள், பூசந்திகள், ஜலசந்திகள் முதலியவைகளைப்பற்றிச் சொல்லிக் கொடுக்கும்போது இவைகளின் மாதிரிகளைச் (Models) செய்து அவற்றைக்கொண்டாவது போதிக்கவேண்டும்.

3. பிள்ளைகளின் மனதைப் பளுப்படுத்தும்படியானதும் மனதில் கிரகிக்க முடியாததுமான அனுவசியமான விஷயங்களை கற்பிக்கக்கூடாது.

4. வேண்டுமிடங்களில் கரும்பலகையில் தேசபடங்களைப் பெரிதாய் வரைந்து அவைகளைக்கொண்டு கற்பிக்கும் பாடங்களை நன்கு விளக்கவேண்டும். பிள்ளைகளைக்கொண்டும் இவ்வித படங்களை எழுதிவிக்கவேண்டும். ஆரம்பத்தில் நாமெழுதும் படங்களைப்பார்த்தோ அல்லது சுவற்றில் தொங்கவிட்டிருக்கும் படங்களைப் (Wall maps) பார்த்தோ எழுதப்பழக்கி, பிறகு பாராமலே தங்கள் ஞாபக சக்தியைக் கொண்டு படங்கள் எழுத பயிலுவிக்கவேண்டும்.

க, து.

CONTENTS.

பொருளடக்கம்.

அத்தியாயம்—I.

1. பீடிகை :—பூகோள சாஸ்திரமாவது யாது? இப்பூமியின்மீதுள்ள நிலத்தினுடையவும் நீரினுடையவும் விஸ்தீர்ணம்; நிலம், நீர் இவைகள் நமக்கு எவ்வெவ்விதத்தில் உபயோகப்படுகின்றன; முன் காலத்து ஜனங்கள் இப்பூமியின் வடிவத்தைப்பற்றியும் விஸ்தீர்ணத்தைப்பற்றியும் என்ன எண்ணியிருந்தார்கள். பக்கம். 1

2. பூமியின் வடிவம் :—பூமியின் வடிவம் தட்டையல்ல, உருண்டை. இதை நாம் நிச்சயிக்கும் விதம். 3

3. பூமியின் பருமன் :—சுற்றளவு குறுக்களவு (கிழக்குமேற்கிலும், தெற்கு வடக்கிலும்) ஒரு உருண்டையான வஸ்துவின் குறுக்களவைக் கண்டுபிடிக்கும் விதம் — பூமியின் பரப்பு. 6

4. பூமி, சூரியன், சந்திரன் :—சூரியன் சுற்றுகிறதா, பூமி சுற்றுகிறதா, வருஷம், மாதம், நாள் இவை எதனால் உண்டாகின்றன. தேய்பிறை, வளர்பிறை, அமாவாசை, பௌர்ணமி இவை ஏற்படும் விதம். ... ... ,,

அத்தியாயம்—II.

5. கண்டங்களும் மகா சமுத்திரங்களும் :—இவை எவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன, எப்படி வியாபித்திருக்கின்றன. 11

6. ஆசியா :—இருக்குமிடம், மலைகள், ஆறுகள், இது இதர தேசங்களுக்கு அனுப்புவிக்கும் பண்டங்கள்—இந்தியா. ... ... ,,

7. ஐரோப்பா :—இருக்குமிடம், மலைகள், ஆறுகள். இக்கண்டம் வியாபாரத்தில் விருத்தியடைய இயற்கையாயுண்டாயிருக்கும் சாதனங்கள். இது இதர நாடுகளுக்கு அனுப்பும் சரக்குகள். ... பக்கம். 12

8. உத்தர மகாசமுத்திரம்:— இருக்குமிடம், இதையடுத்திருக்கும் கண்டங்கள். 13

9. பஸபிக் மகாசமுத்திரம்:— இருக்குமிடம், இதன் விஸ்தீர்ணம், இதையடுத்திருக்கும் கண்டங்கள், ஜப்பான் தீவுகள். ... ... ,,

10. அட்லாண்டிக் மகாசமுத்திரம் :— இருக்குமிடம், இதையடுத்துள்ளகண்டங்கள், முதல் முதலில் இதில் பிரயாணஞ்செய்த மாலுமி—பிரிட்டிஷ்தீவுகள். ,,

11. ஆப்பிரிக்கா :—இருக்குமிடம், சூயஸ் கால்வாய், ஸஹாரா பாலைவனம், மிருகவகைகள். ... 14

12. தட்சிண மகாசமுத்திரம் :—இருக்குமிடம், இதையடுத்திருக்கும் நில பாகங்கள். 15

13. இந்து மகாசமுத்திரம்:—இருக்குமிடம், இதையடுத்துள்ள கண்டங்கள். ... ... ,,

14. ஆஸ்திரேலியா :—இதன் இயற்கையமைப்பு, இதிலுண்டாகும் பொருள்கள். 16

15. அமெரிக்கா :—இதைக் கண்டுபிடித்தவரும், காலமும், இதை யடுத்த மகா சமுத்திரங்கள், இதிலுள்ள பெரிய நதி, பனமா ஜலசந்தி. ... ,,

அத்தியாயம்—III.

16. இந்தியா :—இருக்குமிடம், இயற்கையமைப்பு, இயற்கையாய் ஏற்பட்டிருக்கும் எல்லைகள், மலை

கள், ஆறுகள், இமயமலைப் பிரதேசம், கங்காஸிந்து சம வெளி, மத்திய இந்தியா, தட்சிண பீடபூமி, பர்மா. ... பக்கம் 18

அத்தியாயம்—IV.

17. சென்னை இராஜதானி:—இதற்கு இப்பெயர் உண்டானதற்குக் காரணம், இருக்குமிடம், எல்லைகள். 24

18. இவ்விராஜதானியின் நீளம், அகலம், விஸ்தீர்ணம். 26

19. கடற்கரை :—துறைமுகம், சோழ மண்டலக் கரை, மலையாளக் கரை, மேற்குக் கரைக்கழிகள். ,,

20. தீவுகள் :—இலங்கை, இராமேசுவரம், அந்தமான், லக்ஷத்தீவுகள், ஸ்ரீஹரிக்கோட்டை. ... 28

21. இயற்கையமைப்பு :—பூமியின் மட்டம் 30

22. சமவெளிகள் :—கர்நாடக சமவெளி, கொங்கண சமவெளி. 31

23. மலைகள் :—எப்படி உண்டாகின்றன. ... ,,

மலைகளினால் ஏற்படும் அநுகூலங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை, பாலக்காட்டுக் கணவாய், கிழக்குத் தொடர்ச்சிமலை, ஆனைமலை, நகரிமலை முதலிய சிறிய மலைகள்.

24. பீடபூமி, பள்ளத்தாக்கு:— 35

25. ஆறுகள்:—மழை எப்படி உண்டாகிறது. எவ்வெவ்விடங்களிலிருந்து ஆறுகள் உற்பத்தியாகின்றன, ஆறுகள் உண்டாகும்விதம், உற்பத்தி ஸ்தானம், ஆற்றுப்படுகை, முகத்துவாரம், ஆறுகளினால் உண்டாகும் பிரயோஜனங்கள். கோதாவரி, கிருஷ்ணா, காவேரி இவற்றின் விவரணம், உபநதிகள், கிளைநதி

கள், டெல்டாக்கள், நீர்வீழ்ச்சி, இவ்விராஜதானியில் ஓடும் சிறிய நதிகள், ... பக்கம் 35

26. ஏரிகள் :—சிலுகா, கொல்லேரு, பழவேற்காடு, புழல், செம்பரம்பாக்கம், வீராணம், ஏரிகள். 50

27. இவ்விராஜதானி இயற்கையாய் எவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கிறது. 51

28. பருவக் காற்று :—எவ்வாறு உண்டாகிறது. இதற்கேன் இப்பெயர் வந்தது. தென் மேற்குப் பருவக் காற்று, வடகிழக்குப் பருவக் காற்று இவையடிக்கும் காலம், இவற்றால் உண்டாகும் பிரயோஜனம், இவ்விராஜதானியில் பல விடங்களில் பெய்யும் மழையின் அளவு. 52

29. சீதோஷ்ணஸ்திதியாவது யாது? நாம் ஏன் சீதோஷ்ண ஸ்திதியைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு பிரதேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியை எவற்றால் நிர்ணயிக்கலாம். 57

30. ஜலாதாரம் :—ஏரிகள், நதிகளில் அணைகட்டி ஜலத்தைத் திருப்பல், பெரியாறு பிராஜெக்டு, ருஷிகுல்யா பிராஜெக்டு. 63

31. விளைபொருள்கள் :—(1) மூலவர்க்கம்: நிலத்தைப் பண்படுத்தி விளைவிக்கும் விதம், தானியங்கள், விளையும் ஜில்லாக்களும் அளவும், விவசாயகலாசாலை, விவசாய விஷயமாய் ஒருவன் யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வது. காடுகளும் அவைகளில் உற்பத்தியாகும் பொருள்களும், காடுகள் எங்குள்ளன. (2) உலோகங்கள்: பொன், இரும்பு, அபிரகம், மாங்கனிஸ், காரீயம், வயிரக்கல், கட்டிடக்கல், உப்பு. (3) மிருகவகை. ... 65

32. கைத்தொழில் :—பயிரிடுதல், நெசவுத்தொழில், நூல்நூற்றல், துணி நெய்தல், சாயம்போடுதல், இவை நமது நாட்டில் குறைவுபட்டதற்குக் காரணம், எண்ணெயாடுதல், வெல்லம் சர்க்கரை செய்தல், தோல் பதனிடுதல், சுருட்டு செய்தல் போன்ற இதர கைத்தொழில்கள். ... ... பக்கம் 76

33. வர்த்தகம் :—வர்த்தகமாவது யாது? நமது நாட்டில் விசேஷவர்த்தகம் நடத்துபவர் யாவர்? வர்த்தகத்திற்கு வேண்டிய சாதனங்கள். 86

34. ஏற்றுமதி, இறக்குமதி சரக்குகள். ... 87

35. போக்குவரவுக்குறிய சாதனங்கள் :—சாலைகள், இருப்புப்பாதைகள் இவற்றால் ஏற்படும் நன்மைகள், கால்வாய்கள், துறைமுகம் பட்டணங்கள். 88

36. ஜனத்தொகை :—ஒரு பிரதேசத்தின் வளத்திற்குத் தக்கபடி இருக்கும் ஜன சங்கியை. ... 96

37. பாஷைகள்:—திராவிட பாஷைகள், ஒரியா, துளுவம் முதலியன. 99

38. துரைத்தனம் :—கிராமாதிகாரி முதல் அரசன் வரையில் உள்ள இராஜாங்க உத்தியோகஸ்தர்கள். ... ... ,,

39. ஜில்லாக்கள்.—மலைகள், ஆறுகள், ஏரிகள், விளைபொருள்கள், கைத்தொழில், ஜனத்தொகை, பாஷை, பட்டணங்களும் அவற்றின் விசேஷங்களும். 101

40. சுதேச இராஜ்ஜியங்கள் :—இருக்குமிடம், யாரால் பரிபாலிக்கப்படுவது முதலிய விவரங்கள். 140

GENERAL GEOGRAPHY

OF

THE MADRAS PRESIDENCY.

சென்னை இராஜதானியின் பொது விவரணம்.

அத்தியாயம் I.

பூகோளசாஸ்திரமாவது பூமியையும் அதிலுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இயற்கையானதும், மனிதனால் உண்டாக்கப்பட்ட செயற்கையானதுமான வஸ்துக்களைப்பற்றி விவரமாய் சொல்லும் நூல். நாம் பூமியின்மீது இருப்பதால் இந்த சாஸ்திரத்தைப்படித்து அதிலுள்ள விஷயங்களை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமா யிருக்கிறது. இந்த சாஸ்திரத்தைப் படித்தால் ஜீவப்பிராணிகளுக்காகக் கருணை கூர்ந்து இயற்கைப் பொருள்களை சிருஷ்டித்திருக்கும் கடவுளின் மகிமை நன்கு விளங்கும்.

பிள்ளைகளே! நாம் பூமியின்மீது வசிக்கிறோம். இப்பூமியின் மேற்புறமானது நிலத்தினாலும், ஜலத்தினாலும் மூடப்பட்டிருக்கிறது. இதில் நீர் மூன்றுபாகம் நிலம் ஒருபாகம். நிலம் நமக்குப் பலவிதத்தில் உபயோகப்படுகிறது. நாம் குடியிருக்கும் வீடும், படிக்கும் பள்ளிக்கூடமும், தொழும் கோவிலும்

நிலத்தின்மீதே கட்டப்பட்டிருக்கின்றன. நாம் உண்ணும் உணவுப்பொருள்களும், உடுக்கும் உடைக்கு வேண்டிய பருத்தியும் நிலத்திலிருந்தே பயிரிடப்படுகின்றன. ஆடுமாடுகள் முதலிய ஜீவப்பிராணிகள் வசிக்க ஆதாரமாயிருப்பதும் நிலமே. இவைகளன்றி நிலம் இன்னும் அநேகவிதத்தில் உபயோகப்படுகிறது.

நிலத்தின்மீது வசிப்பதுபோல ஜலத்தின்மேலும் வசிக்கலாம். கப்பலோட்டிகளில் பலர் தங்கள் வாழ்நாட்களை அநேகமாய் ஜலத்தின்மீதே கழிக்கிறார்கள். நிலத்தைப்போல நீரும் அநேகவிதங்களில் நமக்குப் பயன் படுகிறது. நீர் இல்லாவிட்டால் ஜீவப்பிராணிகள் பிழைத்திருக்கமாட்டா. புல், பூண்டு முதலியவைகள் பயிராகா. நீரில் மீன், முதலை, முதலிய பல நீர்வாழும் ஜந்துக்கள் வசிக்கின்றன. கப்பல்கள், படகுகள் முதலியவைகளின் உதவியால் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு பிரயாணஞ் செய்கிறோம். இன்னும் இவைகளைப்போல் பல விதத்தில் நீரும் உபயோகப்படுகிறது.

முன்காலத்தில் பூமி ஒரு அகன்ற தட்டையான மைதானமென்றும் அதன்மீது வானம் ஒரு கிண்ணம்போல் கவிழ்ந்திருப்பதாகவும் எண்ணியிருந்தார்கள். இதுவும் தவிர தம்மிருப்பிடத்தை விட்டு அதிகதூரம் போகாத முன்காலத்து ஜனங்கள் இவ்வுலகம் தங்கள் கண்ணுக்கெட்டியமட்டுந் தானென்றும் நினைத்திருந்தார்கள். நாளாவர்த்தியில் ஜனங்கள் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெகுதூரம் யாத்திரைசெய்ய ஆரம்பித்தபோது வானம் பூமியைத் தொடுவதாகக் காணப்படும் இடத்தை எட்டிவிடலாமென்று எண்ணி யிருந்தவர்கள் ஏமாந்து போனார்கள். எவ்வளவு தூரம் போனாலும் அவ்வடிவானம் கிட்டாமல் போகப்போக விலகுவ தாயிற்று. வானத்

திற்கும், பூமிக்கும் சம்பந்த மிருப்பதாகக் காணப்பட்ட தோற்றமும் பொய்யாய் விட்டது.

பூமியின் வடிவம்.

10-வது பக்கத்திலுள்ள பூமி படத்தை இப்புத்தகத்திலுள்ள இதர படங்களோடு ஒத்திட்டுப்பார்த்தால் இது மற்ற படங்களைப்போல் சதுரமாய் எழுதப்படாமல் வட்டமாய் எழுதப்பட்டிருப்பதை பார்ப்பீர்கள். இப்படம் இவ்வாறு எழுதப்பட்டிருப்பது ஏனெனில் பூமி உருண்டை வடிவமாய் இருக்கிறதென்று காண்பிப்பதற்காகவே. இது இரண்டு வட்டங்களாய் எழுதப்பட்டிருப்பதேனென்றால் ஒரு உருண்டையான வஸ்துவைப்பார்த்தால் ஒரு பார்வையில் அவ்வஸ்துவின் ஒரு பாதிதான் தெரியும். உருண்டையின் இரண்டு பக்கங்களையும் ஒரே பார்வையில் பார்ப்பதற்காகவே இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது.

நாம் பார்க்கும்போது பூமி தட்டையாகத்தானே காணப்படுகிறது. அவ்வாறிருக்க பூமி எப்படி உருண்டையாய் இருக்கக்கூடும்! இச்சந்தேகத்தை கீழே எழுதிய திருஷ்டாந்தரங்களைக் கொண்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

ஒருவன் பூமியில் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு, திரும்பாமல் ஒரே திசையை நோக்கிப் பிரயாணம் செய்தால், சிலகாலத்திற்குப் பிறகு அவன் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேருகிறான். மாலுமிகள் சிலர் இவ்வாறே தங்கள் கப்பல்களை ஒரே திக்கை நோக்கிச் செலுத்தி பிறகு தாங்கள் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள். நமது கண்ணுக்குத் தோன்றுவதுபோல் பூமி தட்டையாயிருந்தால் இவ்வாறு சென்றவர்கள் தாங்கள் புறப்பட்ட இடத்திற்கு, திரும்பாமல் வந்து சேர முடியாது. இதனால் பூமி உருண்டையா

யிருக்கிறதென்று ஏற்படுகிறது. இதை நாம் ஒரு சிறு உதாரணத்தைக்கொண்டு அறியலாம். ஒரு உருண்டையான வஸ்துவின்மீது ஒரு எறும்பை விட்டால், அது சுற்றிச்சுற்றி தன்னை விட்ட இடத்திற்கே வருவதைப்பார்க்கலாம்.

பெரிய ஆறுகளின்மேல் கட்டப்பட்டிருக்கும் உயரமான பாலங்களை நாம் பார்த்திருக்கிறோம். அப்பாலங்கள் சாலையின் மட்டத்திற்கு சமமாயிராமல் ஆமையின் முதுகுபோல் நடுவிலுயர்ந்து இரண்டு கோடிகளிலும் தாழ்ந்திருக்கின்றன. இம்மாதிரியானபாலங்களி லொன்றின் அருகில் சாலையில் நாம் நின்று கொண்டு அப்பாலத்தின் வழியே போகும் ஒரு மனிதனைக் கவனித்தால் அம்மனிதன் நம்மிடமிருந்து விலகிப்போகப்போக முதலில் அவன் கால்களும், பிறகு உடலும் அதன் பிறகு தலையும் கொஞ்சங் கொஞ்சமாய் மறைவதாய்க் காண்போம். இவ்வாறு மறைப்பது எது? அப்பாலத்தின் வளைவான பாகமே!



தரையில் மலைகள், மரங்கள், முதலியன பூமியின் நிஜஸ்வரூபத்தை தெளிவாய்க் காட்டாமல் மறைக்

கின்றன. அகண்ட ஸமுத்திரத்தில் இவ்விதத் தடைகள் ஒன்றுமில்லையாயினும். ஒருவன் கடற்கரையில் நின்றுகொண்டு கரையை நோக்கி வரும் கப்பலைப்பார்த்தால் முதலில் பாய்மரமும் பிறகு நடுப்பாகமும் அதன்பிறகு அடிப்பாகமும், ஒவ்வொன்ருய்த்தெரியும். பூமி உருண்டையாயிருப்பதினுல்தான் இப்பூமியின் வளைவான பாகம் மறைத்து சமீபத்தில் வரவர கப்பலின் ஒவ்வொருபாகமாய்த்தோற்றுகிறது.



பூமி தட்டையாயிருந்தால் கப்பல் கண்ணுக்குப் புலப்பட்டதும் முழு உருவமும் தோன்றும். ஆனுல் சிறியதாய்க் காணப்படும். மேலே சொன்னபடி ஒவ்வொருபாகமாய்த் தெரியாது. மேலேயுள்ள சித்திரங்களைப் பார்த்தால் இவ்விஷயம் நன்ருய்ப் புலப்படும்.

---

*[குறிப்பு:—உபாத்தியாயர் பூகோள உருண்டை யொன்றையும் (Globe) வட்டமாய் எழுதிய படம் ஒன்றையும் வைத்துக்கொண்டு இவ்விஷயத்தை விளக்கிக்காட்டவும்.]

பூமியின் பருமன்.

இப்பூகோளத்தின் உருவத்தை (1) சுற்றளவு, (2) குறுக்களவு, (3) பரப்பு என மூன்று விதங்களாக அளந்து அறிந்திருக்கிறார்கள். ஒரு பொருளைச் சுற்றியளப்பது சுற்றளவு. பூமியின் சுற்றளவு 24,899மைல். ஒரு உருண்டையான வஸ்துவை இரண்டு ஸமபாகங்களாகப் பிரித்து அவற்றில் ஒன்றின் தட்டையான பாகத்தைக் குறுக்கே யளந்தால் அவ்வளவே குறுக்களவு. இப்பூமியின் குறுக்களவு 7,926 மைல். இந்த அளவை கிழக்கு மேற்கில் பார்க்கலாம். தெற்கு வடக்கில் பூமி இருபுறத்திலும் சிறிது தட்டையாயிருப்பதால் இவ்வளவு 26 மைல் குறைவுள்ளதாயிருக்கிறது. அதாவது 7,900 மைல். பூமியை எவ்வாறு இரண்டாய்ப் பிரித்து அளந்தார்க ளென்றால் சுற்றளவில் சற்றேரக்குறைய மூன்றிலொரு பங்கு குறுக்களவு என்று கண்டறிந்திருக்கிறார்கள். (ஒரு வாழைத் தண்டின் சுற்றளவை ஒரு துண்டு நூலினால் எடுத்து, அந் நூலை மூன்றாக மடித்து, தண்டின் குறுக்களவு எடுத்தால், அது சற்றேரக்குறைய சரியா யிருக்கும்). ஒரு வஸ்துவின் மேல்பரப்பை யளப்பது பரப்பளவாம். பூமியின் பரப்பு 197,000,000 சதுர மைல்.

பூமி, சூரியன், சந்திரன்.

நமக்குப் பகலில் வெளிச்சம் கொடுப்பது எது? சூரியன் அதைக் காலையில் எந்தத் திசையில் காணலாம்? அது நடுப்பகலில் எங்கே யிருக்கும்? மாலையில் எங்கே காணப்படும்? காலையி லிருக்குமிடத்திலிருந்து மாலையிலிருக்குமிடத்திற்கு எப்படி வந்தது என்று கேட்டால் ஆகாய மார்க்கமாய் பிரயாணஞ் செய்து அங்கு வந்ததென்று சொல்லுவீர்கள். அது அவ்வாறு செல்வதில்லை. அது ஒரு அக்கினி கோளம் (நெரு

ப்பு உருண்டை). அது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு ஒரேயிடத்தில் இருக்கிறது. பூமிதான் அதைச் சுற்றுகிறது. பூமி ஒரு தரம் அதைச் சுற்றும் காலத்தை ஒரு வருஷம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இப்படி சுற்றுவதை வருஷகதி என்பார்கள். பூமி அதைச் சுற்றும்போது சில மாதங்களில் பூமியின் சிலபாகம் அவ்வக்கினிகோளத்திற்கு கொஞ்சம் சமீபத்தில் செல்லுகிறது. அக்காலத்தில் அங்குள்ள ஜீவப் பிராணிகள் உஷ்ணத்தை ஸகிக்க முடிகிறதில்லை; ஜீவப் பிராணிகள் பிழைத்திருப்பதும், புல் பூண்டு முதலியன உண்டாவதும், மழை பெய்வதும் இவ்வக்கினி கோளத்தினுலேயே. பூமி அதைச் சுற்றும்போது தன்னைத் தானே சுற்றிக்கொண்டே போகிறது. இவ்வாறு பூமி தன்னைத்தான் சுற்றும்போது அவ்வக்கினி கோளத்திற் கெதிரில் இருக்கும் பக்கம் அதாவது பூமியில் பாதிபக்கம் வெளிச்சமாயும் மறு பக்கம் (மறுபாதி) இருட்டாயு மிருக்கும். மறுபடியும் திரும்பும்போது வெளிச்சமான பாதியில் இருட்டும் இருட்டான பாதியில் வெளிச்சமும் உண்டாகும். இம்மாதிரியே பூமி இடைவிடாமல் சுற்றிக் கொண்டிருப்பதால் இராப்பகல் மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது. [இதை இருட்டில் எரியும் விளக்கின் முன் ஒரு கோலின்மேல் ஒரு பானையைக் கவிழ்த்து சுற்றிவிட்டு, அப்பானை சுற்றும்போது மாறி மாறி யுண்டாகும் இருட்டு, வெளிச்சம் இவற்றை பிள்ளைகளுக்குக் காட்டிவிளக்கவும்.] பூமி தன்னைத்தான் சுற்றா விட்டால் எக்காலத்திலும் ஒரு பாதி இருட்டாயும், மறுபாதி வெளிச்சமாயு மிருக்கும். பூமி இவ்வாறு தன்னைத்தான் சுற்றுவதற்கு தினகதி என்று பெயர். அதன் மீதுள்ள அசைவதும் அசையாததுமாகிய எல்லாப் பொருள்களோடும் பூமி ஒரு மணிக்கு சராசரி 1000 மைல்

வீதம் ஓடுகிறது என்பதைக் கேட்க ஆச்சரியமா யிருக்கும் பூமி ஓடுவதாக நமக்குத்தெரியவில்லையே என்று கேட்பீர்கள் நாம் பூமியிலிருந்து அத்துடன் நாமும் சுற்றுவதால் நமக்கு அதன் அசைவு தோற்றாமல், நாம் பார்க்கும் சூரியன், சந்திரன் முதலியன ஓடுவதாகத் தோற்றுகிறது. இது எவ்வாறெனில் ஒரு வேகமாய் ஓடும் புகைவண்டியில் நாம் போகும் போது, பக்கத்திலுள்ள மரம், செடி, வீடு முதலியன ஓடுவதாகத்தோன்றுகிறதே யல்லாமல், நாமிருக்கும் புகைவண்டி ஓடுவதாகத் தோற்றுவதில்லை. பூமிக்கு எத்தனை விதமான சுற்றுகள் உண்டு? அவற்றிற்கு என்ன பெயர்? பூமியைப் போல் அவ்வக்கினி கோளத்தைச் சுற்றும் கோளங்கள் அநேகம் உண்டு. அவற்றிற்குக் கிரஹங்கள் என்று பெயர்.



இரவில் நமக்கு அதிக வெளிச்சம் கொடுப்பது எது? சந்திரன். இது எல்லாராத்திரியிலும் வெளிச்சம் கொடுப்பதில்லை. ஏனெனில் இது பூமியைச்சுற்றும் ஒரு கோளம். இது பூமியை

ஒருதரம் சுற்றுங் காலத்தை ஒரு மாதமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இது ஒரு குளிர்ச்சியான கோளம். இதற்கு சுயமாய் ஒளி கிடையாது. இதுமேலே சொன்ன சூரியனிடமிருந்து வெளிச்சத்தைப்பெற்று, அதை நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது. எப்படி ஒரு கண்ணாடியை வெய்யிலில் பிடித்தால் அது அவ்வெளிச்சத்தை பிரதி பலிக்கச்செய்கிறதோ அதேமாதிரியாய் இக்கோளமும் தான்பெறும் வெளிச்சத்தை பிரதிபலிக்கச் செய்கிறது. இக்கோளம் மாதத்தில் ஒரு நாள் பூர்ணமாய் காணப்படும். அந்ததினத்திற்கு பௌர்ணமி என்று பெயர். இப்பௌர்ணமி முதல் இக்கோளம் பதினலுநாளைக்கு உருவத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் குறைவதாகக் காணப்பட்டு, 15-ம் நாள் கண்ணுக்குப் புலப்படுகிற தில்லை. இப்படி உருவத்தில் குறைவதாகக் காணப்படும் காலத்தை தேய்பிறையென்றும், கண்ணுக்குப் புலப்படாதநாளை அமாவாஸை என்றும் சொல்லுவார்கள். இது முதல் இக்கோளம் பதினலுநாளைக்குகொஞ்சங் கொஞ்சமாய் வளர்வதாகக்காணப்பட்டு, 15-ம் நாள் பூர்ணமாய்த் தென்படும். இதற்கு வளர்பிறை என்று பெயர். இக்கோளம் உருவத்தில் வளர்கிறது மில்லை. தேய்கிறது மில்லை. ஆனல் அது அக்கினி கோளத்திலிருந்து பெறும் வெளிச்சத்திற்குத் தகுந்த அளவாய் பிரதி பலிப்பதானது நமக்கு வளர்வதாகவும், குறைவதாகவும் தோன்றுகிறது. இது எக்காலத்திலும் பூர்ண வெளிச்சத்தைக்கொடாதது. ஏனென்றல், இது பூமியைச் சுற்றுகிறதென்று மேலே சொன்னேமல்லவா! அவ்வாறு சுற்றும்போது பூமியால் மறைக்கப் படாதபோது சூரியன் வெளிச்சத்தை இது அடைவதும், பூமியால் மறைக்கப்படும்போது அடையாமலிருப்பதுமே இதற்குக் காரணம். இக்கோளத்திற்கு தன்னைத்தான் சுற்றுவது, பூமியைச் சுற்றுவது, பூமியுடன் சூரியனைச்சுற்றுவது ஆகிய மூன்று விதமான சுற்றுகள் உண்டு.

பூமி


ஆசியா
ஐரோப்பா
ஆப்பிரிக்கா
இந்து மகா சமுத்திரம்
வட அமெரிக்கா
தென் அமெரிக்கா
வட பஸிபிக் மகா சமுத்திரம்
தென் பஸிபிக் மகா சமுத்திரம்

அத்தியாயம் II.

கண்டங்களும் மகாசமுத்திரங்களும்.

இப்பூமியின் மீதுள்ள நிலபாகமானது ஐந்துபெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித பிரிவுகளுக்கு கண்டங்கள் என்று பெயர். (கண்டம்நிலத்தின் பெரிய பிரிவு.) நிலபாகம் ஐந்து பெரிய பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டிருப்பதுபோல, இப்பூமியின்மீதுள்ள ஜலபாகமும் ஐந்து பெரிய பிரிவுகளாய் பாகிக்கப்பட்டிருக்கின்றது. உலகத்திலுள்ள ஜலபாகம் ஒன்றாயிருந்தும் அதற்கு ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு பெயரிட்டிருக்கிறார்கள். நீரின் விசாலமான பாகத்திற்கு மகாசமுத்திரம் என்று பெயர். இப்பூமியின்மீதுள்ள நிலப்பிரிவுகளெல்லாம் ஒரு பக்கமும் நீர்ப் பிரிவுகளெல்லாம், இன்னொருபக்கமும் இல்லாமல் ஒன்றோடொன்று அங்கங்கே கலந்திருக்கின்றன. இவ்வித மிருப்பதில் அநேகவித சாதகங்கள் உண்டு.

ஆசியா.

நாமிருக்கும் பிரதேசம் ஆசியா கண்டத்திலிருக்கிறது. இது 10வது பக்கத்திலுள்ள படத்தில் காட்டியபடி பூகோளத்தில்கிழக்குப்பாதி உருண்டையில் இருக்கிறது. இப்பாதிக்கு பழயஉலகமென்றுபெயர். இக்கண்டத்தின் சீதோஷ்ண ஸ்திதி இடத்திற்குத் தக்கவாறு நானாவிதமானது. இதில் குடிவளம் அதிகம். இக்கண்டத்தில் உயரமான மலைகளும் எந்நாளும் வற்றாத ஆறுகளும் அநேகம் இருக்கின்றன. உலகத்திலுள்ள மலைகள் எல்லாவற்றிலும் உயரமான இமயமலை இக்கண்டத்திலேதான் இருக்கிறது. இக்கண்டத்தின் கிழக்கிலும், தெற்கிலும் அநேக பெரிய ஆறுகள் சங்கமமாகின்றதாலும் அங்குள்ள மகாசமுத்திரங்கள் கப்பல் போக்கு வரவு

க்கு அநுகூலமா யிருப்பதாலும் இவ்விரண்டு பாகங்களிலேயே கப்பல் வியாபாரம் மிகுதியாய் நடக்கிறது. இதுதவிர தரைமார்க்கமாயும் வியாபாரம் நடக்கிறது. முக்கியமாய் நமது கண்டம் தேயிலை, காப்பி, மிளகு, பஞ்சு, சர்க்கரை, நீலம், வாஸனைத்திரவியம் முதலியவற்றைக் கொண்டு ஐரோப்பாவுடன் வியாபாரம் செய்கிறது. இக்கண்டத்தின் தென்பாகத்திலுள்ள இந்துதேசத்தில் நாம் வசிக்கிறோம்.

ஐரோப்பா.

ஆசியாகண்டத்திற்கு மேற்கேயுள்ளகண்டம் ஐரோப்பா. இது ஆசியாவில் நாலில் ஒருபங்குள்ளது. இது பழய உலகத்தில் மேற்கி லிருக்கின்றது. இக்கண்டம் பழய உலகத்தில் நிலப்பாகமுள்ள இடத்தின் மத்தியிலிருக்கிறது. இக்கண்டத்தின் வடக்கு, மேற்கு, தெற்கு இம்மூன்று பாகங்களிலும் உள்ள சமுத்திரங்களில் கப்பல்கள் கரைக்கு அருகில் செல்லுவதற்கு அநுகூலமாய் அநேக வளைகுடா, விரிகுடா, கடல்கள் முதலியன நிலத்தில் உள்ளிட்டிருக்கின்றன. இவையன்றி அவைகளின் மூலமாய் கப்பல்கள் உள்நாட்டில் வெகுதூரம் போக அநுகூலமான அநேக ஆழமான ஆறுகள் சங்கம மாகின்றன. இவ்வித வசதிக ளிருப்பதால் இக்கண்டத்தில் மற்றக் கண்டங்களைவிட ஏராளமாய் வியாபாரம் நடத்தப்பட்டு அதிக செல்வமும் மேன்மையும்பெற்று இது மற்றெல்லாக் கண்டங்களுக்கும் தலைமை பெற்று விளங்குகின்றது. இக்கண்டத்திலுள்ள மலைகளில் பெரியது ஆல்ப்ஸ மலை. நதிகளில் நீளமானது வால்கா நதி. இக்கண்டம் காகிதம், இரும்புச்சாமான், கண்ணாடிச் சாமான், வஸ்திரம், சாராயம் முதலிய பொருள்களைக்கொண்டு இதர கண்டங்களுடன் வியாபாரம் செய்கிறது.

உத்திரமகாசமுத்திரம்.

ஆசியாவும் ஐரோப்பாவும் ஜலத்தினல் பிரிக்கப்படாமல் ஒரே நிலமாய் இருப்பதால் இவற்றை யுரேஷியா என்றும் சொல்வதுண்டு. இந்த யுரேஷியாவிற்கு வடக்கே உத்திர மகா சமுத்திரம் இருக்கிறது. இதற்கு வட சமுத்திரம் என்றும் பெயர். இது இப்பூகோளத்தின் வடகோடியி லிருப்பதால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று. இம்மகா சமுத்திரம் அதிக குளிரால் பனிக்கட்டியாக உரைந்து விடுகிறது. ஆகையால் இதில் கப்பல்கள் அதிக தூரம் பிரயாணம் செய்ய அநுகூலமில்லை. இம்மகா சமுத்திரத்தை யடுத்திருக்கும் இன்னெரு கண்டம் வட அமெரிக்கா.

பஸபிக் மகாசமுத்திரம்.

யுரேஷியாவிற்குக்கிழக்கே பஸபிக் மகா சமுத்திரம் இருக்கிறது. இதில் முதல் முதல் பிரயாணம் செய்கையில் அலைக்கிளர்ச்சியின்றி அமைதியாயிருந்ததால் இதற்கு இப்பெயர் இடலாயிற்று. இதுவே மகாசமுத்திரங்களில் பெரியது. இது யுரேஷியாவிற்கு மேற்கிலுள்ள அட்லாண்டிக் மகா சமுத்திரத்தை விட இருமடங்கு பெரியது. இம்மகா சமுத்திரத்தின் கிழக்கே அமெரிக்கா கண்டம் இருக்கிறது. அதாவது பஸிபிக் மகா சமுத்திரம் ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலிருக்கிறது. இந்த மகா சமுத்திரத்தில் ஆசியாவைச் சேர்ந்த ஜப்பான் என்னும் தீவு இக்காலத்தில் சிறப்புற்றிருக்கிறது.

அட்லாண்டிக் மகா சமுத்திரம்.

யுரேஷியாவிற்கு மேற்கே அட்லாண்டிக் மகா சமுத்திரமிருக்கிறதென்று சொன்னேம். இதை வட அட்லாண்டிக், தென் அட்லாண்டிக் என இரண்டு பிரிவாய் பிரித்துச் சொல்லுவார்கள். வட அட்லாண்டிக் ஐரோப்பாவிற்கும் வட அமெ

ரிக்காவுக்கும் மத்தியிலும், தென் அட்லாண்டிக் ஆபிரிக்கா வுக்கும் தென் அமெரிக்காவிற்கும் இடையிலும் இருக்கின் றன. இச்சமுத்திரத்தின் மூலமாய் விசேஷ வியாபாரம் நடப்பதால் இது மற்ற சமுத்திரங்களைவிட சிறந்ததாக எண் ணப்படுகிறது. இதன் மூலமாய் இப்பூகோளத்திலுள்ள பற் பல பாகங்களுக்கும் வியாபாரம் நடக்கிறது. இச்சமுத்தி ரத்தை கோலம்பஸ் என்னும் ஐரோப்பியர் தான் முதல் முத லில் தைரியமாய்க் கடந்து அமெரிக்காவைக் கண்டு பிடித்தார். இம்மகா சமுத்திரத்தில் ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் தீவுகள் இருக்கின்றன. இத்தீவுகளில் ஒன்றாகிய இங்கிலாந்தில் நமது தேசத்தை யாளும் சக்கிரவர்த்தி வசிக் கிறார்.

ஆப்பிரிக்கா.

ஐரோப்பாவிற்குத் தெற்கே மத்திய தரைக்கடல் இருக் கிறது. இக்கடல் பழய உலகத்திலுள்ள நிலபாகத்திற்கு நடுவி லிருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. இக்கடலுக்குத் தெற்கே இருக்கும் நிலப்பிரிவு ஆப்பிரிக்கா கண்டம். இக் கண்டம் ஆசியாவுடன் சூயஸ் பூசந்தியால் சேர்க்கப்பட்டிருந்த தால் அக்காலத்தில், ஆசியா முதலான கிழக்கிலிருக்கும் கண் டங்களிலிருந்து ஐரோப்பாவுக்கு கப்பல்கள் ஆப்பிரிக்காவின் தென்கோடியை சுற்றிக்கொண்டு போய் வந்தன. அவ்வாறு ஆப்பிரிக்காவை சுற்றிக்கொண்டு நமதுதேசத்திலிருந்து இங்கி லாந்து போவதற்கு ஆறுமாதகாலஞ் சென்றது. ஆகையால் கொஞ்சகாலத்தில் போவதற்காக சூயஸ் பூஸந்தியை ஒருகால் வாயாய் வெட்டி செங்கடலையும், மத்தியதரைக்கடலையும் ஒன் றாய்ச்சேர்த்தார்கள். இதற்குஇப்போது சூயஸ்கால்வாய் என்று பெயர். இக்கால்வாயின் மூலமாய் நமது தேசத்திலிருந்து

சுமார் மூன்றுவாரங்களில் இங்கிலாந்துசேரலாம். இந்தசூயஸ் கால்வாய் வெட்டினபிறகு ஆபிரிக்கா கண்டம் ஒரு தீவுபோ லாய்விட்டது. இக்கண்டம் விஸ்தீர்ணத்தில் ஆசியாவுக்கு இர ண்டாவதானது. அவ்வாறிருந்தும் இதைச்சூழ்ந்துள்ள மகா சமுத்திரங்களில் விரிகுடா, வளைகுடா முதலியன விசேஷ மாய் இல்லாததால் கப்பல் வியாபாரம் சிறிதும் நடத்த ஏது வில்லை. இதுவும் தவிர இக்கண்டத்தின் மத்தியபாகம் நீரும் நிழலுமற்ற ஒரு மணற்காடு. இம்மணற்காட்டிற்கு ஸகாராபாலை வனம் என்று பெயர். இதுவே உலகத்திலுள்ளபாலை வனங்கள் எல்லாவற்றிலும் பெரியது. இதில் தீப்பறவை, ஒட்டகம், யா னை முதலியன விசேஷம். இக்கண்டம் மிகவும் உஷ்ணமான சீதோஷ்ண ஸ்திதியை உடையது. இக்கண்டத்தில் உலகத்தி லுள்ள நீளமான ஆறுகளில் ஒன்றான நீல நதி ஓடுகிறது. இது பழய உலகத்திலிருக்கிறது.

தட்சிண மகா சமுத்திரம்.

ஆப்பிரிக்கா கண்டத்திற்குத்தெற்கே தட்சிணமகாசமுத் திரம் இருக்கிறது. இது பூகோளத்தின் தென்கோடியிலிருப்ப தால் இதை தட்சிண மகா சமுத்திரம் என்று சொல்லுகிறார் கள். உத்திர மகாசமுத்திரத்தைப்போல் இதிலுள்ள தண்ணீ ரும்கடுங்குளிரால் பனிக்கட்டியாக உறைந்து விடுவதால் இதில் கப்பல் யாத்திரை செய்ய கொஞ்சமேனும் முடியாது. இம்மகா சமுத்திரத்தின் உட்பாகத்தை மனிதன் ஒருநாளும் கிட்டின தில்லை. இதற்கு அருகில் யாதொரு கண்டமு மில்லை.

இந்து மகா சமுத்திரம்.

ஆப்பிரிக்கா கண்டத்திற்குக் கிழக்கே இந்து மகாசமுத் திரம் இருக்கிறது. ஆசியா கண்டத்திற்குத் தெற்கி லிருக்கும் மகாசமுத்திரமும் இதுவே. இது நாமிருக்கும் இந்துதேசத்

திற்குத்தெற்கிலிருப்பதால் இதற்கு இப்பெயர் இடலாயிற்று. இம்மகா சமுத்திரத்தின் கிழக்கேதான் ஆஸ்திரேலியா கண்டம் இருக்கிறது.

ஆஸ்திரேலியா.

இக்கண்டம் நான்குபக்கமும் ஜலத்தினுல் சூழப்பட்ட ஒரு தீவு. இதுவே கண்டங்க ளெல்லாவற்றிலும் சிறியது. இக்கண்டத்தின் மத்தியபாகம் பெரியவரண்ட வனாந்தரம். இதின் கடற்கரையை அடுத்தபாகமே குடியிருக்க ஏதுவாயிருக்கிறது. இதில் பெரிய மலைகளாவது ஆறுகளாவது கிடையாது. இக்கண்டம் பொன், செம்பு, கம்பளிநூல், குதிரை இவற்றை வெளிதேசங்களுக்கு அனுப்புகிறது. இக்கண்டமும் பழய உலகத்தி லிருக்கிறது.

அமேரிக்கா.

இப்போது பழய உலகத்திலுள்ள நான்கு கண்டங்களைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்துகொண்டோம். இனி புதிய உலகமாகிய மேற்குப்பாதி உருண்டையில், இருக்கும் அமெரிக்கா கண்டத்தைப்பற்றி ஆராய்வோம். நாலு நூற்றூண்டுகளுக்கு முன் இக்கண்டம் இருப்பது கிழக்குப்பாதி உருண்டையில் இருந்தவர்களுக்குத் தெரியாது. சுமார் 400 வருஷங்களுக்கு முன்தான் இக்கண்டம் கோலம்பஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அதனுலேதான் இதற்கு புதிய உலகமென்றும் மற்றதற்கு பழய உலகமென்றும் பெயரிட்டார்கள். இக்கண்டம் மேலே சொன்னபடி பஸபிக் மகாசமுத்திரத்திற்கும் அட்லாண்டிக் மகாசமுத்திரத்திற்கும் இடையி லிருக்கிறது. இதை வட அமேரிக்கா, தேன் அமேரிக்கா என இரண்டு பிரிவுகளாய் பிரித்திருக்கிறுர்கள். பூமி உருண்டையை வடபாதி, தென்பாதியாய்ப் பிரித்தால் வட அமெரிக்கா வடபாதி

யிலும் தென்அமெரிக்கா தென்பாதியிலு மிருக்கும். இக்கண்டம் அதிக நிலவள முடையது. இக்கண்டத்தில் நெல், கரும்பு, பருத்தி, புகையிலை முதலியன பயிரிடப் படுகின்றன. வட அமெரிக்கா மலையடர்ந்த பூமி. இதில் உலகத்திலுள்ள ஆறுக ளெல்லாவற்றிலும் பெரிதான மிஸிஸிபி என்னும் ஒரு நதியுண்டு. இங்குள்ள ஜனங்கள் ஐரோப்பாவிலிருந்து குடியேறின ஐரோப்பியர்கள். வட அமெரிக்காவும் தென் அமெரிக்காவும் பனாமா என்னும்* பூசந்தியால் சேர்க்கப்பட்டிருந்தன. இப்போது அப்பூசந்தியை வெட்டி அங்கு ஒரு ஜலசந்தி யுண்டாக்கி, அமெரிக்காவுக்கு கிழக்கிலும் மேற்கிலு மிருக்கும் சமுத்திரங்களை ஒன்று சேர்த்திருக்கிறார்கள். இதனால் ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலான கண்டங்களிலிருந்து அமெரிக்காவின் மேற்குக் கரைக்குப் போகவேண்டியவர்கள் தென் அமெரிக்காவைச் சுற்றிக்கொண்டு போகாமல் இந்த ஜலசந்தியின் வழியே கப்பல் யாத்திரை செய்ய அநுகூலமாயிற்று.

* இரண்டு பெரிய பூபாகங்களை ஒன்றாய்ச் சேர்க்கும் குறுகிய நிலபாகம் பூசந்தி எனப்படும்.

அத்தியாயம் III

இந்தியா.



நாமிருக்கும் பிரதேசமாகிய இந்தியா, ஆசியாகண்டத்தில் தெற்குபாகத்திலிருக்கிறது. இத்தேசம் மூன்று பக்கமும் ஜலத்தினால் சூழப்பட்ட ஒரு தீபகற்பம். இந்த தீபகற்பத்தைப்போல் ஆசியா கண்டத்தின் தெற்கே இன்னும் இரண்டு தீபகற்பங்கள் இருக்கின்றன. இம்மூன்று தீபகற்பங்களில் நடுவிலுள்ளது நமது இந்தியாதேசம். இத்தேசத்தின் வடக்கிலுள்ள மலைத்தொடருக்கு இமயமலைகள் என்று பெயர். இத்தொடர் திபேத்துநாட்டை இந்தியாவிலிருந்து பிரிக்கிறது. இம்மலைத் தொடரிலுள்ள உன்னதமான சிகரம் எவரேஸ்டு. இத்தொடரில் கங்கை, ஸிந்து, பிரம்மபுத்திரா, என்னும் மூன்று பெரிய ஆறுகள் உற்பத்தியாகின்றன. இவற்றுள் பிரம்மபுத்திரா நதியும் ஸிந்து நதியும் இத்தொடரில் வடக்கேயும், கங்கை நதி இத்தொடரில் தெற்கேயும் உண்டாகின்றன. இத்தொடரின்மேற்குக்கோடியிலிருந்து தெற்காய் ஸுலைமான், ஹாலாமலைகள் வியாபித் திருக்கின்றன. இம்மலைகளுக்கு இடையில் கைபர்கணவாய், போலோன் கணவாய் என்ற கணவாய்கள் உண்டு. இம்மலைகள் இந்தியாவுக்கும் ஆப்கனிஸ்தானம், பலுசிஸ்தானம் என்னும் தேசங்களுக்கும் இடையில் இருக்கின்றன. இதன் கிழக்குக் கோடியிலிருந்து தெற்காய் பாட்காய் மலைகள், அரக்கான் மலைகள் வியாபித் திருக்கின்றன. இம்மலைகளே இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இடையிலிருப்பவை. நமது தேசத்திற்குக் கிழக்கே வங்காளக் குடாக்கடலும், தெற்கே இந்து மகாசமுத்திரமும், மேற்கே அரபிக்கடலும் எல்லைகளாய் இருக்கின்றன. நமது தேசத்தின் கோடியிலுள்ள முனைக்கு கன்னியாகுமரி முனை என்று பெயர்.

இவ்விந்து தேசத்தை (1) இமயமலைப் பிரதேசம் (2) கங்கா ஸிந்து ஸமவெளி, (3) தட்சிணபீடபூமி, என்ற மூன்று இயற்கையான பிரிவுகளாய் பிரிக்கலா மென்றாலும் (4) பர்மா இத்தேச எல்லைக்கு வெளிப்பட்டிருந்தும், அது நமது இந்திய அரசாட்சியுடன் சேர்க்கப்பட்டிருப்பதால் அதை நான்காவது பாகமாகச் சொல்வதுண்டு.

இமயமலைப்பிரதேசம்.

இவற்றுள் இமயமலைப் பிரதேசமாவது இந்தியாவின் வடக்கேயுள்ள மலைப்பிரதேசம். இம்மலைகள் உலகத்திலுள்ள மலைகள் எல்லாவற்றிலும் மிகப் பெரியவை. இவற்றின் உன்னதமான சிகரம் 29,000 அடி உயரமுள்ளது. இம்மலைகள் கிழக்கு மேற்கில் (1000) மைல் நீளம் வியாபித்திருக்கின்றன. இம்மலைகள் அதிக உயரமுள்ளதா யிருப்பதால் இவைகளின் மீது எப்போதும் பனிக்கட்டிகள் மூடிக்கொண்டிருக்கும். இதனாலேதான் இம்மலைகளில் உற்பத்தியாகும் இந்தியாவின் மூன்று பெரிய நதிகளும்* ஜீவநதிகளா யிருக்கின்றன. தவிரவும் இம்மலைத் தொடருக்கு இப்பெயர் வந்ததற்குக் காரணம் இம்மலையின் மீதிருக்கும் உறைந்த பனிக்கட்டிகளே. வடமொழியில் ஹிமம் என்றால் பனி, ஆலயம் என்றால் இருப்பிடம். ஆகவே ஹிமாலயம் என்றால் பனியின் இருப்பிடம் என்பது பொருள். இவைகள் அந்நிய தேசத்தவர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வரக்கூடாதபடி, இந்தியாவிற்கு வடக்கே ஒரு பெரிய சுவர் வைத்தாற்போல் இருக்கின்றன. இம்மலைகள் மேற்குக் கோடியிலும், கிழக்குக் கோடியிலும் தெற்குமுகமாய் வியாபித்திருக்கின்றன வென்றும், மேற்குக்கோடியில் வியாபித்திருக்கும் மலைகளில் பலகணவாய்கள் உண்டென்

---

* ஜீவநதி = எப்போதும் தண்ணீர் ஓடும் ஆறு.

றும், மேலே தெரிந்து கொண்டோம். அக்கணவாய்களின் மூலமாய்த்தான் ஆரியர்கள் முதலானோர், ஆசியா கண்டத்தின் இதரதேசங்களி லிருந்து நமது தேசத்திற்கு வந்து, இங்கு குடியேரினதாகவும், பாரசீகர், கிரேக்கர் முதலானோர் நமது தேசத்தின்மீது படையெடுத்ததாகவும் இந்துதேச சரித்திரம் கூறுகிறது. இப்போது நமது ராஜாங்கத்தார் இக்கணவாய்களினிடத்தில் காப்புச் சேனைகளைவைத்து, அந்நிய தேசத்தார் இங்கு படையெடுத்து வராதபடி பாதுகாத்துவருகிறார்கள். இவ்விமய மலைச்சரிவில் அநேக குளிர்ச்சியான பட்டணங்களிருக்கின்றன. அவற்றுள் ஸிம்லா என்னும் பட்டணமே நமது இந்தியாவுக்குக் கோடைகாலத்தில் ராஜதானியா யிருக்கிறது. அப்போது இங்கு நமது ராஜப்ரதிநிதியும் இவ்விராஜாங்கத்தைச் சேர்ந்த பெரிய ஆபீஸுகளின் உத்தியோகஸ்தர்களும் இருப்பார்கள்.

கங்காஸிந்து சமவெளிப்பிரதேசம்.

இது இமயமலைக்குத் தெற்கேயுள்ளது. இங்கு கங்கை, சிந்து என்ற இரண்டு ஆறுகளும் பாய்வதால் இதற்கு இப்பெயர்வந்தது. இதுவுமன்றி பூகோள சாஸ்திரிகள் ஆதிகாலத்தில் இவ்விமயமலைக்குத்தெற்கில் நிலமில்லாமல் சமுத்திரம் வியாபித்திருக்க வேண்டுமென்றும், இம்மலைகளில் உற்பத்தியாகி ஓடிவரும் மூன்று பெரிய ஆறுகளும் இடைவிடாமல் அம்மலைகளினின்று கல், மண் முதலியவற்றை அடித்துக்கொண்டு வந்து சேர்த்ததினாலும், சமுத்திரத்தினின்று அலைகள் அடித்து மண் முதலியவற்றை அவற்றுடன் சேர்த்துக்கொண்டு வந்ததினாலும், இந்நிலபாகம் உண்டாயிருக்கவேண்டுமென்று ஊகிக்கிறார்கள். இச்சமவெளியின் அதிக பாகம் கங்கை நதியாலும் அதன் உபநதிகளாலும் வியாபிக்கப்பட்டிருப்பதால், அந்த பாகமே மிகவும் செழிப்புள்ளதா யிருக்கிறது. இதில் நெல்லும்

சணலும் ஏராளமாய்ப் பயிராகின்றன. இச்சமவெளியின் மேற்கே வடபாகத்தில் ஸிந்து நதியும் அதன் ஐந்து உபநதிகளும் வியாபித்திருக்கின்றன. இந்தஇடத்திற்கு பாஞ்சாலம் அல்லது *பஞ்சாப்பு (Punjab) என்று பெயர். தென்பாகத்தில் ஒரு பெரிய பாலைவனமிருக்கிறது. இச்சம வெளியில் டில்லி, ஆக்ரா, காசி, பாட்னு, கல்கத்தா முதலான பெரிய பட்டணங்களிருக்கின்றன. இவற்றுள் டில்லியே நமது தேசத்திற்கு இப்போது இராஜதானியா யிருக்கிறது. இதற்கு முன்பு கங்கையாற்றின் கிளைநதியாகிய ஹூக்லி நதிக்கரையிலிருக்கும் கல்கத்தாவே பிரதானபட்டண மாயிருந்தது. இச்சம வெளியில் வசிக்கும் ஜனங்களின் தொகை அதிகம்.

கங்காஸிந்து சமவெளிக்குத் தெற்கிலும், தட்சிண பீடபூமிக்கு வடக்கிலும், மாளவம் அல்லது மத்திய இந்தியா என்னும் பீடபூமியிருக்கிறது. இப்பீடபூமியின் சற்றேறக்குறைய மேற்கே அரவலிமலையும், தெற்கே விந்தியா, ஸாத்பூரா மலைகளும் இருக்கின்றன. தெற்கேயுள்ள இவ்விரண்டு மலைகளுக்கும் நடுவில் நருமதைநதி யோடுகிறது. ஸாத்பூரா மலைக்குத் தெற்கில் தபதி என்னும் மற்றொரு நதி யோடுகிறது. இவ்விரண்டு ஆறுகளும் மேற்கேயுள்ள அரபிக் கடலில் விழுகின்றபடியால் இவைகளை நதம் என்று சொல்வதுண்டு. தபதி நதிக்குத் தெற்கில் தட்சிணபீடபூமி ஆரம்பிக்கிறது. மேற்கேயுள்ள அரபிக் கடற்கரையிலிருக்கும் பம்பாய் இவ்விந்து தேசத்தின் பிரதான பட்டணங்களிலொன்று.

தட்சிண பீடபூமி.

இதில் நாமிருக்கும் சென்னை இராஜ தானியும், அதற்கு வடக்கேயுள்ள ஹைதராபாத்து முதலான சில நாடுகளும்

* பஞ்சம்+அப்பு=பஞ்சாப்பு என்பதற்கு அஞ்சுஜலம் என்பது பொருள்.

சேரும். இவை இந்து தேசத்தில் தெற்கே மேட்டுப் பாங்காயிருப்பதால், இவற்றிற்கு தட்சிண பீடபூமி என்ற பெயருண்டாயிற்று. இப்பீடபூமியில் அதிக பாகமான சென்னை இராஜதானியைப்பற்றி நாம் விஸ்தாரமாய் இனி படிப்போம்.

பர்மா.

இது இந்தியா தேசத்திலிருந்து இமயமலைகளின் கிழக்குக்கோடியில் தெற்கே வியாபித்திருக்கும் பாட்காய் மலை, மணிபூர் மலை, அரக்கான் மலை, முதலியவற்றால் பிரிக்கப்பட்டிருக்கிறது. இத்தேசத்தில் ஐராவதி, ஸால்வீன், மீகாங்கு என்னும் பலநதிகள் வடக்கு தெற்காய் ஒன்றுக்கொன்று 50 மைல் தூரத்தில் ஓடுகின்றன. இங்கு நெல் வராளமாய் விளைகிறது. ரங்கூன் இதற்கு முக்கிய பட்டணம்.

18-வது பக்கத்திலிருக்கும் இந்தியா தேச படத்தைப் பார்த்து மேலே படித்த மலைகள், ஆறுகள், பட்டணங்கள் முதலியன எங்கெங்கே இருக்கின்றனவென்று தெரிந்து கொள்ளவும்.

அத்தியாயம் III.

சென்னை இராஜதானி.

பிள்ளைகளே, நாம் இருக்கும் ஊரைப்பற்றியும் அவ்வூர் இருக்கும் ஜில்லாவைப் பற்றியும் கீழ்வகுப்பில் படித்திருக்கிறோம். இப்போது நாம் படித்த ஜில்லா இருக்கும் இராஜதானியைப் பற்றித் தெரிந்துகொள்ளுவோம்.

நாமிருக்கும் இராஜதானிக்குச் சென்னை இராஜதானி என்று பெயர். சென்னை இராஜதானி என்று சொல்லுவதற்குக் காரணம் என்னவென்றால் இவ்விராஜதானிக்கு முக்கிய பட்டணம் சென்னப்பட்டணம். இப்பட்டணத்தில் ஆங்கிலேயர் முதல் முதல் வர்த்தகஞ் செய்ய வந்தபோது அவர்கள் வர்த்தகச் சரக்குகளை வைத்துக்கொள்ள இடம்வேண்டியிருந்தது. அதற்காக இப்பொழுது சென்னப்பட்டணத்தில் ஸெயின்ட் ஜியார்ஜ் கோட்டை (Fort Saint George) கட்டியிருக்குமிடத்தை, கி. பி. 1639-ம் வருஷத்தில் பிரான்ஸிஸ்டே, (Francis day) என்னும் ஆங்கிலேய வர்த்தகத் தலைவருக்கு சந்திரகிரி அரசர்களின் கீழ் உள்ள ஒரு சிற்றரசன் கொடுத்தான். இச்சிற்றரசனின் தகப்பன் பெயர் சென்னயப்பன். இந்த இடத்தைக் கொடுக்கும்போது கோட்டை கட்டியிருக்கும் ஊருக்குத் தன் தகப்பன்பெயரை இடும்படி அச்சிற்றரசன் கேட்டுக்கொண்டான். அதனாலே தான் இவ்விராஜதானியின் முக்கிய பட்டணத்திற்கு சென்னயப்பன் பட்டணம் அல்லது சென்னப்பட்டணம் என்றும், இவ்விராஜதானிக்கு சென்னை இராஜதானி யென்றும் பெயர் வந்தது.

1. இருக்கு மிடம், எல்லைகள்.

18-வது பக்கத்திலிருக்கும் இந்தியா தேசபடத்தைப் பார்த்தால் நாமிருக்கும் இராஜதானி இந்தியாதேசத்தில் தெற்கே இருக்கிறதென்று தெரியவரும். நமது இராஜதானியின் கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று பக்கங்களில் ஜலமும், வடக்கில் நிலமும் எல்லையா யிருக்கின்றன. இவ்விராஜதானி யின் வடமேற்கே பம்பாய் இராஜதானியும், நேர்வடக்கே நிஜாம் ராஜ்ஜியமும் (ஹைதராபாத்து), வடகிழக்கே ஒரிஸ்ஸா நாடும் இருக்கின்றன. இவைகளும் இந்தியா தேசத்தின் பிரிவுகள் என்பதை மேலேசொன்ன படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும். இவ்விராஜதானிக்கு கிழக்கே வங்காளக்குடாக்கடலும், தெற்கே இந்து மகாஸமுத்திரமும், மேற்கே அரபிக்கடலும், இருக்கின்றன. கிழக்கிலும் மேற்கிலும் உள்ள இவ்விரண்டு கடல்களும் தெற்கேயுள்ள இந்து மகாஸமுத்திரத்தின் பிரிவுகள். பூகோளசாஸ்திரிகள் இவ்விந்துதேசமானது இந்துமகா ஸமுத்திரத்தில் உள்நுழைந்து சென்றிருப்பதால் இவ்விரண்டு கடல்களும் உண்டாயிருக்க வேண்டுமென்றும் ஊகிக்கிறார்கள். இவ்விருகடல்களும் நமது சென்னை இராஜதானிக்குத் தெற்கே ஒன்றாய்ச் சேருகின்றன. இவைகள் சேருமிடத்தில் மன்னார்குடா இருக்கிறது. இவைகளை ஒன்றாய்ச்சேர்க்கும் நீர்ப்பிரிவுக்கு பாக்ஸ் ஜலசந்தி என்று பெயர். இந்த ஜலசந்தியே லங்கைத்தீவை சென்னை இராஜதானியி லிருந்து பிரிக்கிறது. இந்த லங்கைத்தீவு முன் நமது இராஜதானியோடு சேர்ந்திருந்த ஒருகல்திட்டென்றும், அது இப்போது பாக்ஸ் ஜலசந்தியால் பிரிக்கப்பட் டிருப்பதாயும் ஊகிக்கலாம். இதற்கு திருஷ்டாந்தமாக பாக்ஸ் ஜலசந்தியில் அநேக சிறிய திட்டுகள் இருக்கின்றன. இத்திட்டுகளே இலங்கைத்தீவை நமது இராஜதானியுடன் சேர்க்கும் கோர்வை.

இராமேசுவரம் தீவு இத்திட்டுகளில் ஒன்று. இதுவும் தவிர இத்தீவு சேர்க்கப்பட்டிருந்ததற்கு இன்னொரு அத்தாட்சியுமுண்டு. அதாவது கப்பல்கள் இத்தீவைச் சுற்றிக்கொண்டு போகவேண்டுமே யொழிய இந்த ஜலசந்தியில் வரிசையாய் கல்திட்டுகளிருப்பதால் இதன்வழியே போக முடியாது. இம்மாதிரியாய் இவ்விராஜதானிக்கும் இத்தீவிற்கும் இடையில் கல்திட்டுகள் கோர்வையாயிருப்பதால் இதன்மூலமாய் இத்தீவிற்குப்போக கொஞ்சதூரம் இருப்புப் பாதை போடப்பட்டிருக்கிறது.

இவ்விராஜதானியின் வடகிழக்கே குறுகலாய் நீண்டிருக்கும் பாகந்தவிர மற்றபாகத்தை எடுத்துக் கொண்டால் வடபாகத்தில் அகன்று தெற்கே வரவரக்குறுகி, ஏறக்குறைய முக்கோணவடிவமாயிருக்கிறது. இவ்விராஜதானி வடக்கே தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் தண்ணீரினால் சூழப்பட்டிருப்பதால், இதை ஒரு தீபகற்பமென்று சொல்லலாம்.

2. நீளம், அகலம், பரிமாணம் அல்லது விஸ்தீர்ணம்.

இவ்விராஜதானியின் வடகிழக்குக் கோடி முதல் தென்மேற்குக் கோடிவரையில் நீளம் சுமார் 950 மைல். அதிகமாய் அகன்றிருக்கிற இடத்தில் இதன் அகலம் சுமார் 450 மைல். இதன் விஸ்தீர்ணம் 1,41,800 சதுரமைல். (ஒரு மைல் நீளமும் ஒருமைல் அகலமுமுள்ள ஒருபிரதேசத்தின் பரிமாணம் ஒரு சதுரமைல்.)

3. கடற்கரை.

இவ்விராஜதானியின் கடற்கரையின் நீளம் 1,800 மைல். கிழக்கே இக்கடற்கரைக்கு சோழமண்டலக்கரை யென்றும், மேற்கே மலையாளக்கரை யென்றும் பெயர். கிழக்கே கடற்கரையானது அகலமாயும் கடற்கரையிலிருந்து மேற்கே உள்நாட்டில்செல்லச் செல்ல பூமி உயர்ந்தும் மேற்குத்தொடர்ச்சி

மலைவரையில் வியாபித்திருக்கிறது. மேற்கே கடற்கரையானது அகலக்குறைவாயிருக்கிறது. இங்கு அகலத்தில் குறைந்ததே னென்றால் மேற்குத் தொடர்ச்சி மலை கடற்கரையையொட்டி செங்குத்தாய் வியாபித்திருக்கிறது. இக்கடற்கரையானது கோணலாயிராமல் அநேகமாய் ஒழுங்காகவே யிருக்கிறது. இவ்விராஜதானியின் கடற்கரையினருகில் கடல் ஆழமில்லாம லிருப்பதாலும், கப்பல்கள் உள்நாட்டிற்குப் போகத் தகுந்த ஆழமுள்ள ஆறுகள் இல்லாததாலும், கப்பல்களை கரைக்கு. தூரத்திலேயே நங்கூரம் பாய்ச்சி நிறுத்தவேண்டி யிருக்கிறது. இக்கரைக்கு அருகில் கடல் வெகு தூரம் வரையில் 600 அடி ஆழத்திற்கு அதிக மில்லை. கிழக்குக் கரையை விட மேற்குக் கரையில் கடற்கரையோரத்தில் கடல் ரொம்ப ஆழமில்லாம லிருக்கிறது. கிழக்குக்கரையிலாவது மேற்குக்கரையிலாவது கப் பல்கள் தங்க வசதியான துறைமுகங்களில்லை. இதற்காக இராஜாங்கத்தார் விசேஷ பணம் செலவழித்து சென்னப்பட் டணத்தில் ஒரு துறைமுகம் கட்டினார்கள். இது 1,200 கஜம் நீளமுள்ள இரண்டு சுவர்களால் 500 கஜம் அகலமுள்ள இடை வெளியுடன் கட்டப்பட்டிருக்கிறது. அதன் மத்தியில் கப்பல் கள் உள்ளே வரவும் வெளியே போகவும் 500 அடி அகல முள்ள வழியுண்டு. இவ்வழி கிழக்குப்பக்கத்தில் கடலை நோக்கி இருந்தது. பெரிய அலைகள் மேற்கு நோக்கி அடிப் பதனால் அவ்வழி அநேகமாய் மணலினால் தூர்க்கப்பட்டு விட் டது. ஆகையால் அதற்கு வட கிழக்கே வேறொரு வழி யுண்டாக்கப்பட்டு அதன் வழியாய்க் கப்பல்கள் இப்போது துறைமுகத்திற்குள் போய் வருகின்றன. விசாகப்பட்டணத் தில் கடற் கரையிலிருக்கும் மலையானது கடலுக்குள் பிரவே சித்து ஒரு இயற்கையான கப்பல் ஒதுங்குமிடமாய் இருப்ப தால், அதை வசதியான துறைமுகமாக்க இராஜாங்கத்தார்

யோசித்துக்கொண் டிருக்கிறார்கள். மேற்குக் கடற்கரையில் கடல் நீர் பூமிக்குள் எதிர்த்து வருவதால் அங்கு சில கழிகள் ஏற்பட்டிருக்கின்றன. இம்மாதிரிக்கழிகள் அம்மேற்குக் கடற்கரையில் அநேகமுண்டு. இக்கழிகள் அதிக ஆழமில்லாமல் அநேக மைல் தூரம் வியாபித்திருக்கின்றன. கொச்சி ராஜ்யத்திலிருக்கும் கழியின் நீளம் 120 மைல். இக்கழியிலிருந்து தொடர்ச்சியாய் சென்னை இராஜதானியின் தென் கோடி முனைவரையில், போக்கு வருத்துக்கு அநுகூலமாய், இராஜாங்கத்தார் ஒரு கால்வாய் வெட்டியிருக்கிறார்கள். இக்கழிகள் அங்கங்கே கால்வாய்களினால் சமுத்திரத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

4. தீவுகள்.

இலங்கைத் தீவு வங்காளக் குடாக்கடலில் நமது இராஜதானிக்குத் தென்கிழக்கே யிருக்கிறது. இதைப்பற்றி சுருக்கமாய் 25-வது பக்கத்தில் சொல்லி யிருக்கிறோம். இத்தீவு கடலோரத்தில் சமநிலமாயும் உள்நாட்டில் போகப்போக மலைப் பிரதேசமாயும் இருக்கிறது. இங்குள்ள ஜனங்களுக்கு சிங்களர் என்று பெயர். கோளம்பு என்பது இத்தீவிற்கு முக்கிய பட்டணம். இப்பட்டணத்தின் துறை முகத்தில் நானா தேசங்களிலிருந்தும் வரும் கப்பல்களைக் காணலாம். இந்தியாவுக்குக் கிழக்கேயுள்ள தேசங்களிலிருந்து மேற்கேயுள்ள தேசங்களுக்குப் போகும் கப்பல்கள் யாவும் இத் துறைமுகத்தின் வழியாகவே செல்ல வேண்டும்.

இராமேசுவரம். இத்தீவு சென்னை ராஜதானியிலிருந்து பாம்பன் கால்வாயினால் பிரிக்கப்பட்டிருக்கிறது. இத்தீவு பத்துமைல் நீளமும் ஏறக்குறைய பத்துமைல் அகலமுமுள்ளது. இது இந்துக்களுக்கு விசேஷ புண்ணியஸ்தலம். இத்தீவி

னருகில் கிழக்கிலிருக்கும் ஸமுத்திரத்தை இரத்தினகரமென் றும், மேற்கிலிருக்கும் ஸமுத்திரத்தை மஹோததி என்றும் இவ்விரு ஸமுத்திரங்களும் கூடுமிடத்தை தனுஷ்கோடி என் றும் சொல்லுகிறார்கள். இந்தியாவின் எல்லாப்பக்கங்களி லிருந்தும் திரளான ஜனங்கள் தனுஷ்கோடியில் ஸ்னனஞ் செய்ய இவ்விடத்திற்கு யாத்திரை செய்கிறார்கள். இங்கு ஒரு பெரிய சிவாலய மிருக்கிறது. தென்னிந்தியா இருப்புப் பாதையின் ஒரு பிரிவு இத்தீவில் தனுஷ்கோடி என்னு மிட த்தில் முடிகிறது.

அந்தமான் தீவு:-இது வங்காளக்குடாக்கடலில் கிழக்கே வெகு தூரத்திலிருக்கின்றது. நமது தேசத்தில் தீபாந்தர சிட்சை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை ராஜாங்கத்தார் இத் தீவிலேயே வைக்கிறார்கள்.

லக்ஷத்தீவுகள்:—மலையாளக் கரைக்கு சுமார் 200 மைல் தூரத்தில் இத்தீவுகள் இருக்கின்றன. இவற்றிற்குத் தெற்கே யுள்ளவற்றிற்கு மாலடிவ் தீவுகள் என்று பெயர். இத்தீவு களில் தென்னை விசேஷமாய் பயிரிடப்படுகிறது. இங்குள்ள ஜனங்கள் தென்னை நாரினல் கயிறு முதலியவை பின்னும் தொழிலினல் ஜீவிக்கிறார்கள். இத்தீவுகள் மலையாள ஜில்லா கலெக்டர் அதிகாரத்திற் குட்பட்டவை.

ஸ்ரீ ஹரிக்கோட்டை :—இது நெல்லூர் ஜில்லாவிற்குக் கிழக்கே வங்காளக்குடாக்கடலில் இருக்கிறது. இதில் காடுகள் விசேஷம். இக்காடுகளில் விறகுக்கு உதவக்கூடிய சிறு செடிகளே அடர்ந்திருக்கின்றன. இங்கு ஏனதி என்னும் ஒரு நாகரீகமற்ற பூர்வீக ஜாதியார் வஸிக்கிறார்கள். இவர்கள் தெலுங்கு பேசுகிறார்கள்.

5 இயற்கை யமைப்பு



மேலேயுள்ள படத்தைப் பாருங்கள். இதில் பூமி சில இடங்களில் சமுத்திர மட்டத்திற்கு சமமாயும், வேறு சில இடங்களில் 600-அடி உயரமுள்ளதாயும், இன்னும் சில இடங்களில் 600-அடி முதல் 1500-அடி வரையில் உயரமுள்ள தா

யும், மற்றும் சில இடங்களில் 1500-அடி முதல் 3000-அடி வரையில் உயர்ந்ததாயும், பின்னும் சில இடங்களில் 3000-அடிக்குமேல்பட்ட உயரமுள்ளதாயும் இருப்பதை தெரிந்து கொள்ளலாம்.

1. சம வெளிகள்.

பூமியில் சிலபாகம் சமுத்திரமட்டத்துக்குச் சமமாயும், சில பாகம் உயரமாயும், வேறு சில பாகம் தாழ்வாயு மிருக்கும். நமது ராஜதானியில் சமுத்திர மட்டத்திற்குத் தாழ்வான பாகங் கிடையாது. சமுத்திர மட்டத்திற்கு சமமாயும் 600 அடிக்கு குறைந்த உயரமுள்ள பூமிக்கு சமவெளி யென்று பெயர். இவ்வித சமவெளிகள் நமது ராஜதானியில் இரண்டுண்டு. இவ்விரு சமவெளிகளும், கடலுக்கும் மலைத்தொடர்களுக்கும் இடையில் இருக்கின்றன. இவற்றுள் ஒன்று கிழக்கே யுள்ளது. மற்றொன்று மேற்கே யுள்ளது. கிழக்கே யுள்ள சமவெளிக்கு கர்நாடக சமவெளி யென்று பெயர். இது மேற்கேயுள்ள சமவெளியைவிட விசாலமானது. இது வடக்கே குறுகி தெற்கே அகன்றிருக்கிறது. தெற்கே இதன் அகலம் சுமார் 150 மைல். மேற்கே யுள்ள சமவெளிக்கு கோங்கணம் என்று பெயர். இது மிகவும் குறுகலானது. இதன் அகலம் சுமார் 50 மைல்.

2. மலைகள்.

சமவெளியைவிட தரையானது வரவர உயர்ந்து மேடாயிருந்தால் அதற்கு குன்று என்று பெயர். குன்றைக்காட்டிலும் அதிக உயரமாயும் ஏறுவதற்கு அதிக கஷ்டமாயுமிருந்தால் அதற்கு மலை என்று பெயர். மலைகள் எப்படி உண்டாகின்றன? பூமியின் சில பாகங்கள் கெட்டியாயும் வேறு சில பாகங்கள் மிருதுவாயு மிருக்கின்றன. இவ்வித மிருதுவான

பாகம் குளிர்ச்சியினால் இறுகினால் பக்கத்திலுள்ள நிலபாகத்தைவிடத் தாழ்ந்து விடுகிறது. மிருதுவானபாகம் தாழத்தாழ கெட்டியான பாகம் உயரத்தில் அதிகரிக்கிறது. இவ்வாறு உயரும் நிலபாகமே மலையெனப்படும். ஒரு மலை யுண்டாவதற்கு அநேகாயிர வருஷங்கள் செல்லும். இம் மலைகள் வரிசையாய்த் தொடர்ந்திருந்தால் தொடர்மலை யென்றுபெயர்.

மலைகளினால் ஏற்படும் அநுகூலங்கள் மூன்று:

1. சீதோஷ்ண ஸ்திதியைப் பற்றினவை.
2. ராஜாங்கத்திற்கு அநுகூலமானவை.
3. விளைபொருள் வியாபாரத்தைப் பற்றினவை.

1. உயரமான மலைகள் காற்றினால் அடித்துக்கொண்டு வரப்பட்ட மேகத்தைத் தடுத்து, மலையைச் சுற்றியுள்ள நாடுகளில் மழையைப் பெய்விக்கிறது. மழை பெய்வதால் உஷ்ணம் அதிகமா யிருந்தால் அது தணிந்துவிடும். மலைகளின்மேல் எப்போதும் குளிர்ச்சியா யிருப்பதால் வெய்யிற் காலங்களில் நமது நாட்டிலுள்ள தனிகர்களும், ஐரோப்பியர்களும் மலைப்பிரதேசங்களிலுள்ள நகரங்களில் போய்த் தங்குகிறார்கள். இதனாலேதான் மலைகளினால் சீதோஷ்ணஸ்திதிக்கு அநுகூலம் உண்டென்று சொன்னோம்.

2. இயற்கையான ஒரு சுவர்போல் இருப்பதால் அன்னியர்கள் படையெடுத்து வராமல் தேச பாதுகாப்பா யிருக்கிறது. இதுவே ராஜாங்கத்துக்கு அநுகூலம்.

3. மலைகளில் விலையுயர்ந்த பெரிய மரங்களும், மூலிகைகளும், சாயவேர் முதலியவைகளும் உண்டாகின்றன. சில மலைகளில் ஏராளமான தாது வர்க்கங்கள் கிடைக்கின்றன. ஜனங்கள் மலைகளில் கனிகளைக் கண்டுபிடித்து அதிலுள்ள உலோகங்களை வெட்டி யெடுத்து தங்கள் நாட்டில் செல்வ

விருத்தியுண்டாக்கி இதர நாடுகளுடன் வியாபாரம் செய்து மேன்மைப்படுகிறார்கள். இதுவே மலைகளினால் விளைபொருள் வியாபாரத்தைப்பற்றிய அநுகூலம்.

முதலிலுள்ள படத்தைப் பாருங்கள். நமது இராஜதானியில் இரண்டு மலைத்தொடர்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று கிழக்கேயும் மற்றொன்று மேற்கேயும் வியாபித்திருப்பதால், கிழக்கே யுள்ளதற்கு கிழக்குத் தொடர்ச்சி யென்றும், மேற்கே யுள்ளதற்குமேற்குத்தொடர்ச்சி யென்றும் பெயர்கள் வந்தன. இவற்றுள் மேற்குத்தொடர்ச்சி மலை இடை வெளிகள் இல்லாமல், ஒரு சுவர் வைத்ததுபோல் மேற்குக் கடற்கரையோரமாய் வியாபித்திருக்கிறது.

இது வடக்கே பம்பாய் இராஜதானியில் தொடங்கி தெற்கே கன்னியா குமரியில் முடிகிறது. இது ஆயிரம் மைல் நீளமுள்ளதென்றாலும் நமது இராஜதானியில் ஏறக்குறைய அதில் பாதி நீளந் தானுள்ளது.

இதற்கும் மேற்குஸமுத்திரத்திற்கும் இடையிலுள்ள சமவெளி மிகவும் குறுகலானது. இதன் உயரம் சராசரி 3000 அடி. சென்னை இராஜதானியில் ஓடும் பெரிய நதிகளுக்கெல்லாம் இது பிறப்பிடமா யிருக்கிறது. இது கிழக்குத்தொடர்ச்சியை விட உயரமானது. இதுவும் கிழக்குத் தொடரும் நீலகிரி மலையில் ஒன்றாய்ச்சேருகின்றன. நீலகிரியின் உன்னதமான சிகரம் 8760 அடி உயரமுள்ளது. இதற்குதொட்ட பெட்டா என்று பெயர். இந்நீலகிரி மலைக்குத் தெற்கில் ஒரு *கணவா யிருக்கிறது. இதை பாலக்காட்டுக் கணவாய் என்பார்கள்.

இக்கணவாயின் உயரம் சமுத்திர மட்டத்திற்குமேல் 1000 அடி. இதன் அகலம் சுமார் 25 மைல். கர்நாடக சம

---

* இரண்டு மலைகளுக்கு நடுவிலிருக்கும் வழி.

வெளியிலிருந்து கொங்கணத்திற்கு இக்கணவாயின் வழியாய்த்தான் போக்கு வருத்து நடக்கிறது. சென்னப்பட்டணத்திலிருந்து மங்களூருக்குப் போகும் இருப்புப்பாதை இவ்வழியாய்ப் போடப்பட்டிருக்கிறது. பொன்னானி என்னும் ஆறு இக்கணவாயின் வழியாய் ஓடுகிறது. மேலேசொன்ன படத்தைப் பாருங்கள். மேற்குத் தொடரில் இங்கேதான் இடைவெளி. இவ்விடைவெளி யிருப்பதால் காற்றானது மேற்குக் கரை நாட்டிலிருந்து மழை பொழியக்கூடிய மேகங்களை மேற்குமலைத் தொடருக்குக் கிழக்கே கர்நாடக சமவெளியிலுள்ள சில ஜில்லாக்களுக்குக் கொண்டு வருகிறது.

இக்கணவாய்க்குத் தெற்கே இத்தொடருக்கு ஆனைமலை யென்று பெயர். இவ்வானை மலையின் உன்னதமான சிகரம் ஆனைமுடி. இதன் உயரம் 8840 அடி. இதுவே தென்னிந்தியாவிலுள்ள சிகரங்களில் உயரமானது. இம்மலைத்தொடரில் திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் இரண்டு இடங்களில் இடுக்கு வழிகள் இருக்கின்றன. அவ்வழியினால்தான் திருநெல்வேலியிலிருந்து திருவாங்கூர் ராஜ்ஜியத்திற்கு போக்குவருத்து நடக்கிறது. இவ்வழிகளில் ஒன்றின் வழியாய் திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் மேற்குக் கடற்கரையிலுள்ள கொல்லம் வரையில் தென்னிந்தியா இருப்புப்பாதை போகிறது. இத்தொடரின் கோடியிலுள்ள மலைக்கு அகஸ்தியமலை என்று பெயர்.

கிழக்குத் தொடர்ச்சி மலை வடகிழக்கே ஒரிஸ்ஸா நாட்டில் தொடங்கி, முதலில் சற்றேறக்குறைய மேற்காய் வியாபித்து, பிறகு தென்மேற்காய் நீலகிரி வரையில் சென்று, அங்கு மேற்குத்தொடருடன் சேருகிறது. இத்தொடர்ச்சிமலை இடையிடையே விட்டுவிட்டிருப்பதால் அதற்கு ஒவ்வொரு

இடத்தில் ஒவ்வொரு பெயருண்டு. இத்தொடர்மலை யில் இடைவெளிகள் உண்டாக்கி தனித்தனிமலைகளா ய்ப்பிரித்தது மேற்கேயிருந்து கிழக்குநோக்கி ஓடிவரும் நதி களே. இத்தொடரின் சராசரி உயரம்1500-அடி. முதலிலுள்ள படத்தைப்பார்த்து இத்தொடரின் பிரிவுகளாகியநகரிமலை, ஜவ்வாதுமலை, சேர்வராயன்மலை ஆகிய இவைகள் எந்தெந்த ஜில்லாக்களில் இருக்கின்றனவென்று தெரிந்துகொள்ளுங்கள்.

3. பீடபூமி.

மேலே சொன்ன இரண்டு மலைத்தொடர்களுக்கும் இடை யிலுள்ள பூமியை 30-வது பக்கத்திலுள்ள படத்தில் கவனி யுங்கள். அது சமுத்திர மட்டத்திற்குமேல் சுமார் 1000 அடி முதல் 3000 அடிவரையில் உயர்ந்திருக்கிறது. இரண்டு மலை களுக்கு நடுவிலிருக்கும் பள்ள பூமிக்கு பள்ளத்தாக்கு என்று பெயர். சமுத்திரமட்டத்தைவிட உயர்ந்த மேட்டு பூமிக்கு பீடபூமி என்று பெயர். நமதுஇராஜதானியிலுள்ள பீடபூமிக்கு தக்ஷிண பீடபூமி என்று பெயர். இது மேற்கிலிருந்து கிழக்கே வரவர சரிவாயிருக்கிறது. இப்பீடபூமிக்குத் தெற்கேயுள்ளது மைசூர் இராஜ்ஜியம். இவ்விராஜ்ஜியத்தில் அநேக குன்றுகள் உண்டு. அவற்றிற்கு துர்க்கங்கள் என்று பெயர்.

4. ஆறுகள்.

மழை:—நமது தேசத்திலுள்ள ஜனங்கள் ஜீவிக்க ஆதா ரமாயிருப்பது மழையே. ஏனெனில் மழை பெய்யாவிட்டால் தானியம் முதலியன பயிர் செய்ய தண்ணீர் கிடையாது.

[குறிப்பு:—உபாத்தியாயர் வகுப்பின் ஒரு மூலையில் களிமண் ணினாலாவது மணலினாலாவது சென்னை இராஜதானியைப்போல் உருவம் அமைத்து அதில் குன்றுகள் மலைகள் முதலியவற்றை, அவ்வவற்றின் உயரத்திற்குத் தக்கபடி பிள்ளைகளைக் கொண்டு அமைக்கச்செய்து ஒன்றிற்கொன்று உள்ள வித்தியாஸங்களை கவ னிக்கச் செய்க.]

பயிரிடப்படும் பண்டங்களே விசேஷமாய் நமது நாட்டு ஜனங் களுக்கு ஆகாரமா யிருப்பதால் மழையில்லாவிட்டால் ஜனங் கள் ஜீவித்திருப்பது அரிது. கோடைகாலத்தில் மழை அதிக மாய்ப் பெய்வதால் காற்றின் உஷ்ணத்தைமாற்றி ஜனங்க ளுக்கு சௌக்கியத்தை உண்டாக்கும். அதே காலத்தில் மழை சொற்பமாய்ப் பெய்தால் அவ்வுஷ்ணம் தணிக்கப்படா மல் விஷபேதி, ஜ்வரம் முதலான வியாதிகளை உண்டாக்கும். நமக்கு ஜலாதாரமான ஏரி, குளம், ஆறு, கிணறு முதலிய நீர் நிலைகளைத் தண்ணீரால் நிரப்பும்.

பிள்ளைகளே ! மழை பெய்வதை நீங்கள் பார்த்திருப்பீர் கள். மழை எப்படி உண்டாகிறது? சாதாரணமாய் ஆகாயத் தின் நிறம் பார்வைக்கு எவ்வளவு அழகா யிருக்கிறது! சில வேளைகளில் ஆகாயம் மங்கலாயும்கறுத்து மிருக்கிறது. அழகா யிருக்கும்போது வானம் நிர்மலமா யிருக்கிறதென்றும், கறுத் திருக்கும்போது மேகம் மூடிக்கொண்டிருக்கிற தென்றும் சொல்லுகிறோம். அந்த மேகம் கனத்தால் மழை பெய்யும். மழை மேகத்திலிருந்தே பெய்கிறது. அம்மேகங்கள் ஆகாயத் தில் சஞ்சரிக்கின்றன. மேகம் என்றால் என்ன ? அது எப்படி உண்டாகிறது? அது ஆகாயத்தில் எப்படி போய்ச்சேருகிறது? அம்மேகம் எவ்வாறு மழையாகப் பெய்கிறது ?

ஒரு துணியை நனைத்து வெயிலில் போட்டு சற்றுநேரத் திற்குப் பிறகு எடுத்துப் பார்த்தால் அதிலிருந்த ஈரம் போய் விடுகிறது. ஒருகிண்ணத்தில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி வெயிலில் வைத்தால் சற்று நேரத்திற்குள் கிண்ணத்தி லிரு

ந்த தண்ணீர் காணுமல் போகிறது. துணியிலிருந்த ஜலமும் கிண்ணத்திலிருந்த தண்ணீரும் எங்கேபோயின? அவை



கண்ணிற்குத் தெரியாமல் காற்றுடன் கலந்துவிடுகின்றன. ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைத்துக் காய்ச்சினுல் அதி லுள்ள ஜலம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து போகிறது இவ்வாறு குறைந்த ஜலம் ஆவியாகி காற்றுடன் கலந்து விடு கின்றது.

மேலேயுள்ள சித்திரத்தைப் பாருங்கள். அதில் முக் காலியில் நீண்டவாயுள்ள ஒரு கண்ணுடிப் பாத்திரம் பொருத் தப்பட்டிருக்கிறது. அப்பாத்திரத்தில் ஒருதுவாரம் அடைப்பா னுல் (கார்க்கினுல்) மூடப்பட்டிருக்கும். இத்துவாரத்தின் வழியாய் அப்பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, துவாரத்தை அடைப்பானுல் மூடி, கீழுள்ள விளக்கை ஏற்றிவிட்டால், அவ் விளக்கு எரியும்போது அப்பாத்திரத்திலுள்ள தண்ணீர் உஷ் ணத்தினுல் ஆவியாகமாறி, அந்த ஆவி புகைரூபமாய் நீண்ட

வாயின் வழியாய் வெளியே வருகிறது. அதுவே நீராவி. அந்நீராவி வெளியில் வந்தவுடன் அதன்மேல் குளிர் காற்றுப் பட்டால் அது மறுபடி ஜலமாகமாறி கீழுள்ள கிண்ணத்தில் பொட்டுப் பொட்டாய்ச்சொட்டும். இதுபோலவே சமுத்திரத்தி லுள்ள நீரானது சூரிய வெப்பத்தினால் ஆவியாகமாறுகிறது. அந்நீராவியானது காற்றைவிட இலேசா யிருப்பதால் தண் ணீரில் அழுத்தப்பட்ட சடை (கெட்டி) மேலெழும்புவது போலவும், தண்ணீருக்குள் ஊற்றின எண்ணைமேலே மிதப்பது போலவும் மேலே எழும்புகிறது. அவ்வாறு மேலே எழும்பிக் குளிர்ந்த காற்று பட்டவுடன் மேகமாகி காற்றினால் கொண்டு போகப்படுகிறது. அவ்வாறு ஓடும்போது மலைப் பிரதேசங்கள் எதிர்ப்பட்டால், அம்மலைகளினால் தடுக்கப்பட்டு, அங்குள்ள குளிர்காற்றால் மேகங்கள் ஜலரூபமடைந்து, ஜலம் காற்றைவிட கனமானதால் கீழே மழையாகப் பெய்கிறது. இதுவே மழை பெய்யும் விதம்.

மழை பெய்தவுடன் தரை ஈரமாய்விடுகிறது. மழை ஜலத்தில் கொஞ்சம் பூமிக்குள்சுவரியும், கொஞ்சம் ஆவியா யும்போக மிகுதியான ஜலம் தாழ்ந்த பூமியைநோக்கி ஓடிவிடு கிறது. ஓட ஏதுவில்லாவிட்டால், அதாவது, ஏரி குளம் முதலியவற்றைப்போன்ற பள்ளமான இடங்களில் பெய்யும் மழை, சிறதுகாலம் அங்கேயே தங்கியிருக்கும். இவைகளுக்கு நீர் நிலைகளென்று பெயர். இவ்வித நீர் நிலைகளிலிருந்து ஆறு கள் புறப்பட்டு ஓடுவதுமுண்டு.

கல் பிரதேசங்களில் பெய்யும் மழைஜலம் பூமியில் சுவராது. அத்தண்ணீர் பக்கங்களில் ஓட ஏதுவில்லாவிட்டால், சூரிய உஷ்ணத்தினால் நீராவியாக மாறும் வரையில், அங் கேயே தங்கியிருக்கும். களிமண் தரையில்பெய்யும் மழைஜலம்

பூமிக்குள் சீக்கிரம்சுவராது. மண்ணும் மணலாயும் இருக்கும் பிரதேசங்களில் பெய்யும் மழைஜலம் அதிசீக்கிரம் பூமிக்குள் சுவரிப் போகிறது. இதற்குக் காரண மென்ன வென்றால் மண், மணல் இன்னும் இவைபோன்றவைகளில் அணுக்கள் ஒன்றோடொன்று சேராமல் தனித்தனி இருக்கின்றன. களிமண்ணில் அணுக்கள் ஒன்றோடொன்று சற்றுநெருங்கி யிருக்கின்றன. கற்பாறையிலுள்ள அணுக்கள் ஒன்றோடொன்று இடைவெளியில்லாமல் நெருங்கியிருக்கின்றன.

மழைத்தண்ணீர் பூமிக்குள் சுவரும்போது மண் மணல் முதலான பல பொறைகளைத்தாண்டி பாறைகள் நேர்படும் வரையில் செல்லும். அவ்வாறு எதிர்ப்பட்ட பாறையைத் தாண்டிச் செல்ல சக்தியில்லாமல் அத்தண்ணீர் மேல்நோக்கி வரும். இவைகளே ஊற்றுக்கள். சில இடங்களில் அதிக ஆழம் தோண்டினாலொழிய ஊற்றுக்கள் உண்டாவதில்லை. கிணறுகளிலுண்டாவதும் ஒருவிதமான ஊற்றுத்தான். மலையடிவாரங்களிலுள்ள ஊற்றுக்களிலிருந்து தண்ணீர் பெருகி, அவை ஆறுகளாக ஓடுவதுமுண்டு.

பெரிய மலைகளில் பெய்யும் மழை ஜலம், முதலில் சிறுகால் வாய்களாய் ஓடி, அக்கால்வாய்கள் ஒன்றுசேர்ந்து சிற்றாறாகி, இவ்விதச் சிற்றாறுகள் பல ஒன்றாய்க் கலந்து, பெரிய ஆறுகளாகின்றன. இப்பெரிய ஆறுகள் சிலசமயங்களில் அநேககிளைகளாய்ப் பிரிந்துபோவதுமுண்டு. இவ்வாறுகள் புறப்படுமிடத்திற்கு உற்பத்திஸ்தானம் என்றும், ஓடும்வழிக்கு படுகை யென்றும், சமுத்திரத்தில் விழுமிடத்திற்கு முகத்துவாரம் என்றும் பெயர்.

ஆறுகளினால் உண்டாகும் பிரயோஜனங்கள்:—

ஆறுகள் போதுமான அளவு அகலமாயும் ஆழமாயும் இருந்தால், பெரிய படகுகளில் ஜனங்கள், சாமான்கள் முதலியவை

களை ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு கொண்டுபோகக் கூடும். கடல்களில் வந்துநிற்கும் கப்பல்களிலிருந்து சாமான்களை உள் நாடுகளுக்கும், உள்நாட்டுச் சரக்குகளை கப்பல்களுக்கும் கொண்டுபோக ஸாதகமா யிருக்கிறது.

2. ஆறுகளில் ஜலம் எப்போதும் ஓடிக்கொண்டிருந்தால், அதாவது ஜீவநதியா யிருந்தால், அதன் தண்ணீர் ஓடும் வேகத்தால் பெரிய இயந்திரங்களைவேலை செய்விக்கலாம்.

3. நதிகளின் ஜலத்தை சாகுபடி செய்வதற்கும்,ஸ்நான பானாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

4. ஓர் ஊருக்கும் மற்றொரு ஊருக்கும்எல்லையாயிருக்கிறது.

5. பெரிய ஆறுகள் சிறிய ஊர்களில் கொஞ்சகாலத்தில் அவை அடித்துக்கொண்டுவரும் வண்டல் மண்ணைச் சேர்ப்பித்து, பெரியபட்டணங்களாக்கி விடுகின்றன.

6. சில நதிகள் ஏரிகளுக்கு தண்ணீர்வருத்து உண்டாக்குகின்றன. அதாவது நதிகளின் ஜலத்தை அணைகட்டித் திருப்பி ஏரிகளை நிரப்பிக்கொள்ளுகிறார்கள்.

முதல் படத்தைப்பார்த்து சென்னை இராஜதானியில் ஓடும் பெரிய நதிகள் எவை ?அவைகள் எங்கே உற்பத்தியாகின்றன ? எந்ததிசையை நோக்கி ஓடுகின்றன ? ஏன் அத்திசையை நோக்கி ஓடவேண்டும் ? எந்தக்கடலில் சங்கமமாகின்றன ? என்று தெரிந்து கொள்ளவும்.

மேலே படத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளச் சொன்ன பெரிய நதிகளைத் தவிர சில சிறு ஆறுகள் கிழக்குத் தொடர்ச்சி மலையிலும், சில மைசூர் பீடபூமியிலுள்ள துர்க்கங்கள் என்ற குன்றுகளிலும் உற்பத்தியாகி, கிழக்குமுகமாகச் சென்று சமுத்திரத்தில் விழுகின்றன.

1. கோதாவரி நதி:—இது பம்பாய் இராஜதானியில் நாஸிக் என்னும் பட்டணத்திற்கு சமீபத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, முதலில் கிழக்குமுகமாய் ஐதராபாத்தின் மூலமாயும், பிறகு ஐதராபாத்திற்கும் (நிஜாம் இராஜ்யம்) மத்திய மாகாணத்திற்கும் நடுவில் தென் கிழக்காய் ஓடி, அதன் பிறகு கிழக்குத்தொடர்ச்சி மலையைப்பிளந்துகொண்டு சென்னை இராஜதானியின் சமவெளியில் பிரவேசிக்கிறது. இந்நதி இராஜ மஹேந்திர வரத்திற்குத் தெற்கே சுமார் நாலுமைல் தூரத்தில் இரண்டு கிளையாய்ப் பிரிகிறது. இது பிரியு மிடத்தில் இருக்கும் பட்டணத்திற்கு தவளேசுவரம் என்று பெயர். இங்கு இந்நதியில் ஒரு அணைகட்டி ஜலத்தைக் கால்வாய்களில் திருப்பிப்பாய்ச்சலுக்கு உபயோகிக்கிறார்கள். இக்கிளை நதிகளுக்கு கௌதம கோதாவரி என்றும் வசிஷ்ட கோதாவரி என்றும் பெயர்கள். இக்கிளைகளின் நடுவில் இருக்கும் பூமி மிகவும் செழிப்புள்ளது. இவற்றிற்கு லங்கைத்தீவுகள் என்று பெயர். இவற்றில் விசேஷமாய் நெல்லும், புகையிலையும் பயிரிடுகிறார்கள். இங்கு விளையும் புகையிலை மிகவும் பெயர் பெற்றது. இந்த நதியில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு (ஆனி, ஆடி) மாதங்களில் வெள்ளம் வருமென்றாலும் சாதாரணமாய் ஜூன் முதல் மார்ச்சுவரையில் தண்ணீர் அதிகமா யிருக்கும். அக்காலங்களில் சிறிய கப்பல்கள் படகுகள் முதலியன இதில் நடமாடிக்கொண்டிருக்கும். இது 900 மைல் தூரம் ஓடி வங்காளக் குடாக்கடலில் விழுகிறது. இதற்கு நான்கு உபநதிகள் உண்டு. அவற்றுள் இந்திராவதியும், ப்ரான்ஹிதாவும் முக்கியமானவைகள்.

2. கிருஷ்ணாநதி:— இந்நதியும் மேற்குத்தொடர்ச்சி மலையில் மஹாபலேசுவரம் என்னு மிடத்தில் உற்பத்தியாகி, தென்கிழக்காய் ஐதராபாத்துக்கும் சென்னை இராஜதானிக்

கும் நடுவாக ஓடி, கிழக்குத் தொடர்ச்சி மலையைத் துளைத்துக் கொண்டு சமவெளியில் பிரவேசிக்கிறது. இந்நதி சென்னை இராஜதானியின் சமவெளியில் பிரவேசிக்கும்வரையில் அதிக ஆழத்தில் ஓடுவதால், அதாவது பக்கத்திலுள்ள பூமி மிகவும் மேடாயிருப்பதால், இது சென்னை இராஜதானியின் சமவெளியைத் தவிர மற்ற இடங்களில் பாய்ச்சலுக்கு உபயோகப் படுகிற தில்லை. இது கோதாவரியைவிட அதிவேகமாய் ஓடுவதால் படகுகள்கூட விசேஷமாய் அதிகதூரம் இதில் நடமாட சாத்தியமில்லை. இந்நதிக்கு பெஜவாடாவில் அணைகட்டி கால்வாய்கள் மூலமாய் ஜலத்தைத் திருப்பி யிருக்கிறார்கள். இந்த பெஜவாடா என்னும் பட்டணம் சில வருஷங்களுக்கு முன் ஒரு சிறு கிராமமா யிருந்தது. கிருஷ்ணாநதி வருஷாவருஷம் மண்ணை அடித்துக்கொண்டு வந்து சேர்த்ததால் இப்போது இது ஒரு பெரிய பட்டண மாயிற்று. கிருஷ்ணா, கோதாவரி, * டெல்டாக்களுக்கு நடுவில் முப்பதுமைல் தூரம் ஒரு கால்வாய் வெட்டி இரண்டு படுகைகளுக்கும் போக்குவரத்து உண்டாக்கி இருக்கிறார்கள். இந்நதி 800 மைல் நீளம் ஓடி அநேக கிளைகளாய்ப்பிரிந்து வங்காளக்குடாக்கடலில் விழுகிறது. இதற்குத் துங்கபத்திரை, பீமா என்று இரண்டு முக்கிய உபநதிக ளிருக்கின்றன.

(3) காவேரிநதி:—இதுவும் மேற்குத்தொடர்ச்சி மலையின்கிழக்குப்பக்கத்தில், குடகுநாட்டில் தலைக்காவேரி என்னுமிடத்தில், பிர்ம்மகிரி மலையினுச்சியில் சிறு அருவியாக உண்டாகி, அதற்குக்கீழுள்ள 3 அடி ஆழமும் 30 அடி சதுர

* [பெரிய நதிகளில் அநேகம், கடலில் விழு முன், பல கிளைகளாகப் பிரிந்து விழுகின்றனவென்று சொன்னோம். அவ்வாறு பிரியும் கிளைகளுக்கு இடையிலுள்ள பூமிக்கு டெல்டா என்று பெயர்.]

ளவு உள்ளதுமான, ஒரு குளத்தில் விழுகிறது. இக்குள
த்திலிருந்து வழிந்தோடும் நீரே காவேரி யாற்றின் ஆரம்பம்.
இது முதலில் குடகுநாட்டில் முப்பது மைல்தூரம் ஓடி, அங்கு
கலக்கும் உபநதிகளால்பெரிதாகி, மைசூர்நாட்டின் சமவெளிப்



பிரதேசத்தில் நாற்பதுமைல்தூரம் தென்கிழக்காய் ஓடுகிறது.
இந்நதி மைசூருக்குச் சமீபத்தில் இரண்டாய்ப்பிரிந்து மறு
படியும் ஒன்றாய்ச் சேருகிறது. இப்பிரிவுகளுக்கு நடுவிலிருக்
கும் தீவுக்கு ஸ்ரீரங்கப்பட்டணம் என்று பெயர். இப்பட்ட
ணத்திற்கு அருகில் இந்நதி மேற்கு முகமாய்க் கொஞ்சதூரம்
ஓடி பிறகு கிழக்குமுகமாய்த் திரும்புகிறது. மேற்கு முக
மாய்த் திரும்பும் இடத்தில் இந்த ஆற்றிற்கு பச்சிமவாஹினி

என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்த இடத்தில் ஸ்நானம் செய்தால் ரொம்ப புண்ணிய மென்று ஹிந்துக்கள் அங்கு ஸ்நானஞ் செய்ய திரளாய்ப்போகிறார்கள். இந்நதியில் மைசூர் நாட்டின் மந்திரிகளில் ஒருவர், சுமார் 115 வருஷங்களுக்கு முன், வெல்லெஸ்லி பாலம் என்ற ஒரு அகலமான வாராவதி கட்டி யிருக்கிறார். இந்தநாட்டில் இந்நதியில் பன்னிரெண்டிடங்களில் அணைகட்டி, ஜலத்தைப்பாய்ச்சலுக்கு உபயோகித்து வருகிறார்கள்.

மைசூர்நாட்டை விட்ட பிறகு இந்நதி தெற்காகத் திரும்பி கிழக்குத்தொடர்ச்சி மலையைக் கடந்தோடும் பொழுது, 300 அடி உயரத்தி லிருந்து ஆகாச கங்கையாய் விழுகிறது. இவ்வாறு உயரமான மேட்டுப்பிரதேசத்தி லிருந்து தண்ணீர் பள்ளத்தில் செங்குத்தாய் விழுவதற்கு நீர் வீழ்ச்சி என்று பெயர். இந்நீர் வீழ்ச்சியினருகில் இவ்வாற்றிலிருக்கும் தீவிற்கு சிவ ஸமுத்திரம் என்று பெயர். ஆகையினால் இந்நீர்வீழ்ச்சிக்கும் சிவஸமுத்திர நீர் வீழ்ச்சி என்று பெயர் வந்தது. ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் வெள்ளம் வரும்போது இந்நீர்வீழ்ச்சியைப் பார்த்தால் வெகு அழகாயிருக்கும். இப்பட்டணத்திற்கு அருகில் இவ்வாற்றின் இருகிளைகளையும் கடக்க, பண்டைகாலத்தில் ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. இப்பாலமானது நூற்றுக்கணக்கான தூண்களின் மீது, பாம்பு ஓடுவதுபோல் வளைவாய்க்கட்டப்பட்டு வெகுபலமான தாயிருக்கிறது. மைசூர் இராஜ்ஜியத்தில் திவானாயிருந்த கனம் ஸர். சேஷாத்திரி ஐயர், சிவஸமுத்திர நீர்வீழ்ச்சியில் இயந்திரங்களை ஸ்தாபித்து, அதிலிருந்து மின்சாரத்தை உண்டாக்கி அம்மின்சார சக்தியினால் கோலார் தங்கச் சுரங்கங்களில், (Kolar Gold Fields) அநேக அடி ஆழத்தில் பூமிக்

குள்ளேயே வெகுதூரம் வேலைசெய்ய, வெளிச்சம் உண்டாக்கத்தக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்.



சிவசமுத்திர நீர் வீழ்ச்சி.

இதன்பிறகு இந்நதி சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு எல்லையாய் ஓடி, பிறகு கிழக்குமுகமாய்த் திரும்பி, திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாக்களில் பாய்ந்து, கிழக்கு சமுத்திரத்தில் விழுகிறது. இந்நதியில் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள பவானி என்னுமிடத்தில், நீலகிரி மலையில் உற்பத்தியாகி வரும் பவானி நதி கலக்கிறது. கரூருக்கருகில் ஆனைமலையில் உற்பத்தியாகி வரும் அமராவதி என்னும் நதி இத்துடன் சேருகிறது. ஈரோட்டுக்கருகில் தென்னிந்தியா இருப்புப்பாதை இந்நதியைக்கடக்க, ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

இந்நதி திருச்சிராப்பள்ளிக்கு இரண்டுமைல் தூரத்தில் இரண்டாய்ப்பிரிகிறது. இவற்றின் மத்தியிலுள்ள இடத்திற்கு ஸ்ரீரங்கம் என்று பெயர். இப்பிரிவுகளில் வட பிரிவுக்கு கொள்ளிடம் என்றும், தென் பிரிவுக்குக் காவேரி என்றும் பெயர்கள். காவேரியில் வரும் தண்ணீர் மொத்தமும் பள்ளத்தில் ஓடும் கிளையாகிய கொள்ளிடத்தில் போகாதபடி, இந்நதி பிரியுமிடத்தில் கொள்ளிடத்தில் 7 அடி உயரமும் 800 அடி நீளமுமுள்ள ஒரு அணை கட்டப்பட்டு, உயரத்தில் ஓடும் காவேரியிலும், பள்ளத்தில் ஓடும் கொள்ளிடத்திலும், அவ்வவற்றின் உபயோகத்திற்குத் தகுந்தளவு தண்ணீர் போகும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் இது பாயும் பூமி மேடாயிருப்பதால், இவ்விதமாய் நீரின்மட்டத்தை உயர்த்தாவிட்டால் பாய்ச்சலுக்கு அநுகூலப்படாது. இவ்வணைக்கு மேலணைக்கட்டு என்று பெயர். இதை சுமார் எண்பது வருஷங்களுக்கு முன், ஸர் ஆர்தர் காட்டன் என்பவர் மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்து கட்டிவைத்தார். இதினின்று அநேக கால்வாய்கள் பிரிந்து, தஞ்சாவூர் ஜில்லா முழுவதும் பாய்கிறது.

வெகு காலத்திற்கு முன் ஸ்ரீரங்கம் தீவின் கீழ்க்கோடியில், கல்லணை என்ற ஒரு பெரிய அணை காவேரியில் கட்டியிருக்கிறார்கள். வெள்ளம் வரும் காலத்தில் தண்ணீர் அதிகமாய் வந்தால், மேட்டுப்பிரதேசத்தில் பாயவேண்டியது போக, மிகுந்த தண்ணீரைப்பகிர்ந்து, தாழ்ந்தபிரதேசத்தில் ஓடும் கொள்ளிடத்தில் விழும்படி, இவ்வணை கட்டப்பட்டிருக்கிறது. இவ்வித ஏற்பாடு இங்கு செய்திராவிட்டால் வெள்ளத்தினால் தஞ்சாவூர் ஜில்லா முழுவதும் கஷ்டத்திற்குள்ளாகும். சென்னை இராஜதானியில் ஓடும் ஆறுகளில் சாகுபடிக்கு அதிகமாய் உபயோகப்படுகிறது இந்நதியே. இதி

ணல் ஏழு லட்சம் ஏகர் பூமி சாகுபடி செய்யப்படுகிறது. இந்த நாட்டை ஆண்ட சோழராஜாக்கள் இதிலிருந்து வெண்ணுறு, வெட்டாறு, அரசலாறு முதலான அநேக பெரிய கால்வாய்களை வெட்டி வெகுதூரம் சாகுபடிக்கு உபயோகப்படும்படி செய்திருக்கிறார்கள். 43-வது பக்கத்திலுள்ள சித்திரத்தில் இவ்வாற்றிலிருந்து வெட்டப்பட்டிருக்கும் கால்வாய்களை கவனியுங்கள்.

மேலும் இந்நதிப் பாய்ச்சலிலுள்ள பூமி வெகுகாலமாய் இவ்வாற்றில் அடித்துக்கொண்டு வரப்பட்ட சாரமான வண்டல் மண் படிந்து மிகவும் செழிப்பா ருக்கிறது. ஆகையால் இங்கு தென்னை, வாழை, நெல் முதலியவை நன்றாய்ப் பயிருகின்றன. இதனாலேதான் மேலே சொன்ன இரண்டு ஜில்லாக்களையும் தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று சொல்லுகிறார்கள். இந்நதியை இந்துக்கள் தக்ஷிணகங்கை என்று கொண்டாடுவதுடன், அற்பிசிமாதத்தில் கங்கை இதில் வருவதாகவும், அம்மாதத்தில் இவ்வாற்றில் மாயவரத்தில் ஸ்நானஞ் செய்தால், விசேஷ புண்ணியமென்றும் மதித்திருக்கிறார்கள்.

(4). வடபெண்ணை:—இது மைசூர் நாட்டில் சந்திரதுர்க்கத்தில் உண்டாகி, முதலில் வடக்கு முகமாய் ஓடி, அங்குள்ள மலைகளால் தடுக்கப்பட்டு கிழக்கே திரும்பி, கிழக்குத் தொடர்ச்சி மலையின் இடுக்கு வழியாய் நெல்லூர் ஜில்லாவில் பிரவேசித்து, பிறகு கடலில் விழுகிறது. இது பிநாகம் என்னும் சிவனுடையவில்லைப்போல் வளைந்து ஓடுவதால், இதற்கு மைசூர் இராஜ்ஜியத்தில் உத்தர பிநாகினி என்று பெயரிட்டிருக்கிறார்கள். இதில் இரண்டு அணைகள் கட்டியிருக்கிறார்கள். இதன் நீளம் 355 மைல்.

(5) பாலாறு:—இதுவும் மைசூர் பீடபூமியில் உற்பத்தியாகி, தென்கிழக்குமுகமாய் 230 மைல்தூரம் ஓடி, சதுரங்கப் பட்டணத்திற்குசமீபத்தில் கடலில் கலக்கிறது. இந்த ஆற்றில் வருஷத்தில் வெள்ளம் வரும் சில நாட்கள் தவிர மற்ற காலங்களில் தண்ணீர் இருக்காது.

(6). தென் பெண்ணை:—இந்நதிக்கு தக்ஷிணபினாகினி என்று மறு பெயருண்டு. அது மைசூரில் நந்தி துர்க்கத்தில் உற்பத்தியாகி, தென் கிழக்காய் ஓடி, கூடலூருக்குச் சமீபத்தில் சமுத்திரத்தில் விழுகிறது. இதன் நீளம் 255 மைல்.

வடபெண்ணை, தென் பெண்ணை, பாலாறு இம்மூன்று நதிகளிலும் வெய்யிற் காலத்தில் தண்ணீர் இராது. ஊற்றுக்கள் தோண்டி அதன் மூலமாய் புலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவார்கள்.

(7). வைகை:—மேற்குத் தொடர்ச்சி மலையின் பிரிவாகிய திருவாங்கூர் மலையில் உற்பத்தியாகி, கிழக்கு முகமாய் ஓடி மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் பாய்ந்து கடலில் விழுகின்றது. மேற்குத்தொடர்ச்சிமலையில் உண்டாகி மேற்கே ஓடிக்கொண்டிருந்த, பெரியாற்றில் அணைகட்டி அதன் ஜலத்தைத் திருப்பி இந்நதியில் விழும்படி ராஜாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

(8). தாம்பிரவர்ணி:—இதுவும் மேற்குத் தொடர்ச்சி மலையின் கோடியிலுள்ள அகஸ்திய மலையில் உண்டாகி, கிழக்கு முகமாய் திருநெல்வேலி ஜில்லா மூலமாய் ஓடி கடலில் விழுகின்றது. இந்நதி செம்மண் பூமியில் ஓடுவதால் இதன் ஜலம் சிவப்பாயிருக்கும். இந்நதி குற்றாலம், பாபவினாசம் என்னும் இரண்டு இடங்களில் ஆகாசகங்கையாய் விழுகிறது. குற்றாலம் அருவியில்ஸ்நானம் செய்வதற்காக கோடைகாலத்தில் அநேகர் போகிறார்கள்.

9. மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குப்பாரிசத்தில் உற்பத்தியாகி, கொங்கண சமவெளி வழியாய் ஓடி அரபிக்கடலில் விழும் ஆறுகளில் முக்கியமானவை நேத்திராவதி, பொன்னானி, பெரியாறு. இவற்றுள் நேத்திராவதி தென் கன்னடம் ஜில்லா மூலமாயும், பொன்னானி மலையாள ஜில்லாவிற்கும், கொச்சிக்கும் மத்தியாயும், பெரியாறு திருவாங்கூர் ராஜ்ஜியத்தின்மூலமாயும் ஓடி அரபிக்கடலில் விழுகின்றன. இவை கடலில் விழுமுன் கடற்கரையின் அருகிலுள்ள கழிகளுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பெரியாற்றின் ஜலத்தை அணைகட்டித்திருப்பி, மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களில் ஓடும் வைகையின் உபநதியாகிய சுருளியாற்றில் விட்டிருக்கிறார்கள்.

மேற்குத் தொடர்ச்சிமலைக்கு மேற்கேயும், கிழக்கேயும் சமவெளிகள் இருக்கின்றன வென்று படித்திருக்கிறீர்களல்லவா! இவற்றில் சிறியது எது? மேற்குத்தொடர்ச்சி மலைக்கு சமீபத்திலுள்ள கடல் எது? அது மேற்கேயுள்ளதா அல்லது கிழக்கே யுள்ளதா? மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் ஆறுகள் சில மேற்கிலும் பல கிழக்கிலும் ஓடி கடலில் விழுகின்றன. இவற்றுள் எப்புறத்தில் ஓடுபவை நீண்டவை? எப்பக்கத்தில் ஓடுகின்ற நதிகள் சிறியவை? இவற்றிற்குக்காரணம் என்ன?

சமவெளிகளில் சிறியது மேற்கேயுள்ள கொங்கணசமவெளி. இது அரபிக்கடலை அடுத்திருக்கிறது. மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் ஆறுகளில் சில மேற்கிலும் பல கிழக்கிலும் ஓடி கடலில் விழுகின்றன வென்று படித்தோம். இவற்றுள் கிழக்கில் ஓடும் நதிகள் நீண்டவை. ஏனென்றால் அவைகளின் உற்பத்திஸ்தானங்கள்ஸங்கமமாகும் இடத்திற்கு வெகுதூரத்தி லிருக்கின்றன. இந்நதிகள் கடலில் விழுவதற்கு

முன் வெகுதூரம் போகவேண்டி யிருப்பதால், இவைகள் அதிக வேகமில்லாமல் மெதுவாய் ஓடுகின்றன. ஆகையினாலே தான் இந்நதிகள் சென்னை இராஜதானியின் கிழக்குக்கரையையடுத்த சமவெளிகளை செழிப்புள்ளவைகளாக்கி, அப்பிரதேசத்தில் நல்ல விளைவுண்டாக்குகின்றன. மேற்கேயோடும் ஆறுகள் சிறியவைகளாயும், வேகமாய் ஓடுபவைகளாயும் இருக்கின்றன. ஏனென்றால் இவைகளின் உற்பத்திஸ்தானங்கள் ஸங்கமமாகும் அரபிக்கடலுக்கு அதிக ஸமீபமாயிருக்கின்றன. இவ்வாறுகள் வெகு வேகமாய் ஓடுவதால் இவைகள் பிரவகிக்கும் மேற்குக்கரைநாடுகள் இவைகளால் அதிக பிரயோஜனம் அடைகிறதில்லை.

5. ஏரிகள்.

முதல் படத்தை உற்றுப்பாருங்கள். அதில் சில இடங்களில் பூமியின் நடுவில் தண்ணீர் தங்கியிருப்பதாகத் தெரியவரும். அவ்வாறு தங்கியிருக்கும் நீர் நிலைகளுக்கு ஏரிகள் என்று பெயர். நமது இராஜதானியிலுள்ள ஏரிகளில் மிகப் பெரியவை மூன்று. அவைளில் இரண்டு சமுத்திரத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால் அவைகளின் ஜலம் உப்பாயிருக்கும். ஆகையால் அவைகள் சாகுபடிக்கு உபயோகப்படுகிறதில்லை. இவற்றை வாஸ்தவத்தில் ஏரியென்று சொல்வது தகுதியன்று. இவ்வேரிகளில் ஒன்று சென்னப்பட்டணத்திற்கு வடக்கேயுள்ள பழவேற்காட்டேரி. மற்றொன்று இவ்விராஜதானியின்

குறிப்பு:—நாலாவது அப்பியாசத்தில் செய்யச் சொல்லியிருக்கும் களிமண்ணால் செய்த படத்தில், பின்னைகளைக் கொண்டு ஆறுகளை புறப்படுமிடத்தில் மெல்லியதாகவும், பிறகு வரவர அகலமாகவும் பள்ளமான கோடுகள் உண்டாக்கச்செய்யவும். உபநதிகள், கிளைநதிகள், முகத்துவாரம் முதலியனவற்றையும் அதில் காண்பிக்கச் செய்யவும்.

வடகிழக்குக்கோடியில் ஒரிஸ்ஸா நாட்டிலிருக்கும் சிலுகா ஏரி. இன்னொன்று கோதாவரி, கிருஷ்ணா இவ்விரண்டு * படுகைகளுக்கும் நடுவிலிருக்கும் கொல்லேரு ஏரி. இவ்வேரியில் கோதாவரி, கிருஷ்ணாநதிகளிலிருந்து கால்வாய்கள் வெட்டி ஜலத்தைத் தேக்கியிருக்கிறார்கள். இதனால் விசேஷமான பூமி சாகுபடி செய்யப்படுகிறது. இவைகளைத் தவிர நமது இராஜதானியில் சுமார் 3500 ஏரிகள் இருக்கின்றன. இவற்றுள் செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளும், சித்தூரிலுள்ள வீராணத்தேரியும், கர்னூலிலுள்ள கம்பம் ஏரியும் பெரியவை. புழலேரியின் ஜலத்தை ஜனங்களின் உபயோகத்திற்காக வடிக்கட்டி, குழாயின் மூலமாய் சென்னப் பட்டணத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவ்விதமான ஏற்பாடுகள் ஆறுகளிலிருந்தும் சில பெரிய பட்டணங்களில் செய்திருக்கிறார்கள்.

6. இயற்கையான பிரிவுகள் :—

முதலிலுள்ள படத்தைப் பார்த்து இவ்விராஜதானி இயற்கையாய் எத்தனை பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளவும்.

(1) வடகிழக்கு மலைநாட்டுப் பிரதேசம் .—இதை ஏஜென்ஸி டிராக்ட்ஸ் என்று சொல்வதுண்டு. இது சென்னை இராஜதானியில் வடகிழக்கே யிருக்கிறது.

(2) கிழக்குக் கரையின் வடக்கு பிரதேசம் :—இது மேலே சொன்ன மலைநாட்டிற்கும் வங்காளக் குடாக் கடலுக்கும் மத்தியில் ஏறக்குறைய கிழக்கு மேற்காய் வியாபித்திருக்கிறது.

* குறிப்பு:—ஆற்றுப்படுகை அதாவது ஆறுபாயும் பூமி என்பதை உபாத்தியாயர் கரும்பலகையில் படம் எழுதியாவது, அல்லது வகுப்பறையில் களிமண்ணினால் அமைத்தாவது பிள்ளைகளுக்கு விளக்கிக்காட்ட வேண்டும்.

(3) கிழக்குக் கரையின் தெற்குப் பிரதேசம்:—இது வங்காளக் குடாக் கடலோரமாய்த் தெற்கு வடக்காய் வியாபித்திருக்கிறது.

(4) மத்தியப் பிரதேசம்:—இது கிழக்குக் கரையின் தெற்கு பிரதேசத்திற்கும் மலைத் தொடர்களுக்கும் இடையிலுள்ள உள்நாட்டு பூமி. கிழக்குக் கரையின் தெற்கு பிரதேசமும் மத்திய பிரதேசமும் சேர்ந்து கர்நாடக சமவெளியாகிறது.

(5) மேற்குக்கரைப் பிரதேசம்:—இது மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் அரபிக்கடலுக்கும் இடையிலுள்ள பூமி. இதுவே கொங்கண சமவெளி.

(6) இவ்விராஜதானியின் பீட பூமி:—இது கிருஷ்ணா நதிக்குத் தெற்கே மைசூர் ராஜ்யத்திற்கும் கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் நடுவிலுள்ள மேட்டுநிலம்.

6. பருவக் காற்று.

காற்று:—காற்றென்பது பிராணிகளுக்கும் புல் பூண்டு முதலிய வற்றிற்கும் ஜீவாதாரமாயிருக்கும் கண்ணிற்குத் தெரியாத ஒரு வஸ்து. அது எல்லாவிடத்திலும் நிறைந்திருக்கிறது. அவ்வஸ்து அசையாமலிருந்தால் அப்போது அதை ஆகாயமென்றும், அசையும்போது காற்றென்றும் சொல்லுகிறோம். காற்றுக்கு எடையுண்டு. ஒரு புட்டியைத் திராசில் வைத்து நிறுத்து பிறகு வாயுவாங்கி என்னும் கருவியால் அந்தப் புட்டியிலுள்ள காற்றை எடுத்துவிட்டு அந்த புட்டியை நிறுத்தால் முன்னிருந்த எடையைவிடக் குறை

குறிப்பு:—முதலிலுள்ள படத்தைக்காட்டி அதில் மேலே சொன்ன இயற்கையான பிரிவுகளை பிள்ளைகளைக் காட்டச் சொல்லவும்.

யும். அப்படிக் குறைந்தது ஏன்? நாம் அதில் அடைபட்டிருந்த காற்றை எடுத்து விட்டதனால், முன்னே இருந்த எடைக்கும் பின்னே இருக்கும் எடைக்கும் வித்தியாச மேற்பட்டது. காற்றின் குணம் என்னவென்றால் எந்த விடத்தில் அதற்கு பலம் அதிகமோ அந்த இடத்திலிருந்து பலக் குறைவான இடத்தை நோக்கி அடிக்கும். இப்படி பலமான காற்றும் பலக் குறைவான காற்றும் ஒன்றோடொன்று சேர்ந்து சமபலமாகிறவரையில் அடித்துக்கொண்டிருக்கும். காற்றின் பலத்தை உஷ்ணம் மாற்றிவிடும். எப்படியெனில் சூடுண்ட காற்று இலேசாகி மேலே கிளம்பி விடும்.

* நிரட்சரரேகைக்கு வடக்கில் அதாவது சென்னை இராஜதானி முதலான பிரதேசங்கள் இருக்குமிடத்தில் ஏப்பிரல், மே, ஜூன் மாதங்களில் உஷ்ணம் அதிகம். ஆகையால் அந்த இடத்தில் இருக்கும் வாயு உஷ்ணமாகி, வரவர பலத்தில் குறைந்து இலேசாகி, உயரக் கிளம்ப ஆரம்பிக்கின்றது. அதே காலத்தில் நிரட்சர ரேகைக்குத் தெற்கே குளிர்ச்சியா யிருப்பதாலும், அங்குள்ள காற்று பலமா யிருப்பதாலும், பூமத்தியரேகைக்கு வடக்கேயுள்ள காற்று மேலே சொன்னபடி இலேசாகி மேலே கிளம்புவதாலும், தெற்கிலிருந்து காற்று நிலத்தை நோக்கிப் பலமாய் வீசுகிறது. தவிரவும் நிரட்சர ரேகைக்குச் சமீபத்திலுள்ள காற்று அதிவேகமாயடிக்கும். பூமி மேற்கி லிருந்து கிழக்கு முகமாய் சுற்றுவதால், தெற்கிலிருந்து அடிக்கும் காற்று நேர் வடக்காய் அடிக்காமல், சற்று கிழக்கே கொண்டுபோகப் படுகிறது. அப்படி தென் கிழக்கிலிருந்து வீசிக்கொண்டு நிரட்சரரேகைக்

* [சூரிய கிரணங்கள் செங்குத்தாய் விழும் இடங்கள் வழியாய்ச் செல்லும் உத்தேசக் கோட்டிற்கு நிரட்சரரேகை அல்லது பூமத்திய ரேகை என்று பெயர்.]

குச் சமீபத்தில் போகும்போது, அங்குள்ள பலமான காற்று இதை வடகிழக்காய் அடிக்கும்படி செய்கிறது. வடகிழக்காய் அடிக்கும் காற்று அதற்கு நேர் எதிர்ப்புறமான தென் மேற்கிலிருந்தே அடிக்க வேண்டும்.

இதனாலேதான் நமது இராஜதானியில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் அடிக்கும் காற்று தென் மேற்கிலிருந்து வடகிழக்கை நோக்கி அடிக்கிறது. இதற்கு தென்மேற்குப் பருவக் காற்று என்று பெயர். பருவக்காற்று என்றால் குறிப்பிட்ட பருவம் அல்லது காலத்தில் அடிக்கும் காற்று. வாயு உஷ்ணமானால் நீராவியை இழுத்துக் கொள்ளும் குணம் அதற்குண்டு. ஆகையினால் காற்றில் எப்போதும் அநேகமாய் நீராவி இருந்துகொண்டிருக்கும். ஒரு புட்டியில் பனிக்கட்டியை நிரப்பிக் கொஞ்சம் பொறுத்துப் பார்த்தால் அப்புட்டியின்மேல் புறத்தில் பொட்டுப் பொட்டாய் நீர்த்துளிகளிருக்கும். அத்துளிகள் எங்கிருந்து வந்தன? காற்றிலிருக்கும் நீராவி புட்டிக்குள்ளிருக்கும் பனிக்கட்டியால் குளிர்ச்சியடைந்து ஜல ரூபத்தை அடைகிறது. ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பூமி உஷ்ணமாயிருந்தாலும் மலையினுச்சி குளிர்ச்சியாயிருக்கும். இது காரணம்பற்றியே வெய்யிற் காலத்தில் நமது பிரதேசத்திலுள்ள சில ஐரோப்பியர்களும் கனதனவான்களும் குளிர்ச்சிக்காக *நீலகிரி, சேர்வராயன் முதலான மலைகளுக்குப் போய்த் தங்குகிறார்கள்.

தென் மேற்குப் பருவக்காற்று அடிக்கும் போது உயரமான சுவர் வைத்ததுபோலிருக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையினால் தடுக்கப்பட்டு அதன் சிகரத்திலுள்ள குளிர்ச்சி

---

* இம்மலைகள் எங்கிருக்கின்றனவென்று பிள்ளைகளைக் கேட்டு முதலிலுள்ள படத்தைக் கொண்டு போதித்து மேற்படி மலைகளின் மீது குளிர்ச்சியாயிருக்கும் காரணத்தையும் விளக்கிக் காட்டுக.

யினால் அக்காற்றிலுள்ள நீராவி ஜலரூபமடைந்து கொங்கண நாட்டில் மழையாகப் பெய்கிறது. மேலே சொன்ன பாலக்காட்டுக் கணவாயின் வழியாய்த் தப்பி வந்த சொற்ப மேகங்களினால் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பிரதேசத்தில் கொஞ்சம் மழை பெய்கிறது. அதாவது மலைத் தொடருக்கு மேற்கே சுமார் 100 அங்குலமும் கிழக்கே 25 அங்குல



மும் பெய்கிறது. அக்டோபர் மாதம் முதல் நிரட்சரரேகைக்குத் தெற்கில் உஷ்ணம் அதிகம். அதே காலத்தில் மேற்படி ரேகைக்கு வடக்கே குளிர்ச்சியாயிருக்கும். மேலே சொன்னபடி தெற்கேயுள்ள காற்று வெப்பத்தினால்

இலேசாகி மேலே கிளம்ப, வடக்கேயுள்ள பலமான காற்று அந்த இடத்தையடைய தெற்கு நோக்கி வீசுகிறது. பூமி மேற்கிலிருந்து கிழக்கு முகமாய் சுற்றுவதால் இக்காற்று கொஞ்சங் கொஞ்சமாய் பின்தங்கி, வடகிழக்கிலிருந்து தென் மேற்காய் அடிக்கிறது. இதற்கு வடகிழக்குப் பருவக்காற்று என்று பெயர். இது அக்டோபர், நவம்பர் மாதங்களில் நமது இராஜதானியின் கிழக்குக் கரையிலுள்ள ஜில்லாக்களில் மழையைப் பெய்விக்கிறது. ஆனால் மேற்குக் கரையில் பெய் கிறது போல் அவ்வளவு அதிகமாய் இங்கு பெய்கிறதில்லை. ஏனெனில் தென்மேற்குப் பருவக்காற்று சமுத்திரத்திலிரு ந்து நிலத்தை நோக்கி அடிப்பதால் அதிக நீருண்ட மேகத் தைக் கொண்டு வருகிறது. வடகிழக்குப் பருவக்காற்றோ வென்றால் நிலபாகத்திலிருந்து கடலை நோக்கி அடிப்பதால் இது அவ்வளவு நீருண்ட மேகத்தைக் கொண்டு வருவதற்கு ஏதுவில்லை. இதனாலேதான் தென்மேற்குப் பருவக்காற்று அடிக்கும்போது ஏராளமான மழையும், வடகிழக்குப் பருவக் காற்று அடிக்கும்போது சொற்ப மழையும் பெய்கிறது. நமது இராஜதானியில் சில இடங்களில் 30 அங்குலத்திற் குள்பட்டும், வேறு சில இடங்களில் 30 க்கு மேல் 50 அங் குலத்திற்குள்பட்டும், இன்னும் சில இடங்களில் 50க்கு மேல் 100 அங்குலத்திற்குள்பட்டும், மற்றும் சில இடங் களில் 100 அங்குலத்திற்கு மேற்பட்டும் மழை பெய்கிறது. முன்பக்கத்திலுள்ள படத்தைப் பார்த்து எந்தெந்த ஜில்லாக்க ளில் எத்தனை அங்குலம் மழை பெய்கிறதென்று தெரிந்து கொள்ளுங்கள்.

இராஜாங்கத்தார் வருஷமானி என்னும் கருவியால் இத் தனை அங்குலம் மழை இன்னின்ன இடத்தில் பெய்கிற தென்று கணக்கிடுகிறார்கள். இவ்வித வருஷமானியை நீங்

கள் ஒவ்வொரு தாலூக்கா கச்சேரியிலும் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

7. சீதோஷ்ண ஸ்திதி.

சீதோஷ்ண ஸ்திதியாவது இயற்கை குணங்களால் நிச்சயிக்கப்படுகிற ஒரு இடத்தின் தன்மை. அதாவது ஒரு தேசம் மிகவும் உஷ்ணமாயிருக்கிறதா, அல்லது குளிர்ச்சியாயிருக்கிறதா என்று தெரிந்துகொள்வது. சீதோஷ்ண ஸ்திதியை நாம் அவசியம் கவனிக்கவேண்டும். ஏனென்றால் ஒரு தேசத்திலிருக்கும் ஜனங்களின் நடையுடை பாவனைகள் அத்தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியைப் பற்றினவையா யிருக்கின்றன. எப்படி யென்றால் நமது தேசத்தில் ஏப்பிரல், மே, ஜூன் மாதங்களில் உஷ்ணம் அதிகமாயிருப்பதால் நாம் அம்மாதங்களில் கஷ்டப்பட்டு வேலை செய்ய முடிகிறதில்லை. செய்தால் தேகத்திற்கு மிகவும் சிரம முண்டாகிறது. நாம் உஷ்ணப்பிரதேசத்திலிருப்பதால்தான் இவ்வாறு வெய்யிற் காலத்தில் கஷ்டப்பட்டு வேலை செய்ய முடிகிறதில்லை. இதற்குத் திருஷ்டாந்தமாக நீலகிரி மலையின்மீதுள்ள உதகமண்டலத்தில் வெகு தூரம் நடந்தாலும் தேகத்திற்கு சிரமமுண்டாவதில்லை. நமது செல்வம் குறைந்து நாம் முன்னுக்கு வரக்கூடாமலிருப்பதற்கு இதுவுமோர் காரணம். இங்கிலாந்து போன்ற குளிர்ந்த பிரதேசத்தில் இருக்கிற தேசத்தவர்கள் எந்தக்காலத்திலும் அவர்கள் சரீரத்திற்கு ஒருவித சிரமமுமில்லாமல் கஷ்டமான வேலைகளைச்செய்து ஐசுவரியத்திலும் நாகரீகத்திலும் எல்லோருக்கும் மேன்மைப்பட்டிருக்கிறார்கள்.

ஓரிடத்திலுள்ள ஜீவவர்க்கம், விருட்ச வர்க்கம் முதலியவைகள் சீதோஷ்ண ஸ்திதியைப் பொருந்திருக்கின்றன. ஒரு தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியை சூரிய கிரணங்களா

லல்லாமல் (1) இருக்குமிடம் (2) ஸமுத்திர மட்டத்திற்கு மேலுள்ள உயரம் (3) கடலுக்கருகாமை (4) காற்று (5) மலைகள் (6) வரட்சி, ஈரம் (7) மண்ணின் ஸ்வபாவம் (8) மழை, முதலியவற்றால் நிர்ணயிக்கலாம்.

(1) இருக்குமிடம்:—பூமி உருண்டையா யிருப்பதால் சூரிய கிரணங்கள் சில இடங்களில் செங்குத்தாயும் சில இடங்களில் சாய்ந்தும் விழுகின்றன. சூரிய கிரணங்கள் நேராய் விழுமிடங்களில் உஷ்ணம் அதிகமாயும், சாய்ந்து விழுமிடங்களில் உஷ்ணம் குறைவாயு மிருக்கும். பலவிடங்களில் சூரியகிரணங்கள் செங்குத்தாய் விழுந்தாலும் அவ்வூர்களெல்லாம் ஒரே சீதோஷ்ண ஸ்திதியை யுடைத்தாயிருக்காது. எப்படி யென்றால், கடற்கரையிலுள்ள சென்னப்பட்டணமும், மேட்டுப் பிரதேசத்தி லிருக்கும் பெங்களூரும், மலைப்பிரதேசத்திலுள்ள மங்களூரும், ஒரே அளவான சூரிய உஷ்ணத்தை அடைந்தாலும், பெங்களூர் அதிகக்குளிராயும் மங்களூர் கொஞ்சம் குறைவான குளிருள்ளதாயும், சென்னப்பட்டணம் உஷ்ணமாயு மிருக்கிறது. நமது சென்னை இராஜதானியின் பெரும்பாகத்தில் சூரிய கிரணங்கள் செங்குத்தாய் விழுவதால் பெரும்பாலும் உஷ்ணமாகவே யிருக்கிறது.

(2) ஸமுத்திர மட்டத்திற்கு மேலுள்ள உயரம்:—ஸமுத்திர மட்டத்திற்கு உயரமாயுள்ள இடங்கள் குளிர்ச்சியாகவே யிருக்கும். எப்படியென்றால் பூமி சூரிய உஷ்ணத்தைச் சீக்கிரமிழுத்துக் கொள்ளும். ஜலம் இழுத்துக் கொள்ளக் கொஞ்சநேரமாகும். காற்றுக்கு அதிக நேரஞ்செல்லும். இழுத்துக் கொள்வது போலவே, பூமி சீக்கிரத்திலும், ஜலம் கொஞ்ச நேரத்திலும், காற்று தாமதமாயும், உஷ்ணத்தை வெளியே விட்டுவிடும். இவ்வாறு பூமி உஷ்ணத்தைச் சீக்கிரமிழுத்து உடனே வெளியே விடுகிறது. பூமி வெளியே

விட்ட உஷ்ணத்தை காற்று கிரகித்து, பிறகு பக்கத்திலிருக்கும் காற்றில் கலந்து, மேலேசெல்ல தாமதமாகிறது. இவ்வாறு மெள்ள மேலேபோவதற்குள் உஷ்ணம் காற்றினால் இழுத்துக் கொள்ளப்பட்டு செலவாகி விடுகிறது. ஆனதால் பூமியின் உஷ்ணம் மேலான பிரதேசங்களில் செல்லுகிறதில்லை. இதனால் தான் நிரட்சர ரேகையின்மேல் ஒரு ஊர் இருந்தாலும் அது மேட்டுப் பிரதேசமா யிருந்தால் அங்கு எப்பொழுதும் குளிர்ச்சியாகவே யிருக்கும் நீலகிரியில் மே மாதத்தில் சூரிய கிரணங்கள் நேராகவே விழுந்தும் அது சமுத்திர மட்டத்திற்கு 7400 அடி உயரத்திலிருப்பதால் அங்கு உஷ்ணகாலத்திலும் குளிர்ச்சியாகவே யிருக்கிறது. நமது இராஜதானியில் நீலகிரி போன்ற மேட்டுப் பிரதேசங்களில் வெய்யிற் காலத்திலும் குளிர்ச்சியாகவே யிருக்கிறது.

(3) கடலுக் கருகாமை :—

கடலுக் கருகாமையில் இருக்கப்பட்ட ஊர் உள் நாட்டிலிருக்கப்பட்ட ஊரைவிட குளிர்ச்சியாகவே யிருக்கும். எவ்வாறெனில் ஸமுத்திர மென்பது பெரிய ஜலபாகமென்று நமக்குத் தெரியுமே. ஜலம் சீதளமென்றும் உஷ்ணத்தைக் கொஞ்சம் தாமதமாகக் கிரகிக்கு மென்றும் மேலே சொல்லி யிருக்கிறோம். ஜலம் சீதளமானதால் அதன்மே லடிக்கும் காற்றும் நீராவியுடன் சம்பந்தப்பட்டு குளிர்ச்சியாகவே யிருக்கும். பூமி உஷ்ணத்தை கிரகிக்கும் போது அதன்மே லடிக்கும் காற்றும் உஷ்ணமாகவே யிருக்கும். உஷ்ணமான காற்று இலேசான தென்றும் அது மேலே கிளம்பிவிடு மென்றும் அந்த இடத்தையடைய ஸமுத்திரத்தி லிருந்து குளிர்ந்த காற்று வீசுகிற தென்றும் நீங்கள் மேலே படித்திருக்கிறீர்களல்லவா. அப்படி அடிக்கும்போது தரையின் மேலிருக்கும் உஷ்ணத்தை அக்குளிர்காற்று மாற்றி விடுகிறது. இதற்கு

உதாரணமாக வெய்யிற் காலத்தில் தாபம் அதிகமா யிருக்கும் போது, ஒரு விசிரியைத் தண்ணீரில் நனைத்து விசிரிக்கொண்டால், அதிலிருந்து உண்டாகும் குளிர்ச்சியான காற்று, பக்கத்தி லுள்ள காற்றின் சூட்டை மாற்றி தாபத்தைத் தணிக்கிறது. ஆகையால் ஒரு ஊர் உஷ்ணப் பிரதேசத்தி லிருந்தாலும் கடலுக் கருகாமையி லிருந்தால், வெய்யிற் காலத்தில் சமுத்திரக்காற்று அங்குள்ள உஷ்ணத்தைக் கொஞ்சம் குறைக்கிறது. இப்போது உஷ்ணப் பிரதேசத்தில் சென்னப்பட்டணம், கோபாலபுரம், கள்ளிக்கோட்டை முதலான ஊர்கள் கடலுக் கருகிலும் கடப்பை, பல்லாரி, மதுரை முதலான ஊர்கள் உள்நாட்டிலு மிருக்கின்றன. கோடை காலத்தில் சென்னப்பட்டணத்தில் வங்காளக் குடாக்கடலி லிருந்து குளிர்ந்த காற்று வீசுவதால் அங்குள்ள உஷ்ணம் கொஞ்சம் குறைந்து உள்நாட்டிலுள்ள ஊர்களை விடக் குளிர்ச்சியா யிருப்பதால் சில ஐரோப்பியர்கள் மலைகளுக்குப் போகாமல் இங்கேயே தங்கி யிருக்கிறார்கள். அதே காலத்தில் கடப்பை முதலான ஊர்கள் கடலுக்கருகி லில்லாமல் உள்நாட்டி லிருப்பதாலும், அங்கு உஷ்ணத்தைத் தணிக்க ஏதுவில்லாததாலும், பகல் முழுவதும் வரட்சியான காற்று அடிப்பதாலும், தாபம் அதிகமாகவே யிருக்கும். நமது இராஜதானியில் சில உள்நாட்டு ஜில்லாக்கள் தவிர மற்ற ஜில்லாக்கள் கடலை அடுத்திருப்பதால் அவைகளில் கடற்காற்று வீச அநுகூலமா யிருக்கிறது.

4. காற்று:—ஒரு பிரதேசத்தில் அடிக்கும் காற்று வரட்சியான காற்ரு, அல்லது நீருடன் சம்பந்தப்பட்ட காற்ரு, என்பதை அது வீசும் பிரதேசத்தி லிருந்து அறியலாம். அது நீர் நிலைகளிலிருந்து அடித்தால் குளிர்ச்சியா யிருக்கும். நீர் நிலைகளில்லாமல் உஷ்ணப் பிரதேசங்களி லிருந்து அடித்தால் வரட்சியா யிருக்கும். ஆகையால் ஒரு பிரதேசத்தில் அடிக்

கும் காற்றைக் கொண்டு அதன் சீதோஷ்ண ஸ்திதியை ஒரு வாறய் அறியலா மென்றேம். நமது இராஜதானியில் கடற் கரை யோரங்களில், அவற்றை யடுத்துள்ள ஸமுத்திரங்களி லிருந்து காற்று வீசுவதால் அங்கு குளிர்ச்சியாயும், உள்நாட்டு ஜில்லாக்களில் நிலக்காற்று அடிப்பதால் அங்கு உஷ்ணமாயு மிருக்கிறது.

5. மலைகள்:—மலைகளின் மீது எப்போதும் குளிர்ச்சி யா யிருக்குமென்று சொன்னேம். மலைகளின் மீது ஏராளமாய் மழை பெய்வதாலும் அவற்றின் மீதும் பக்கங்களிலும் பசு மையான புல், பூண்டு, விருக்ஷங்கள், செடி கொடிகள் இருப் பதாலும் அப்பிரதேசங்களில் ஈரம் இருக்க வேண்டும். அந்த ஈரம் அங்குள்ள உஷ்ணத்தைத் தணித்துவிடும்.

6. வரட்சி, ஈரம்:—வரட்சி என்றால் தண்ணீரில்லாமை. ஈரம் என்றால் தண்ணீரின் சம்பந்தமுள்ளது. நமக்கு நாக்கு வரண்டுபோனல் குடிக்கத் தண்ணீரை விரும்புகிறேம். அது போலவே வரட்சியான காற்றுக்கு ஜலத்தைச் சீக்கிரம் இழு த்துக் கொள்ளுங்குணமுண்டு. வெய்யிற் காலத்தில் ஒரு நனைந்த துணியை உலர்த்தினல் அது சீக்கிரம் உலர்ந்து விடு கிறது. ஏனெனில் அக்காலத்திலுள்ள வரட்சியான காற்று இத்துணியின் ஈரத்தை இழுத்துக் கொள்ளுகிறது. மழை காலத்தில் ஈரமான துணி சீக்கிரம் உலர்கிறதில்லை. ஏனென் றல் அக்காலத்திலுள்ள காற்று வரட்சியானதல்ல. வரட்சி யான காற்று ஜீவ வர்க்கங்களுக்கு அநுகூலமானது. ஈர மான காற்று சகல வியாதிகளுக்கும் காரணமானதால் அது ஜீவப்பிராணிகளுக்கு ஏற்றதல்ல. இவ்வீரக் காற்றே விருக்ஷங் களுக்கு ரொம்ப அநுகூலமானது. எப்படி யென்றல் வரட் சியான காற்றடித்தால் புல், பூண்டு, விருக்ஷங்கள் பட்டுப்போ கும். காற்று உஷ்ணமானதென்றும் சீதளமானதென்றும்

உஷ்ணமானியால் தெரிந்துகொள்ளலாம். இதனுலேதான் ஒரு ஊரின் சீதோஷ்ணஸ்திதியை காற்று வரட்சியா, ஈரமா வென்பதைக் கொண்டு அறியலாமென்றேம்.

7. **மண்ணின் ஸ்வபாவம் :—** மண்ணில் களிமண், கரிசல்மண், மணல், பாறை, உவர்மண் எனப் பலவகைகள் உண்டு. களிமண்ணில் முன் சொல்லியபடி சீக்கிரம் தண்ணீர் சுவராமல், நிதானமாய் இழுத்துக்கொண்டு தன்னிடம் வைத்திருக்குங்குணமுண்டு. இவ்விதக் களிமண் தரையில் தண்ணீர் எப்போதும் தங்கியிருப்பதால் அது எப்பொழுதும் ஈரமாகவே யிருக்கும். ஆகையினுல் களிமண் தரையான பூமியில் உஷ்ணம் அதிகமாக உறைக்காது. கரிசல் மண்ணும் ஏறக்குறைய களிமண்ணைப்போன்றதுதான். ஆனுல் இதின் அணுக்கள் களிமண்ணில் இருப்பதுபோல் அவ்வளவு நெருக்கமாய் ஒட்டிக்கொண்டிராது. ஆகையால் இத்தரையில் உஷ்ணம் மிதமாயிருக்கும். மணலில் அணுக்கள் ஒட்டாமல் தனித்தனி இருப்பதால் தண்ணீர் சீக்கிரம் சுவரிவிடும். மணல் தரை உஷ்ணத்தை இழுத்துக்கொள்வது போலவே அதிக சீக்கிரம் வெளிவிடுவதால் வெய்யிற்காலத்தில் அதிக உஷ்ணமாயும் மழைகாலத்தில் அதிக குளிராயு மிருக்கும். வெய்யிற்காலத்தில் உங்களூருக்கருகிலுள்ள ஆற்றில் நடந்தால் மணல்தரையின் உஷ்ணம் அதிகமாயிருப்பது தெரியும். பாறையாயிருக்குமிடம் எப்போதும் உஷ்ணமாகவேயிருக்கும். உவர்மண் மூலவர்க்கங்களுக்கு ஏற்றதல்ல. இவ்வுவர்மண் தரையும் உஷ்ணமாகவே யிருக்கும்.

8. மழை :—மழை பெய்து ஏரி, ஆறு, குளம் முதலான நீர் நிலைகளை தண்ணீரால் நிரப்புவதால் அத்தண்ணீர் காற்றின் உஷ்ணத்தை மாற்றிவிடுகிறது.

8. ஜலாதாரம் அல்லது நீர்ப்பாய்ச்சல்.

நமக்கு ஸ்நானபானத்திற்கும் பயிரிடுவதற்கும் வருஷம் முழுவதும் தண்ணீர் வேண்டியிருக்கிறது. மேலே சொல்லிய படி நமது இராஜதானியில் ஓடும் ஆறுகளில் கோடைகாலத்தில் தண்ணீர் இராது. அவற்றுள் சில நதிகள் வெள்ளம் வரும் சில நாட்கள் தவிர மற்றக்காலங்களில் மணல் வெளியாயிருக்கும். தவிரவும் நமது இராஜதானியில் மழை எங்கும் ஒரே அளவாய்ப் பெய்கிறதில்லை. இவ்வாறு பெய்யும் மழையும் வருஷத்தில் சில தினங்களிலேயே பெய்து விடுகிறது. ஆகையால் நமக்கு ஒரு வருஷத்திற்குத் தேவையான ஜலத்தை மழை பெய்யும்போதும், ஆறுகளில் வெள்ளம் வரும் போதும், சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதற்காக (1) நாடுமுழுவதும் ஏரிகள் வெட்டி அவற்றில் மழை நீரைத் தேக்கிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (2) பெரிய நதிகளில் அணைகள் கட்டி தண்ணீரை கால்வாய்கள் மூலமாய் பாய்ச்சலுக்கு உபயோகிக்கிறார்கள். சில ஆறுகளின் நீரை ஏரிகளில் தேக்கிவைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். (3)கிணறுவெட்ட குடியானவர்களுக்கு ஐக்கிய நாணய சங்கத்தார் முன்பணம் கொடுத்து உதவுகிறார்கள். நமது தேசத்துக்குடிகள் ரொம்பவும் ஏழைகளானதால் இவ்விதச் சகாயங்கள் இன்னும் ஏராளமாய்ச் செய்யவேண்டியிருக்கிறது. இவ்விதக் கிணறுகள் கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்களில் ஏராளமாயுண்டு. இவ்விரண்டு ஜில்லாக்களிலும் விசேஷமாய்க்கிணறுகளின் ஆதாரத்தைக் கொண்டே பயிரிடுகிறார்கள்.

(4) ஜலம் வருத்தில்லாத ஆறுகளுக்கு வருத்துண்டாக்கியிருக்கிறார்கள். எவ்வாறெனில், மேற்குத்தொடர்ச்சி மலையில் பெரியாறென்று ஒரு நதியுண்டாகி திருவாங்கூர் வழியாய் அரபிக்கடலில் விழுகிறதென்று மேலே சொன்னோம். இதன் ஜலம் எங்கும் உபயோகப்படுத்தப்படாமலிருந்தது. திருவாங்கூர் இராஜ்ஜியத்திற்கும் பிரிட்டிஷ் இராஜ்ஜியத்திற்கும் எல்லையாயிருக்கிற குமுளி என்னுமிடத்திற்கு எட்டுமைல் தூரத்தில் 176 அடி உயரமுள்ள அணைகட்டி, 22 மைல் விஸ்தீரணம் தண்ணீரைத் தேக்கி, அதற்கு வடக்கேயுள்ள மலையை



சுமார் 6000 அடி நீளம் துளைத்து, விரவனாறு, சுருளியாறு மூலமாய் வைகையில் கலக்கும்படி செய்திருக்கிறார்கள். இதற்கு பெரியாறு பிராஜெக்டு என்று பெயர். இதை கர்னல் பென்குக் என்ற எஞ்சினீர் கட்டுவித்தார்.

ருஷிகுல்யா பிராஜெக்டு. கஞ்சம் ஜில்லாவில் ஓடும் ருஷிகுல்யா நதியின் ஜலத்தையும், ரஸல்கொண்டா, சுரடா

என்னும் ஏரிகளின் ஜலத்தை கால்வாய்களின் மூலமாய்த் திருப்பி ஏறக்குறைய லட்சம் ஏகர் பூமியை சாகுபடி செய்கிறார்கள்.

19. விளைபொருள்.

விளைபொருள் என்பது மனிதர்களுக்கு உண்பதற்கும் உடுப்பதற்கும் அவசியமாய் பூமியில் உற்பத்தியாகும் பொருள்கள். இவை மூன்றுவிதம் :—1 மூலவர்க்கம், 2 தாதுவர்க்கம், 3 மிருகவகை.

1 மூலவர்க்கத்தில் நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, கோதுமை முதலியன தானிய வகைகள். உளுந்து, பயறு, துவரை, கடலை, கொள்ளு முதலியன பயறுகள். ஆமணக்கு, எள்ளு, நிலக்கடலை முதலியன எண்ணெ வித்துக்கள். பருத்தி, கரும்பு, புகையிலை, வெற்றிலை காப்பிக்கொட்டை, தேயிலை, பாக்கு, மிளகு, ஏலக்காய், முதலியன இதர பொருள்கள். தேக்கு, கருங்காலி, சந்தனமரம், செம்மரம், பனை மூங்கில் முதலியன கட்டிடத்திற்கு உபயோகமான மரங்கள். மா, பலா, வாழை, தென்னை முதலியன பலன் கொடுக்கும் மரங்கள்.

2 தாதுவர்க்கத்தில் பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு, நிலக்கரி, உப்பு, அபிரகம் (Mica) மாங்கனிஸ் (Manganese) முதலியன உலோகங்கள். இவைகள் பூமியிலும் மலைகளிலும் உள்ள சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன.

3 மிருகவகையில் ஆடு, மாடு, குதிரை முதலியன சேரும்.

1. மூலவர்க்கம்.

மூலவர்க்கம் நிலத்தில் பயிரிடுபவை. நிலத்தை அவற்றின் வளத்துக்குத்தக்கவாறு 62-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறபடி பல வகையாய்ப் பிரிக்கலாம். இவற்றுள் வண்டல்சேர்ந்த களிமண்ணில் நஞ்சைப் பயிர் நன்ருய் விளையும். மண்ணும், மணலும் சேர்ந்த புழுதியில் புஞ்சை தானியங்கள் நன்ருய் விளையும். செம்மணற் பாங்கும் கரிசல் மண்ணும் பருத்தி விளையயேற்றவை. மணல் தரையில் சவுக்கு, தென்னை, பனை, வாழை முதலியன நன்ருய்ப்பயிராகும்.

நஞ்சை நிலம் என்பது பூமியைத்தண்ணீர் கட்டி உழுது சேருக்கி நாற்று நட்டு அல்லது விதை விதைத்துப் பயிராக்கும் நிலம். சேற்றை உழுதவுடன் அதில் தழை போட வேண்டும். தழை மக்கிஞல் அது நல்ல எருவாகும். விதைத்த பிறகு முளைப்பயிராயிருக்கும் பொழுது எருத்தூவ வேண்டும். தழையும் எருவுமே நிலத்தை வளப்படுத்தி நல்ல பலன் கொடுக்கின்றன. நஞ்சைக்கு அறுவடையாகிற வரையில் சேறு காயாமல் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பயிர் உலர்ந்துபோம்.

புஞ்சை யென்பது ஒரு மழை பெய்து பூமி ஈரமானதும் நிலத்தைப் புழுதியாக உழுது அதில் விதையை விதைக்கும் நிலம். இப்புஞ்சை நிலங்களுக்கு விதைப்பதற்குமுன் எருவைப் போட்டு கலக்க உழவேண்டும். இப்புஞ்சை தானியங்கள் விளைய அதிக ஜலம் வேண்டுவதில்லை. அப்போதைக்கப்போது பெய்யும் மழையின் ஆதாரவைக் கொண்டு விளைந்து விடும். நமது இராஜதானியில் எல்லா ஜில்லாக்களிலும் மேட்டுப்பாங்கான இடங்களில் இப்புஞ்சை தானியங்களை விளைவிக்கிருர்கள்.

(1) நெல்:—நமது இராஜதானியிலுள்ள ஜனங்களுக்கு ஆகாரத்திற்கு உபயோகப்படக்கூடிய தானியங்களில் நெல் முதன்மையானது. இதைப்பயிரிட ஏராளமாய்த் தண்ணீரும் உஷ்ணமும் வேண்டும். இதை நஞ்சை நிலங்களில் விசேஷமாய்ப் பயிரிடுவதால் இதற்கு நஞ்சைப்பயிர் என்று பெயர். இது இவ்விராஜதானியில் கஞ்சம், விசாகப்பட்டணம், கிருஷ்ணா, தஞ்சாவூர் ஜில்லாக்களில் 10 லட்சம் ஏகராவுக்கு அதிகமான பூமியிலும், மலையாளத்தில் $7\frac{1}{2}$ லட்சம் ஏகராவும், கோதாவரி, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் 5 லட்சம் ஏகராவும், குண்டூர், நெல்லூர், வட ஆற்காடு, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் $2\frac{1}{2}$ லட்சம் ஏகரா பூமியிலும் மற்ற ஜில்லாக்களில் இதற்குக் குறைவாயும் பயிரிடப்படுகிறது.

(2) கரும்பு:-இது நெல் விளையும் நஞ்சை நிலங்களில் நன்றாய்ப் பயிராகும். இதை நீர்வளமுள்ள தோட்டங்களிலும் பயிரிடுவதுமுண்டு. முற்றின கரும்பை கணுக்கணுவாக வெட்டி சாலைசாலையாக நடுவார்கள். கரும்பில் செங்கரும்பு, நாமதாரிக் கரும்பு, பேக்கரும்பு என்று அநேகவிதங்கள் உண்டு. இது நமது இராஜதானியில் விசாகப்பட்டணம், தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் பயிரிடப்படுகிறது.

(3) புகையிலை:—இப்பயிருக்கும் அதிக ஜலம் வேண்டும். ஆகையால் இதை ஆற்று டெல்டாக்களிலும் இறைகிணறுள்ள இடங்களிலும் பயிரிடுகிறார்கள்.

(4) வெற்றிலை:—இது நுட்பமான பயிர். இதை நஞ்சை நிலங்களிலும், தோட்டங்களிலும் பயிரிடுகிறார்கள். இதற்கு எப்போதும் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டே யிருக்க வேண்டும். இல்லாவிட்டால் வெற்றிலைக் கொடிகள் காய்ந்து இலைகள் சுருண்டு வாடிப் போகும்.

(5) அவுரி:—அவுரி என்பது ஒருவகைச் செடி. அது களி மண் நிலத்திலும் வண்டல்படிந்த சேற்று நிலத்திலும் நன்ருய்ப் பயிராகும். இதை இறை கிணறுள்ள நஞ்சை நிலங்களில் நெல் சாகுபடி செய்யப் போதுமான மழை யில்லாத போது சாகுபடி செய்கிருர்கள். இது விசாகப்பட்டணம், கோதாவரி, நெல்லூர், தென்னுற்காடு, மேற்குக் கரை நாடுகள் முதலான இடங்களில் விளைவிக்கப்படுகிறது.

(6) சோளம், கேழ்வரகு, கம்பு முதலியவைகள்:—இவை விசேஷமாய் டெக்கான் பீடபூமியில் பயிரிடப்படுகின்றன. இவற்றிற்கும் பருத்தியைப் போலவே அதிகஜலம் வேண்டுவதில்லை. இவையே நமது நாட்டு ஏழை ஜனங்களுக்கு முக்கிய ஆகாரம். கேழ்வரகை இறைகிணறுள்ள நஞ்சை நிலங்களில் பயிரிடுவது முண்டு.

சோளம், பல்லாரி, கர்நூல், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் 5 லட்சம் ஏகராவுக்கு அதிகமாயும், கிருஷ்ணு, குண்டூர், நெல்லூர், கடப்பை, அநந்தபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை ஜில்லாக்களில் $2\frac{1}{2}$ லட்சம் ஏகராவிலும், மற்ற ஜில்லாக்களில் இதற்குக் குறைவாயும் விளைவிக்கப்படுகிறது.

கேழ்வரகு, கஞ்சம், விசாகப்பட்டணம், சேலம் ஜில்லாக்களில் $2\frac{1}{2}$ லட்சம் ஏகராவிலும், அநந்தபுரம், சித்தூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் லட்சம் ஏகராவிலும் மற்ற ஜில்லாக்களில் இதற்குக் குறைவாயும் பயிரிடப்படுகிறது.

கம்பு, குண்டூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் $2\frac{1}{2}$ லட்சம் ஏகரா பூமியிலும், விசாகப்பட்டணம், பல்லாரி, அநந்தபுரம், கடப்பை, நெல்லூர், சித்தூர், வட ஆற்காடு, தென்னுற்காடு, ராமநாதபுரம், திருநெல

வேலி ஜில்லாக்களில் லட்சம் ஏகராவிலும் இதர ஜில்லாக்களில் இதற்குக் குறைவாயும் உற்பத்தி செய்யப்படுகிறது.

(7) பயருகள்:—துவரை, பயரு, உளுந்து, கடலை, கொள்ளு முதலிய பயருகளை எல்லா விடங்களிலும் மேட்டுப்பாங்கான கொல்லைகளில் (புஞ்சை நிலங்களில்) பயிரிடுகிறார்கள்.

(8) பருத்தி:—இதற்கதிக ஜலம் வேண்டுவதில்லை. அப்போதைக்கப்போது பெய்யும் மழையினால் விளைந்துவிடும். இப்பயிருக்கு வெய்யில் அதிகமாய் வேண்டும். இதை பல்லாரி ஜில்லாவில் 4 லட்சம் ஏகரா பூமியிலும், கர்நூல் ஜில்லாவில் 3 லட்சம் ஏகராவுக்கு அதிகமான பூமியிலும், குண்டூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில் 2 லட்சம் ஏகரா பூமியிலும், அநந்தபுரம், மதுரை ஜில்லாக்களில் லட்சம் ஏகரா பூமியிலும், கிருஷ்ணா, கடப்பை, நெல்லூர், திருச்சிராப்பள்ளி முதலான ஜில்லாக்களில் இதற்குக் குறைவாயும் பயிரிடுகிறார்கள்

(9) எண்ணெய்வித்துக்கள்:—எண்ணெய் வித்துக்களில் அதிகமாய்ப் பயிரிடப்படுவது எள்ளும், மணிலாக்கொட்டையுமே. மணிலாக் கொட்டையானது சமவெளிப் பிரதேசங்களில் மேட்டுப்பாங்கான கொல்லைகளில் ஏராளமாய்ப் பயிரிடப்படுகிறது. இதில் பல ரகங்கள் உண்டு. இது விசேஷமாய் தென்னாற்காடு ஜில்லாவில் பயிரிடப்படுகிறது. ஆமணக்கையும் எள்ளையும் விசேஷமாய் விளைவித்து அவற்றின் எண்ணெயை ஜனங்கள் பலவிதத்தில் உபயோகிக்கிறார்கள். தேங்காயிலிருந்து எண்ணெய் ஆடுகிறார்கள். தென்னைமரங்கள் மேற்குக்கரை நாடுகளிலும் சமுத்திரக்கரை ஓரங்களிலும் மணற்பாங்கான ஆற்றுப்பாய்ச்சலிலும் ஏராளமாய்ப் பயிராகின்றன.

(10) சம்பார வர்க்கம்:—நமது இராஜதானியில் அதிக மழை பெய்யும் மேற்குக்கரை நாடுகளில் மிளகு, ஏலக்காய்

முதலானவைகள் விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றன. இவற்றிற்குக் குளிர்ச்சியும் மிதமான வெய்யிலும் வேண்டும்.

(11) காப்பி:—இது மலைச்சரிவுகளில் நன்றாய்ப்பயிராகும். இதற்குச் சீதோஷ்ணம் மிதமாயிருக்க வேண்டும். இது சாதாரணமாய் 5000 அடிக்கு குறைந்ததும் 1800 அடிக்கு மேற்பட்டதுமான உயரத்தில்தான் பயிராகும். இதற்கு ஏராளமாய் மழை வேண்டும். இது நமது இராஜதானியில் மலை நாடுகளான நீலகிரி சேலம் ஜில்லாவிலுள்ள சேர்வராயன், மலையாளம் ஜில்லாவிலுள்ள வயநாடு, மைசூர், திருவாங்கூர், குடகு முதலான இடங்களில் விளைகிறது.



நீலகிரிமலையின்மீது போகும் இருப்புப்பாதை.

(12) தேயிலை:—காப்பியைப் போல் தேயிலையும் உயரமான மலைப்பிரதேசங்களிலே தான் பயிரிடப் படுகிறது. இப்

மேலேயுள்ள இருப்புப்பாதை போட்ட பிறகே பல ஐரோப்பியர்களும், இந்துக்களும் இந்த மலை நாடுகளில் குடியேறி ஏராளமாய் காப்பி, தேயிலைத் தோட்டங்கள் உண்டாக்கி யிருக்கிறார்கள்.

பயிருக்கும் அதிக மழை ஆவசியகம். (5) இதுவும் காப்பி விளையும் இடங்களிலும் ஆனை மலை, பழனிமலைப்பிரதேசங்களிலும் விளைவிக்கப்படுகிறது.

காடுகள் :—மரங்களும் புதர்களும் அடர்ந்து நல்ல பாதைகளில்லாமல் இருக்குமிடங்களுக்குக் காடுகளென்று பெயர். காடுகள் அதிகமாயுள்ள நாடுகளில் மழை அதிகமாய்ப் பெய்யும். நமது இராஜதானியிலுள்ள காடுகளை இராஜாங்கத்தார் பாதுகாத்து வருகிறார்கள். இதை மேல் பார்வை பார்க்கும் பிரிவுக்கு காட்டிலாகா (Forest Department) என்று பெயர். காடுகள் ஆடுமாடுகள் மேய்வதற்கும் நிலங்களுக்கு வேண்டிய தழை முதலியன கொண்டு வருவதற்கும் உபயோகப்படுகின்றன. காடுகளில் கட்டிடங்களுக்கு வேண்டிய மரங்களும், மூங்கில், பிசின், சாயவேர், தேன், மூலிகைகள் முதலானவையும், கிடைக்கின்றன.

நமது இராஜதானியில் கொங்கணத்துக்கும் மேற்கு மலைத் தொடருக்கும் மத்தியில் ஒரு பெரிய காடு இருக்கிறது. இதில் விலையுயர்ந்த சந்தன மரங்களும், தேக்கு, வேங்கை முதலான கட்டடத்திற்கு உபயோகப்படக்கூடிய மரங்களும் உண்டாகின்றன. கர்நாடக சமவெளியில் சிறு காடுகளிருக்

குறிப்பு 1:—நமது இராஜாங்கத்தார் விவசாயத்தைப் போதிக்க கோயம்புத்தூரில் ஒரு விவசாயகலாசாலை வைத்திருக்கிறார்கள். குடிகள் விவசாயத்தைப்பற்றி ஏதாவது தெரிந்து கொள்ளவேண்டுமானால்இராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் விவசாய டைரெக்டர், டிப்டி டைரெக்டர் முதலியவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். இவ்வித உத்தியோகஸ்தர்கள் தென் ஜில்லாக்களுக்காக திருச்சிராப்பள்ளியிலும், மத்திய ஜில்லாக்களுக்காக பறங்கிமலையிலும், வடஜில்லாக்களுக்காக பல்லாரி, அனகாபல்லி என்னும் இடங்களிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கின்றன. இங்கு மழைக்குளிர்ச்சியில்லாததால் விறகுக்கு உதவக்கூடிய சிறிய செடிகளே நிறைந்திருக்கின்றன. தக்ஷிண பீடபூமியிலும் காடுகள் உண்டு. அவற்றில் அழுத்தமான செம்மரங்களும், சந்தனமரங்களும் உற்பத்தியாகின்றன. கிருஷ்ணா நதிமுதல் இவ்விராஜதானியின் வடகிழக்குக் கோடிவரையில் அங்கங்கே காடுகள் உண்டு. அவைகளில் கருங்காலி, வேங்கை முதலிய பெரிய மரங்கள் கிடைக்கின்றன.

2. தாது வர்க்கம்.



கோலார் தங்கச்சுரங்கம்.

(1) பொன் :—நமது இராஜதானியில் உலோகங்கள் விசேஷமாய்க் கிடைப்பதில்லை. என்றாலும் இவ்விராஜதானியிலிருக்கும் சுதேச இராஜ்ஜியமாகிய மைசூரைச்சேர்ந்த (Kolar gold fields) கோலார் என்னுமிடத்தில் சுரங்கங்களிலிருந்து பொன் வெட்டி எடுக்கிறார்கள். மேலேயுள்ள சித்திரத்தைப் பாருங்கள். மலையாளத்தைச்சேர்ந்த வயனாட்டில் (Wynad) பொன் வெட்டி எடுத்தார்கள். ஆனால் அங்கு பொன்னை

வெட்டி யெடுத்து சுத்தஞ் செய்வதற்கு அதிகச்செலவு பிடித்ததாலும் அதற்குத் தகுந்த லாபம் கிடைக்காததாலும் இப்போது அங்கு ஏடுப்பதில்லை. அனந்தபுரம் ஜில்லாவிலும் பொன் சுரங்கங்களைக் கண்டு பிடித்து இப்போது வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

(2) இரும்பு :—நமது சென்னை இராஜதானியில் சேலம் ஜில்லாவில் இரும்பு கிடைக்கின்றது. ஆனால் அதை அவ்வளவாக வெட்டி எடுப்பதில்லை. ஏனென்றால் வெட்டின இரும்பை உருக்கிச் சுத்தப்படுத்துவதற்கு வேண்டிய நிலக்கரி, கட்டை, சுண்ணாம்புக்கல் முதலியவைகள் சமீபத்தில் கிடைப்பது சிரமமா யிருக்கிறது.

(3) அபிரகம்:— இது பார்வைக்குக்கண்ணாடியைப்போல் பளபள வென்றிருக்கும் ஓர் உலோகம். இதில் அநேக பொறைகள் உண்டு. இதைத் தகடுதகடாகப் பிரிக்கலாம். அபிரகம் கிடைக்கும் கனிகள் நெல்லூர் ஜில்லாவில் விசேஷமா யிருக்கின்றன.

(4) மாங்கனிஸ்—: இதுஇரும்பைப்போன்ற ஓர் உலோகம். இது பல்லாரி, விசாகப்பட்டணம் ஜில்லாவில் அகப்படுகின்றது. இதைக் கனிகளிலிருந்து வெட்டியெடுத்து இங்கு வேலை செய்யாமல் அயல் நாடுகளுக்கு அனுப்பி விடுகிறார்கள்.

(5) காரீயம் :—நமது இராஜதானியில் காரீயம் கோதாவரி ஜில்லாவில் பத்திராசலம் தாலூக்காவிலும், திருநெல்வேலி ஜில்லாவில் சிங்கம்பட்டியிலும் கிடைக்கிறது. இதனால் பென்சில்கள் செய்கிறார்கள்.

(6) வயிரக்கல்:—முன்காலத்தில் கிருஷ்ண ஜில்லாவின் ஒரு பாகத்திற்கு கோல்கொண்டா இராஜ்ஜியமென்று பெயர் வழங்கியது. அங்கு வயிரக்கற்கள் விசேஷமாய் அகப்பட்டுக்

கொண்டிருந்தன. முன் நமது தேசத்துச் சக்கிரவர்த்தி க்கு அனுப்பப்பட்ட கோகினூர் (Kohinoor) என்னும் வயிரக் கல் இந்தப்பிரதேசத்தில் கிடைத்ததே. அவ்வயிரத்தின் விலை மதிப்புக்குள் அடங்கினதல்ல. இப்போது கர்நூல் ஜில்லா வில் இவ்விதச் சுரங்கம் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார் கள்.

(7) கட்டிடக்கல் (Cuddapah Slabs):—கடப்பை ஜில்லா விலும் கிருஷ்ணா ஜில்லாவில் பெஜவாடாவிலும் கட்டிடங்க ளுக்கு உபயோகப்படக்கூடிய கருங்கல்கள் கிடைக்கின்றன. அவைகள் பலகை பலகையாய் உடைக்கப்பட்டு தளவரிசை முதலான வேலைகளுக்கு உபயோகப்படுத்தப்படுவதால் அவை கள் இதர ஜில்லாக்களுக்கு அனுப்பப்படுகின்றன.

(8) உப்பு:—சமுத்திரக் கரையை யடுத்திராத தேசங் களிலும், குளிர்ச்சியான தேசங்களிலும், உப்பை சுரங்கங்களிலி ருந்து பாறைபாறையாய் வெட்டி யெடுத்து, அவற்றைத் தூளா க்கி, தண்ணீரில் கரைத்துக்காய்ச்சி உப்பு எடுக்கிறார்கள். ஆனால் நமது இராஜதானியில் அவ்வாறு கனிகளிலிருந்து எடு க்கப்படாமல் கடற்கரையோரங்களில் பூமியில் பாத்திகள்கட்டி அவற்றில் சமுத்திர ஜலத்தை இறைப்பார்கள். அந்நீர் சூரிய உஷ்ணத்தினால் ஆவியாய்ப்போக அடியில் உப்புத் தங்கும். இத ற்குக் கடலுப்பு என்று பெயர். இதுவே நமது நாட்டிலுப யோகிக்கப்படும் உப்பு. நமது இராஜதானியில் உப்பு ஏராள மாய் விளைவிக்கப்பட்டு இந்தியாவின் இதர பாகங்களுக்கு அனுப்பப்படுகிறது. கோயம்புத்தூர் திருச்சிராப்பள்ளி ஜில் லாக்களில் மண்ணிலிருந்து பொட்டிலுப்பு என்ற ஒருவித உப்பு செய்கிறார்கள்.

3. மிருகவகை.

சென்னை இராஜதானியில் ஆடுமாடுகள் விசேஷமாய் வளர்க்கப்படுகின்றன. இவைகளே குடியானவர்களுக்கு ஏற்ற உழைப்பாளிகள். மாடுகள் ஏர் உழவும், வண்டி இழுக்கவும், கபிலையடிக்கவும் உபயோகப்படுகின்றன. பசுக்கள் பால் கொடுக்கின்றன. பசு மாடுகளில் நெல்லூர் ஜாதி, புங்கனூர் ஜாதி, மைசூர் ஜாதி என்று மூன்று விதங்கள் உண்டு. நெல்லூர் பசுக்கள் உயரமாயும் அதிக பால் கொடுக்கக் கூடியவைகளாயும் இருக்கின்றன. இந்த ஜாதி எருதுள் மிகவும் பெரியதாயிருக்கும். இவைகள் வேகமாய் ஓடாவிட்டாலும் பாரமான சுமை வண்டிகளை இழுப்பதுடன் கபிலையும் அடிக்கும். புங்கனூர் ஜாதிப் பசுக்கள் பார்வைக்கு மிகவும் குட்டையானவை. இவைகளும் நன்றாய்ப் பால் கொடுக்கும். மைசூர் ஜாதி எருதுகள் அழகாயும் கொம்புகள் நீளமாயும் சுறுசுறுப்பாயும் இருக்கும். இவை நன்றாய் ஓடும். இவைகளை சவாரி வண்டிகளுக்கு உபயோகிக்கிறார்கள். பசுக்கள் எருதுகள் தவிர எருமைகளும் எருமைக் கிடாக்களும் வளர்க்கப் படுகின்றன. இவை மந்தமான பிராணிகள். எருமைகள் ஏராளமாய்ப் பால் தரும். எருமைக் கிடாக்கள் ஏர் உழ உதவுகின்றன.

உஷ்ணப் பிரதேசத்தி லிருப்பதால், இவ்விராஜதானியில் உள்ள ஆடுகளின் மயிர், முரட்டுக் கம்பளங்கள் முதலியன செய்ய உதவுகின்றனவே தவிர, நேர்த்தியான சால்வைகள், போர்வைகள் முதலியவை செய்ய ஏற்றவை யல்ல. முக்கியமாய் தோலுக்காகவும் மாமிசத்திற்காகவுமே நமது நாட்டில் ஆடுகளை வளர்க்கிறார்கள்.

மேற்குக்கரை நாடுகளில் காட்டில் வேலை செய்ய யானைகளைப் பழக்கியிருக்கிறார்கள்.

18. கைத்தொழில்.

பண்டங்களை விளைவிப்பதற்கும் அவற்றை வேண்டிய விதமாய் தயார் செய்வதற்கும் கைத்தொழில் என்றுபெயர். நமது நாட்டில்வெகுகாலமாய்த்தேக சிரமப்பட்டு பண்டங்களை ஏற்றவாறு பண்படுத்திக்கொண்டு வந்தார்கள். ஏனெனில் இயந்திரங்கள் செய்யப் போதுமான இரும்பும், அவ்வியந்திரங்களை நடத்தவேண்டிய தற்குத்தேவையான நிலக்கரியும், நமது நாட்டில் கிடைக்காததால் அம்முறை அனுசரிக்கப் படவில்லை. மேலே சொன்ன விளைபொருள்களிலிருந்து நமது இராஜதானியில் தாதுப்பொருள்கள் விசேஷமாய்க் கிடைக்கவில்லை யென்று தெரிந்து கொள்ளலாம்.

(1) பயிரிடுதல் : நெல்லுக்குத்தல் :—நமது நாட்டில் பயிரிடுவதே முக்கியமான கைத்தொழில். பயிரிடப்பட்ட நெல் முதலிய தானியங்களை வெகு காலமாய் கையினுலும் ஏற்றம் போட்டும் குத்தி உமிநீக்கி, உபயோகிக்கக்கூடியவாறு சித்தப்படுத்தி வந்தார்கள். இப்போது இத்தொழில் சிற்சில இடங்களில் நீராவி யந்திரத்தின் உதவியால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வித நெல் குத்தும் இயந்திர சாலைகள் தஞ்சாவூர், கிருஷ்ணு, குண்டூர், கோதாவரி, முதலிய ஜில்லாக்களில் இருக்கின்றன.

(2) நெசவுத்தொழில் :—நமது இராஜதானியில் பயிர்த்தொழிலுக்கு அடுத்தபடியுள்ளது நெசவுந்தொழில். இத்தொழிலாளர்களை நமது நாட்டில் சேணியர்கள் அல்லது கைக்கோளர் என்கிறுர்கள். இவர்கள் வெகுகாலமாய் பருத்தியை சுத்தப்படுத்தி நூல் நூற்று அந்நூலுக்குப் பலவித சாயங்கள் ஏற்றி அநேக விதத்துணிகள் நெய்துகொண்டு வந்தார்

கள். ஆனால் சில வருஷகாலமாய் இந்நூல் நூற்குந்தொழில் நமது நாட்டில் நடைபெறுவதில்லை. ஏனெனில் பருத்தி விசேஷமாய் வெளிதேசங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து நூலாகவும் துணியாகவும் செய்யப்பட்டு வருகின்றது. நமது நாட்டில் கையினால் நூற்றுக்கொண்டிருந்த நூலுக்கும் இப்போது இயந்திரத்தினால் தயார் செய்யப்பட்டு வருகிற நூலுக்கும் விசேஷ வித்தியாசங்கள் உண்டு. என்னவென்றால் இவர்கள் நூற்கும் நூல் பெரும்படியாயும் ஒரே கனமில்லாமலும் இருக்கும். மேலும் நூற்கக் காலதாமதமும் ஆகும். ஆனால் இப்போது தருவிக்கப்படும் நூலோ அவ்வாறில்லாமல் ஒரே கனமுள்ளதாயும் அநேக ரகங்கள் உள்ளதாயும் இருக்கிறது. இயந்திரத்தின் சகாயத்தால் சொற்பகாலத்தில் ஏராளமாய் நூற்று விடுவதால் இந்நூல் விலை ரொம்ப ஸரஸமாயிருக்கிறது. தவிர சில வருஷங்களாய் துணி நெய்யும் தொழிலும் நமது நாட்டில் குறைவு பட்டிருக்கிறது. ஏனெனில் கையினால் பலநாள் கஷ்டப்பட்டு ஒருதுணி நெய்தால் அதற்குத்தகுந்த ஊதியம் கிடைப்பதில்லை. அந்நிய தேசங்களிலிருந்து இயந்திரங்களினால் நெய்யப்படும் துணிகள், ஏராளமாய் நமது தேசத்தில் கொண்டு வரப்பட்டு, வெகு நயமாய் விற்கிறதினால், ஜனங்கள் நாட்டுத் துணிகளுக்கு அதிக விலை கொடுத்து வாங்குகிறதில்லை. இக்காரணத்தினால் நமது இராஜதானியில் நெசவுத்தொழில் கொஞ்சங் கொஞ்சமாய் அற்றுப் போவதைக்கண்டு, இராஜாங்கத்தாரின் உதவியால், நமது நாட்டுத்தறிகளில் சொற்ப காலத்தில் சுலபமாய் அதிகத் துணிகளை நெய்யும்படியான இயந்திரங்களைக்கண்டு பிடித்து, அம்முறையைப் பல விடங்களிலும் பரவச்செய்து வருகிறார்கள். முன் காலத்தில் நமது நாடே நெசவுத்தொழிலில் மேம்பட்டிருந்தது. நமது இந்திய சரித்திரங்களைக் கொண்டு சுமார் 250

வருஷங்களுக்கு முன் ஐரோப்பா கண்டத்து போர்த்துகல், இங்கிலாந்து, பிரான்ஸ் முதலான பல தேசங்களி லிருந்தும் வியாபாரிகள் இங்கு வந்து பந்தர் சீட்டி, தோம்பு முதலான துணிகளை வாங்கிக்கொண்டு போனதாக ஏற்படுகிறது. இத் தேசம் நெசவுக்குப் பெயர் பெற்றிருந்ததற்கு இப்போதும் ஒரு திருஷ்டாந்தத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். இங்கிலாந்தில் முதல் முதலில் சாதாரணமான செல்லாய்க ளை (வெள்ளைத் துணிகளே) நெய்தார்கள். சில வருஷங்க ளுக்கு முன் இந்து கையால் நெய்யப்படும் துணிகளின் மாதி ரியைக்கொண்டு பலமாதிரியான நூல்கரைகள் கட்டி வேஷ்டி களும் சேலைகளும் நெய்யத் தலைப்பட்டார்கள். என்றாலும் பட்டுக்கரை வேஷ்டிகள் சேலைகள் முதலியன இன்னும் தயா ரிக்கக் கூடவில்லை.

நமது இராஜதானியில் கோதாவரி ஜில்லாவிலுள்ள காக் கினடா, ராஜமஹேந்திரவரம், கிருஷ்ணா ஜில்லாவிலுள்ள மசூலிப் பட்டணம், நெல்லூர் ஜில்லாவிலுள்ள நெல்லூர், புல்லம் பேட்டை, செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள காஞ்சீபுரம் மதுரை ஜில்லாவிலுள்ள மதுரை, திண்டுக்கல், சேலம் ஜில்லா விலுள்ள சேலம், கோயம்புத்தூர் ஜில்லாவி லுள்ள கோயம் புத்தூர், மலையாள ஜில்லாவிலுள்ள பாலக்காடு முதலிய இடங் களில் நெசவுத்தொழில் விசேஷமாய் நடக்கிறது.

இவை தவிர, முரட்டு நூலினல் ஜமக்காளங்கள் நெய்கி ருர்கள். இராஜாங்கத்தார் ஜயில்களில் ஜமக்காளங்கள், துவா லைகள் முதலியன நெய்விக்கிருர்கள். பல்லாரி ஜில்லாவிலுள்ள ஆதவானியிலும் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள பவானியி லும், சேலம் ஜில்லாவில் சேலத்திலும், நேர்த்தியான ஜமக்கா ளங்கள் நெய்கிருர்கள். குடியானவர்கள் நமது நாட்டில் உண்

டாகும் பருத்தியை சேகரித்து ஓடுகளை நீக்கி வியாபாரிகளுக்கு விற்று விடுகிறார்கள். அவர்கள் அவற்றை இயந்திரங்களைக் கொண்டு சுத்தப்படுத்தி சுருக்கி மூட்டைகளாகக்கட்டி வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். கர்நூல் ஜில்லாவில் நந்தியாலிலும், திருநெல்வேலி ஜில்லாவில் கோயில்பட்டியிலும், மதுரை ஜில்லாவில் மதுரையிலும் இராமநாதபுரம் ஜில்லாவில் சாத்தூரிலும் பஞ்சாலைகள் இருக்கின்றன. பருத்திக் கொட்டையிலிருந்து ஒருவித எண்ணெ யெடுக்கிறார்கள். கொட்டை மாடுகளுக்கு நல்ல உணவாகிறதுடன் புலங்களுக்கும் ஏற்ற எருவாகிறது.

நமது இராஜதானியில் பட்டு விசேஷமாய் உண்டாகிறதில்லை. கோயம்புத்தூர் ஜில்லாவில் கோள்ளேகால் என்னுமிடத்திலும், மைசூர் இராஜ்ஜியத்திலும் பட்டுப் பூச்சிகளை வளர்த்துப் பட்டு எடுப்பதாகத் தெரிகிறது. நமது நாட்டில் பட்டை பட்டு வஸ்திரங்களாகவும், நூல் துணிகளுக்கு கரையாகவும், நூலுடன் கலந்து துணியாகவும் நெய்கிறார்கள். பட்டு வஸ்திரங்கள் மிகவும் மேன்மை யானவைபற்றி அவற்றின் விலை யதிகம். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள கும்பகோணத்திலும், கஞ்சம் ஜில்லாவிலுள்ள பரஹம் பூரிலும் பட்டுவஸ்திரம் நெய்கிறார். நமது இராஜதானியில் மேன்மையான மயிர் கிடைக்காததால் சால்வைகள், போர்வைகள் முதலானவை நெய்யப் படுகிறதில்லை யென்று மேலே சொன்னோம். ஆனால் இங்கு கிடைக்கும் ஆட்டு ரோமத்தினால் நேர்த்தியான இரத்தின கம்பளங்கள் கோதாவரி ஜில்லாவிலுள்ள ஏலூரில் நெய்யப்படுகின்றன.

(3) எண்ணெயாடுதல் :—எள்ளு, மணிலாக் கொட்டை, ஆமணக்கு, கொப்பரை முதலிய எண்ணெய் வித்துக்

களை வாணியர்கள் உலர்த்தி செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கிறார்கள். இந்த எண்ணெய்களை இப்போது நமது இராஜதானியில் சில இடங்களில் இயந்திரங்களின் உதவியால் தயாரிக்கிறார்கள். நமது நாட்டில் உபயோகத்திற்கு வேண்டியதுபோக மிகுந்த எண்ணெய் வெளி தேசங்களுக்கு அனுப்பப்படுகிறது. கிழக்குக்கரைப் பிரதேசத்தில் நல்லெண்ணெயை பதார்த்த பணியாரங்கள் செய்யவும் தேய்த்துக்கொள்ளவும் உபயோகிக்கிறார்கள். எளிய ஜனங்கள் கடலெண்ணெயில் பணியாரங்கள் செய்வதுமுண்டு. கடலெண்ணெயும் விளக்கெண்ணெயும் நமது இராஜதானியில் விசேஷமாய் விளக்குக்கு உபயோகப் படுத்தப்பட்டு வந்தது. நமது நாட்டில் உற்பத்தியாகும் எண்ணெயை விட்டு விளக் கெரிப்பதால் பணச்சிலவு அதிகங்கிடையாது. ஆபத்துமில்லை. கண்ணுக்கும் கெடுதியுண்டாக்குவதில்லை. கடலெண்ணையை இதரநாடுகளில் தாழ்ந்த சவுக்காரங்கள் செய்வது முதலான வேலைகளுக்கு உபயோகிக்கிறார்கள். கிழக்குக்கரை நாடுகளில் நல்லெண்ணெயை உபயோகிப்பதுபோல் மேற்குக்கரைநாடுகளில் தேங்கா யெண்ணெயை உபயோகிக்கிறார்கள். இவ்வெண்ணெய் மெழுகு வர்த்தி செய்யவும், சவுக்காரம் செய்யவும் உபயோகிக்கப்படுகிறது. எண்ணெய் எடுத்த பிறகு பிண்ணாக்கு ஆடு மாடுகளுக்கு உணவாகவும், புலங்களுக்கு நல்ல எருவாகவும் உபயோகப் படுகிறது. நமது இராஜதானியில் எண்ணை இறக்கும் இயந்திரங்கள் சென்னைப் பட்டணத்திலும் இன்னும் வடசர்க்கார் நாட்டில் சில இடங்களிலும் இருக்கின்றன.

(4) வெல்லம் சக்கரை முதலியன செய்தல். கரும்பைத் துண்டு துண்டாக நறுக்கி, ஆலையிலிட்டு சாறெடுத்து, அதை பக்குவமாய்க் காய்ச்சி வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியன செய்கிறார்கள். இவற்றுள் வெல்லம் செய்வது இலகுவா

கையால் பல இடங்களில் இத்தொழில் நடை பெறுகிறது. சர்க்கரை செய்வது கொஞ்சம் பிரயாசை யாகையால் அது நமது இராஜதானியில், கஞ்சம் ஜில்லாவிலுள்ள அசிகா, கோதாவரி ஜில்லாவிலுள்ள சாமல் கோட்டை, தென்னுற்காடு ஜில்லாவிலுள்ள நெல்லிக்குப்பம், மைசூரைச் சேர்ந்த அஷ்டக் கிராமம் முதலான இடங்களில் மாத்திரம் செய்யப்படுகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் பனஞ்சாற்றி லிருந்து பனைவெல்லமும், பனங்கற்கண்டும் செய்யப் படுகின்றன.

(5) சுருட்டு செய்தல் :— புகையிலையைப் பக்குவப்படுத்தி சுருட்டு செய்கிறார்கள். நமது இராஜதானியில் கோதாவரி நதியின் முகத்துவாரத்திலுள்ள லங்கைத் தீவுகளில் நேர்த்தியான புகையிலை பயிரிடுகிறார்க ளென்று மேலேசொன்னோம். இப்புகையிலையை இங்கே சுருட்டு செய்யாமல் ஐரோப்பாகண்டத்துப் பல தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். நமது இராஜதானியில், மதுரை ஜில்லாவில் திண்டுக்கல்லிலும், திரிச்சிராப்பள்ளி ஜில்லாவில் திருச்சிராப்பள்ளியிலுந்தான் சுருட்டு செய்யுந் தொழில் விசேஷமாய் நடக்கிறது. இதர நாடுகளுக்கு அனுப்பும் புகையிலையை இங்கேயே சுருட்டு செய்தால் அதனால் ஜனங்களுக்கு ரொம்ப ஆதரவாயிருக்கும். இதர நாட்டு ஜனங்கள் இங்கு உண்டாகும் புகையிலையை நயமாய் வாங்கி, அவற்றைச் சுருட்டாகச் செய்து, மறுபடி இங்கேயே அனுப்பி, அவற்றைவிற்பதினால் விசேஷ இலாபம் அடைகிறார்கள். புகையிலையின் காம்பு புலங்களுக்கு எருவாகிறது.

(6) தோல் பதனிடுதல் :—சென்னை இராஜதானியில் ஆடுமாடுகள் விசேஷமாய் உண்டென்று படித்திருக்கிறீர்கள். அவற்றின் தோல்களை பதனிடுந் தொழிலும் இங்கே நடத்தப்படுகிறது. தோலைப் பதஞ் செய்வதற்கு அவசியமாய் வே

ண்டிய ஆவாரம் பட்டை, கடுக்காய், சுண்ணும்பு, நல்லெ ண்ணே முதலிய பொருள்களும் நமது நாட்டில் ஏராளமாய்க் கிடைக்கின்றன. சில வருஷங்களாய் ஒரு நூதன முறை யாய்த் தோல்களைப் பதஞ் செய்து வருகிறார்கள். இதற்கு குரோம் டானிங் (Chrome Tanning) என்று பெயர். இப் படி தயார் செய்யப்பட்ட தோல் கொஞ்சம் விலை யேறப்பெற் றது. இதைத் தண்ணீ ரிறைக்கும் சால், தொண்டான் முத லியவற்றிற்கு விசேஷமாய் உபயோகிக்கிறார்கள். சாதாரண மாய்ப் பதனிடப்பட்ட தோலைக்காட்டிலும் இது இவ்வேலைக ளில் அதிக நாள் கிழியாம லிருக்கிறது. இதுகாலம் நடந்த ஐரோப்பிய சண்டையிலுள்ள யுத்த வீரர்களுக்கு குதிரைச் சேணம், சப்பாத்து முதலான தோலினுலாகக்கூடிய சகல வஸ்துக்களுக்கும் நமது இராஜதானியிலிருந்தே தோல் அனு ப்பப்பட்டது.

நமது இராஜதானியில் நெல்லூர், செங்கல்பட்டு, கோயம் புத்தூர் ஜில்லாக்களிலும் மைசூரிலும் தோல் பதனிடும் வேலை விசேஷமாய் நடக்கிறது.

(7) மீன் பிடித்தல் :—நமது இராஜதானியில் இத்தொ ழில் செய்யும் ஜனங்கள் கிழக்குக்கரையையும் மேற்குக்கரை யையும் அடுத்த ஜில்லாக்களில் விசேஷமாய் இருக்கிறார்கள். பிடிக்கப்பட்ட மீன்களில் உபயோகித்தது போக மிகுந்ததை உப்பிட்டு உலர்த்தி வெளிதேசங்களுக்கு அனுப்புகிறார்கள்.

(8) நீலிமருந்து செய்தல் :—அவுரித்தழையைப் பெரிய தொட்டிகளில் தண்ணீரில் அழுகவைத்து, அந்நீரை வடிக்க ட்டி, பக்குவமாய்க் காய்ச்சி ஆரவைத்தால் அது கட்டிப்போ கும். அதுவே நீலி மருந்து. அந்நியதேசத்துச் சாயங்கள் வருவ தற்கு முன் நமது நாட்டில் இத்தொழில் வெகுவாய் நடந்து வந்தது. இது தவிர மலைகளிலும் காடுகளிலும் கிடைக்கும்

பல செடி, கொடி, மரங்கள் முதலியவற்றின் வேர், பட்டை, தழை, காய் முதலியவற்றிலிருந்து சாயங்கள் தயார் செய்து கொண்டிருந்தார்கள். இத்தொழிலும் இப்போது நடை பெருகிறதில்லை.

(9) கயிறு, பாய் முதலியன பின்னுதல்:—நமது இராஜதானியில் தென்னை விசேஷமாய் உண்டாகிற திருவாங்கூர், கொச்சி, மலையாளம், தென்கன்னடம் முதலிய ஜில்லாக்களில் கயிறு, பாய் முதலியன பின்னுந்தொழில் நடக்கிறது. தேங்காயின் மேலிருக்கும் நாரை யுரித்து அதைத் தண்ணீரில் அழுக வைப்பார்கள். பின்பு அதை பக்குவமாய் நறுக்கித் தூசைப் போக்கி நார் எடுப்பார்கள். இந்நாரினுல் கயிறு பாய் முதலியவைகள் பின்னுகிறுர்கள். இக்கயிறுகள் மிகவும் உரப்பானது பற்றி பல வேலைகளுக்கு உபயோகிக்கப்படுகின்றன. தண்ணீரில் இவை சீக்கிரம் பழுதுபடாமலிருப்பதால் கப்பல், படகு முதலானவற்றில் விசேஷமாய் உபயோகப் படுத்தப்படுகிறது.

(10) காப்பிக்கோட்டை தயார் செய்தல் :—காப்பிச் செடிகளை அசைத்து அதிலிருந்து கீழேவிழும் பழங்களைச் சேர்த்து உலர்த்தி ஓட்டைப் போக்கி உள்ளிருக்கும் கொட்டையைச் சுத்தப்படுத்துவார்கள். இத்தொழில் காப்பிச் செடி உண்டாகும் பிரதேசங்களில் செய்யப்படுகிறது.

(11) தேயிலை பதஞ்செய்தல் :—தேயிலைச் செடியிலிருந்து இலைகளைப் பறித்து அனலிலாவது சூரிய உஷ்ணத்திலாவது பக்குவமாய் வாட்டி சிறு துண்டுகளாகக் கத்தரித்து பொட்டலங்களாகக் கட்டுகிறுர்கள்.

(12) சாராயங் காய்ச்சுதல் :—நீலகிரியில் பார்லி என்னும் அரிசியிலிருந்து ஒருவகைச் சாராயம் காய்ச்சுகிறுர்கள்.

நீலகிரியில் நடுவட்டம் என்னுமிடத்தில் உண்டாகும் சின்கோனுவிலிருந்து குயினு (Quinine) செய்கிருர்கள். இது முறைக்காய்ச்சலுக்கு ஏற்ற மருந்து.

(13) பாத்திரங்கள், நகைகள் செய்தல் :—இவ்விராஜ தானியில் கும்பகோணத்தில் செம்பு, பித்தளை, நல்ல ஈயம் இவற்ருல் சேர்த்தியான பாத்திரங்களும், திண்டுக்கல், பாலக் காடு இவ்விடங்களில் வெண்கலப் பாத்திரங்களும் செய்யப்படு கின்றன. தஞ்சாவூர் வெள்ளி வேலைக்கும் செட்டி (சடை) வேலைக்கும், திருச்சிராப்பள்ளி தங்க நகைகளுக்கும் பெயர் போனவை. கொஞ்சகாலமாய் சென்னப்பட்டணத்தில் வெண்மையாயிருக்கும் அல்யூமினியம் (Aluminium) என் னும் ஒருவகை உலோகத்தினுல் பலவித பாத்திரங்கள் செய்து வருகிருர்கள். இவ்விதப் பாத்திரங்கள் இலேசாயும் குறைந்த விலையுள்ளதாயும் இருக்கின்றதுபற்றி இவை நமது நாடு முழு வதும் பரவிவருகிறது. இப்பாத்திரங்களில் புளிப்பு, உப்பு சம்பந்தமான பதார்த்தங்கள் வைத்தால் சீக்கிரம் ஓட்டை யாய் விடுகிறது.

சென்னப்பட்டணத்தில் அபிரகத்தை கண்ணுடியைப் போல் ராந்தல் முதலியவற்றிற்கு உபயோகமாகும்படி செய்கி ருர்கள். கண்ணுடி எந்தெந்த விதமாய் உதவுகிறதோ அந் தந்த விதமாய் இதுவும் உபயோகப்படுகிறது. கண்ணுடி உடைந்து விடுவது போல் இது கீழே விழுந்தாலும், அதிக தீப்பட்டாலும் உடையாது. இதிலிருந்து மருந்தும் செய்கி ருர்கள்.

(14) கோணி பின்னுதல் :—நமது இராஜதானியில் முதல்தரமான சணல் உண்டாகிறதில்லை. சணலென்பது மெ லிந்து உயரமாய்க் கிளைகளின்றி வளரும் ஒரு செடியின் தண் டிலிருந்து எடுக்கப்படும் நார். இங்கு பயிரிடப்படும் சணலை

கயிறு திரித்து அதனால் கோணி பின்னுகிறார்கள். கோதாவரி ஜில்லாவில் ஏலூரிலும் விசாகப் பட்டணத்திற்கருகிலும் கோணி பின்னுகிறார்கள்.

(15) சவுக்காரஞ் செய்தல் (Soap) :—நமது இராஜதானியில் சவுக்காரஞ் செய்யும் ஒரு கைத்தொழிற்சாலை மலையாளம் ஜில்லாவில் கள்ளிக்கோட்டையில் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.

(16) ஓடு செய்தல் :—மேற்குக் கரையில் ஒலவக்கோடு, கள்ளிக்கோட்டை, மங்களூர் முதலான இடங்களில் நேர்த்தியான ஓடுகள் செய்கிறார்கள். அவ்வோடுகளுக்கு அவைகள் செய்யப்படும் ஊரின் பெயரை இட்டிருக்கிறார்கள்.

(17) கள் இறக்குதல் :—நமது இராஜதானி தென்னை, பனை, ஈந்து முதலிய மரங்களுக்குப் பெயர்பெற்றதென முன்னமே படித்திருக்கிறீர்களல்லவா! இவற்றிலிருந்து கள் இறக்கும் தொழிலால் சிலர் ஜீவிக்கிறார்கள். இவர்களுக்கு சாணார்கள் அல்லது மரமேறிகள் என்று பெயர். கள் இறக்குவதற்கும் அவற்றை விற்பதற்கும் இராஜாங்கத்தாரிடம் சுதந்திரம் பெறவேண்டும். கள் குடிப்பதினால் அநேக தீமைகள் உண்டாகின்றன. குடியினாலேயே நமது நாட்டு ஜனங்களில் பலர் ஏழையாயும் அகாலத்தில் மரணத்தை யடைபவர்களாயுமிருக்கிறார்கள். இக்குடியை விலக்கினால் நமது நாட்டு ஜனங்களில் பெரும்பாலர் க்ஷேமத்தையடைவார்கள். இத்தொழில் தென்னை உண்டாகும் மேற்குக் கரைஜில்லாக்களிலும் கிழக்குக் கரையில் தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலும், பனை மரங்களுக்குப் பெயர்போன திருநெல்வேலி ஜில்லாவிலும் விசேஷமாய் நடக்கிறது.

(18) உப்பு விளைவித்தல் :—கிழக்குக்கரையை யடுத்த ஜில்லாக்களில் உப்புவிளைவிக்கும் தொழிலில் சிலர் அமர்ந்

திருக்கிறார்கள். உப்பு விளைவிக்கும் சுதந்திரமும் இராஜாங்கத்தாருக்கே உரியது.

11. வர்த்தகம்.

இப்போது நமது இராஜதானியில் விளைவிக்கப்படும் பொருள்கள் இவைகளென்றும், உண்டாக்கப்படும் வஸ்துக்கள் இன்னின்னவைகளென்றும் தெரிந்து கொண்டோம். இவற்றுள் நமக்கு அத்தியாவசியமாய் வேண்டும் பொருள்கள் எல்லாம் ஒரே இடத்தில் கிடைப்பதில்லை. கிடையாத இடங்களுக்கு கிடைக்கும் இடத்திலிருந்து கொண்டுவர வேண்டியிருக்கிறது. இவ்வாறு அதிகமாய்க் கிடைக்குமிடங்களிலிருந்து பண்டங்களை வாங்கி அவை கிடையாத இடங்களுக்குக் கொண்டுபோய் விற்பதற்கு வர்த்தகம் (வியாபாரம்) என்று பெயர். இவ்வித வர்த்தகம் எந்த தேசத்தில் செழித்து ஓங்குகிறதோ அந்நாடே உலகத்தில் பிரசித்திபெற்றதாயிருக்கிறது. நமது தேசத்தையாளும் பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் முதல் முதலில் இங்குவியாபாரஞ் செய்ய வந்தவர்களே. இப்போது நமது நாட்டில் வியாபாரஞ் செய்பவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டிகளும், லப்பை என்னும் ஒரு ஜாதி மகம்மதியர்களும், ஐரோப்பியர்களுமே. இவர்கள் நமது இராஜதானியில் கிடைக்கும் பொருள்களை வாங்கி, அவைகள் கிடைக்காத இடங்களுக்கு அனுப்பி அங்கு விற்பதும், அங்கு கிடைக்கும் பொருள்களை இங்கு தருவித்து, விற்பதுமாகிய தொழிலைச் செய்து வருகிறார்கள். இவ்விதம் செய்வதில் இங்கிருந்து அயலூருக்கு அனுப்பப்படுவதற்கு ஏற்றுமதி என்றும், அயலூரிலிருந்து இங்கு தருவிக்கப்படுவதற்கு இறக்குமதி யென்றும் சொல்லப்படும். சுமார் 250 வருஷங்களுக்கு முன் அயல் நாட்டு வர்த்தகர்கள் இங்கு வந்து வியாபாரஞ் செய்யாத காலத்தில் நமது நாட்டில் கைத்தொழில்கள்

விசேஷமாய் நடை பெற்று வந்தது. அப்போது உள்நாட்டு வியாபாரமே (Inland trade) நடந்தது. நமது நாட்டுச் சரக்குகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகாமலிருந்ததால் ஜனங்களுக்குத் தேவை யென்றதே யில்லாமலிருந்தது. நமது நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யத் துவக்கி அந்நிய தேசங்களோடு வியாபாரம் (Foreign Trade) செய்ய ஆரம்பித்தது முதல் பண்டங்களின் விலை அதிகமாய் விட்டது. ஏழை ஜனங்கள் மிகவும் கஷ்டப்படும்படி நேர்ந்திருக்கிறது.

வியாபாரத்திற்கு வேண்டிய சாதனங்கள்:—

(1) முதற்பணம் வேண்டும்.

(2) சாலைகள், இருப்புப்பாதைகள், கால் வாய்கள், கப்பல்கள், படகுகள் முதலியன இருக்க வேண்டும்.

12. ஏற்றுமதி இறக்குமதி.

ஏற்றுமதி :—நமது இராஜதானியிலிருந்து விசேஷமாய் ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகளில் முக்கியமானவை தோல், பருத்தி, அரிசி, நிலக்கடலை, புகையிலை, காப்பிக்கொட்டை, தேயிலை, நீலிமருந்து, அபிரகம், மாங்கனிஸ் முதலியன சிறுபான்மை ஏற்றுமதியாகிறது.

இறக்குமதி :—நூல், நூலினால் செய்த துணிகள், சாயச் சரக்குகள், இரும்புச் சாமான்கள், இயந்திரங்கள் முதலிய உபயோகமான வஸ்துக்களும், சர்க்கரை, பிஸ்கோத்து, புட்டிப்பால், பெப்பர்மிட், சாராயம் முதலிய தின்பதற்குரிய சரக்குகளும், மண்ணெண்ணை (கிருஸனாயில்) தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, கண்ணாடிச் சாமான்கள், சவுக்காரம், பீங்கான்கள், இனாமல் பாத்திரங்கள், காகிதங்கள், புத்தகங்கள் முதலானவைகளும், ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களின் பல தேசங்களிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் இறக்குமதி செய்

யப்படுகின்றன. இறக்குமதியாகும் சரக்குகளின் மொத்த மதிப்பில் நமது தேசத்திற்கு வரும் துணிமாத்திரம் நாலில் ஒரு பங்குள்ளதாயிருக்கிறது.

13 போக்குவரவுக்குரிய சாதனங்கள்.

நமது இராஜதானிக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு போக்குவரவு செய்வதற்கு மூன்று முக்கிய சாதனங்களிருக்கின்றன. நமது நாட்டில் முன்காலத்தில் அதிக ஜன சங்கியை இல்லாததினால் விசேஷமாய்க் காடுகள் அடர்ந்திருந்தன. ஓரூருக்கும் மற்றோரூருக்கும் வெகு தூரமிருக்கும். அக்காலங்களில் நல்ல சாலைகளாவது இருப்புப்பாதைகளாவது கிடையாது. பிரயாணஞ் செய்வது மிகக்கஷ்டம்.

(1) சாலைகள் :—நமது இராஜதானியில் சென்னப்பட்டணத்திலிருந்துவடகிழக்காய் கல்கத்தாவுக்கு ஒரு சாலையும், தெற்காய் தென்கோடி வரையில் போய் அங்கிருந்து திருவநந்த புரத்திற்கு ஒன்றும், மேற்கே பாலக்காட்டுக் கணவாய் வழியாய்தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள குந்தாபுரம் வரையில் மற்றொன்றும், பீடபூமியிலுள்ள ஜில்லாக்களுக்கு வேறொன்றுமாய் அநேகசாலைகள் போடப்பட்டிருக்கின்றன.

இவைகளல்லாமல் அநேக கிளைப்பாதைகள் இவற்றினின்று அங்கங்கே பிரித்து உள்நாடு முழுவதும் போடப்பட்டிருக்கின்றன. முதலிலுள்ள படத்தைப் பார்த்து எந்தெந்த இடத்திலிருந்து எங்கெங்கு வண்டிப் பாதைகள் போகின்றன வென்றுதெரிந்து கொள்ளுங்கள். பெரியபட்டணங்களிலுள்ள பாதைகளும், முக்கியமான பாதைகளும் கப்பி (கிரேவல்) நின்றுய்ப்போடப்பட்டிருக்கின்றன. கிராமாந்தரங்களில் சாதாரண மண்ணினால் பாதைகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதப்பாதைகளில் மழைகாலங்களில் வண்டிகள் போவது

மிகக்கடினம். பாதைகளெல்லாம் இராஜாங்கத்தாரால் மேல் பார்வை பார்க்கப்பட்டு, அப்போதைக் கப்போது சீர்திருத்தப் பட்டுவருகின்றன. பெரிய பாதைகளைக் குறுக்கிடும் ஆறுகளில் அங்கங்கே பாலங்கள் கட்டியிருக்கிறார்கள். இப்போது தூர மாயுள்ள இடங்களுக்கு அதி சீக்கிரம் போகும் மோட்டார் வண்டிகள் சுலபமாய் ஓடும்படி சில பாதைகளை கரடு முரடில் லாமல் சமப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

(2) இருப்புப்பாதைகள் :—இருப்புப் பாதைகள் விளை பொருள் அதிகமாயுள்ள இடங்கள், கைத்தொழில், வியாபா ரம் முதலியன விசேஷமாய் நடக்கும் இடங்கள், அதிக ஜன ங்கள் உள்ள பெரிய பட்டணங்கள் . மூலமாய் போடப்பட் டிருக்கின்றன. நமது இராஜதானியில் ஓடும் இருப்புப்பாதை கள் இரண்டு. இவற்றுள் ஒன்று சென்னை தென் மஹாராஷ் டிர இருப்புப்பாதை (M & S. M Ry.) மற்றொன்று தென் னிந்தியா இருப்புப்பாதைS. I. R.

சென்னை தென்மகாரராஷ்டிர இருப்புப்பாதை.

சென்னை தென்மாகாராஷ்டிர இருப்புப்பாதையின் ஒரு பிரிவு சென்னப்பட்டணத்தில் ஆரம்பித்து கிழக்குக்கடற்கரை யோரமாய்நெல்லூர், குண்டூர் கிருஷ்ணா, கோதாவரி, விசாகப் பட்டணம் ஜில்லாக்கள் வழியாய்ப்போய் விசாகப்பட்டணத் திலுள்ள வால்தேர்என்னுமிடத்தில் கல்கத்தாவுக்குப்போகும் இருப்புப் பாதையில் கலக்கிறது. இப்பாதை கிருஷ்ணா ஜில்லா விலுள்ள பெஜவாடா என் னுமிடத்தில் நிஜாம்இராஜ்ஜியஇரு ப்புப்பாதையையும், மேற்குக் கரையிலுள்ள மார்மகோவாவி லிருந்துபல்லாரி, கர்நூல் ஜில்லாக்கள் வழியாய் வரும் இரு ப்புப் பாதையையும் சந்திக்கிறது.

மற்றொரு பிரிவு சென்னப்பட்டணத்திலிருந்து ஏறக் குறைய மேற்காய் மைசூர் இராஜ்ஜியத்திலுள்ள பெங்களூர்

வரையில் செல்லுகிறது. இப்பாதையில் வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள அரக்கோணத்திலிருந்து ஒரு பாதை பிரிந்து வட ஆற்காடு, கடப்பை, பல்லாரி ஜில்லாக்கள் வழியாய் பம்பாய்க்குப் போகிறது. இதன்பிறகு காட்பாடியிலிருந்து ஒரு பாதை பிரிந்து கடப்பை, அநந்தபுரம், பல்லாரி ஜில்லாக்கள் வழியாய் மேலே சொன்ன பம்பாய்க்குப் போகும் பாதையைக் குண்டக்கல்லில் கலக்கிறது. பெங்களூரிலிருந்து ஒருபாதை மார்மகோவாவிலிருந்து கிழக்கே போகும் பாதையை ஹூப்ளியில் கலக்கிறது.

தென்னிந்தியா இருப்புப்பாதை :-- S. I. R. இதுவும் சென்னையில் புறப்பட்டு ஒரு பாதை தெற்காய் செங்கல்பட்டு தென்னுற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்கள் வழியாய்ப் போய் பாம்பன் கால்வாயைக்கடந்து இராமேசுவரம் தீவிலுள்ள தனுஷ்கோடி வரையில் செல்லுகிறது. அங்கு கப்பலேறி இலங்கைத் தீவிலுள்ள தலமன்னர் என்னுமிடத்தைச் சேர்ந்து அங்கிருந்து இலங்கை இராஜாங்க இருப்புப்பாதை மூலமாய், கொளம்பு போக வசதி யேற்பட்டிருக்கிறது. நமது இராஜதானியிலிருந்து இங்கிலாந்து முதலான மேற்கேயுள்ள நாடுகளுக்குப் போக விரும்புகிறவர்கள் இவ்வழி ரொம்ப அநுகூலமாயிருப்பதால் இதையே நாடுகிறர்கள்.

அடுத்த பக்கத்திலுள்ள சித்திரத்தைப் பாருங்கள். இதுவே பாம்பன கால்வாயில் நிர்மாணம் பண்ணியிருக்கும் பாலம். இது மிகவும் அற்புதமானது. இது இரண்டு பாதிகளாலானது. புகைவண்டிகள் போகும்போது அவ்விருபாதிகளும்சேர்ந்து வழியுண்டாக்குவதும், சிறு கப்பல்கள் வரும்போது அப்பாதிகள் மேலே உயர்ந்து அவைகளுக்குப் பாதை விடுவதுமாய் அமைக்கப்பட்டிருக்கிறது.



பாம்பன் பாலம்.

மதுரையிலிருந்து இப்பாதை தெற்காய் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மணியாச்சி வரையில் போய் இரண்டு கிளைகளாய்ப்பிரிந்து ஒன்றுகிழக்குக் கடற்கரையிலுள்ள தூத்துக்குடிக்கும், மற்றொன்று மேற்குத் தொடர் மலையைக்கடந்து திருவாங்கூர் இராஜ்ஜியத்தில் மேற்குக் கடற் கரையிலுள்ள கொல்லத்திற்கும் போகிறது. இங்கு மேற்குத் தொடரை கடப்பதற்காக பல இடங்களில் மலையைத் துளைத்திருக்கிறார்கள். அவ்வாறு துளைத்திருப்பதில் ஓரிடத்தில் சுமார் 2300 அடி தூரம் மலையைக்குடைந்து அதன் மூலமாய் பாதை போடப் பட்டிருக்கிறது.

மற்றொரு பாதை வடஆற்காடு ஜில்லாவிலுள்ள ஜோலார்ப் பேட்டை வரையில்வரும் சென்னை தென் மஹாராஷ்டிர இரு

ப்புப்பாதையின் தொடர்ச்சியாய் சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்கள் வழியாய் ஓடி மேற்குத் தொடர்ச்சி மலையை பாலக்காட்டுக் கணவாய் வழியாய்க்கடந்து மலையாளம், தென் கன்னடம் ஜில்லாக்கள் வழியாய் தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள



மங்களூர் வரையில் போகிறது. இதினின்று போத்தனூரில் ஒரு பாதை பிரிந்து கோயம்புத்தூர் வழியாய் நீலகிரி மலையடி வாரத்திலுள்ள மேட்டுப்பாளையம் வரையில் போய்

70-வது பக்கத்தில் காட்டியிருக்கும் நீலகிரி இருப்புப்பாதை யை சந்திக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்த பிறகு, இப்பாதை இரண்டாகப் பிரிந்து ஒரு பிரிவு வடக்கே மேலே சொன்ன மங்களூருக்கும், மற்றொன்று தெற்கே கொச்சிக்கும் போகின்றது. இவை யல்லாமல் அநேக சிறிய கிளைகள் இப்பெரிய பாதைகளிலிருந்து பிரிந்து உள் நாட்டில் பரவியிருக்கின்றன.

முன்பக்கத்திலுள்ள படத்தைப்பார்த்து இவ்விருப்புப் பாதைகளிலுள்ள கிளைப்பாதைகளையும் ஜங்ஷன்களையும் நன் ருய்த் தெரிந்து கொள்ளுக.

இருப்புப்பாதையினல் ஏற்பட்டிருக்கும் நன்மைகள்.

ஜனங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதி சீக்கிரத்தில் சொற்ப செலவில் போக உதவுகிறது. இருப்புப் பாதைகள் ஏற்படுமுன், ஜனங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடத்திற்குப் போக, அதிககாலமும் ரொம்ப பணச்சிலவும் செய்ய வேண்டி யிருந்ததுடன், ரொம்ப சிரமப்படவும் வேண்டியிருந்தது. வழியில் திருடபயமும் காட்டுமிருகங்களி ஞல் அபாயமும் நேரிடுவதுண்டு. கடிதப்போக்குவரவு நடப் பதற்கும், நாஞபக்கங்களில் விளையும் அல்லது தயாரிக்கப்ப டும் சரக்குகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொ ண்டு போவதற்கும், சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனல் பண்டங்கள் எங்கும் ஏறக்குறைய ஒரே விலையாய் விற்கிறது. இந்த இருப்புப்பாதைச் சங்கத்தில் (Railway Company) ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலை செய்து பிழைக்கிருர்கள்.

(3.) கால்வாயகள் :-நமது இராஜதானியில் போக்குவருத் துக்கு மிகவும் அநுகூலமான கால்வாய்கள் இரண்டு. இவற்றுள் ஒன்று கிழக்குக் கரையோரமாயும், மற்றொன்று மேற்குக்கரை யோரமாயும்இருக்கின்றன.கிழக்குக்கடற்கரையோரமாய்இருக்

கும் கால்வாய் சென்னபட்டணத்திலிருந்து வடக்கே நெல்லூர் ஜில்லாவில்கடலோரத்திலிருக்கும்பழவேற்காட்டுஏரியின் மூலமாய் நெல்லூர், குண்டூர், கிருஷ்ணு ஜில்லாக்கள்வழியாய் 195-மைல் தூரம் சென்று கிருஷ்ணு நதியின் கால்வாயோடு கலக்கிறது. இக்கால்வாய் சென்னையிலிருந்து தெற்கே தென்னுற்காடுஜில்லா வழியாய் 66-மைல் தூரம் செல்லுகிறது. இக்கால்வாயை நாற்பது வருஷங்களுக்கு முன் சென்னையில் கவர்னராயிருந்த பக்கிங்காம் பிரபு, தாது வருஷ பஞ்ச காலத்தில் ஏழை ஜனங்களுக்கு ஆகாரம் கிடைக்காததைக் கண்டு, அவர்களைக் காப்பாற்ற எண்ணி, இராஜாங்கச் சிலவில் வெட்டி வைத்தார். அதனுல் இக்கால்வாய்க்கு பக்கிங்ஹாம் கால்வாயென்று பெயருண்டாயிற்று. இக்கால்வாய் சமுத்திரத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால் இதன் தண்ணீர் உப்பாயிருக்கிறது. இதன் மூலமாய்த்தான் சென்னபட்டணத்திற்கு வடக்கிலுள்ள ஜில்லாக்களிலிருந்து அரிசி,விறகு,சுண்ணும்புக் கிளிஞ்சல் முதலியன படகுகளில் விசேஷமாய் வந்து கொண்டிருக்கின்றன.

மேற்குக் கடற்கரை யோரத்தில் 28-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் கழிகள், போக்குவருத்துக்கு உபயோகப்படும்படி, இராஜாங்கத்தார் கால்வாய்கள் வெட்டி அவைகளை ஒன்ருேடொன்று சேர்த்திருக்கிருர்கள். இக்கழி வடக்கே தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள உடுப்பியில் ஆரம்பித்து தெற்கே கன்னியாகுமரி முனை வரையில் செல்லுகிறது. இவ்வாறு சேர்ப்பதற்காக கொல்லத்திற்கும் திருவனந்த புரத்திற்கும் இடையில் வார்கால மலையை சுமார் 3200 அடி தூரம் துளைத்திருக்கிருர்கள். இக்கழிகள் அங்கங்கே கடலோடு சம்பந்தப் பட்டிருக்கின்றன. இவ்வாறு கடலோடு சேருமிடத்தில் இக்கழிகளைப் பார்த்தால் சமுத்திரம்

போலவே தோன்றும். திருவாங்கூரில் ஓரிடத்தில் இக்கழி 30 மைல் நீளமும் 10 மைல் அகலமும் உள்ளதாயிருக்கிறது. இக்கடற்கரையை யடுத்த ஜில்லாக்களிலுள்ள ஜனங்கள்



மேற்குக்கரைக் கழிகள்.

இங்கு இருப்புப்பாதை ஏற்படுமுன் இக்கழிகள் மூலமாகவே பிரயாணஞ்செய்து வந்தார்கள். இப்போதும் இருப்புப் பாதை போடப்படாத இடங்களில் இக்கால்வாயே போக்கு வருத்துக்கு உபயோகப்பட்டு வருகிறது.

உள்நாட்டில் கடப்பை, கர்நூல் ஜில்லாக்களில் ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. அது கடலுடன் சம்பந்தப்படாமலிருப்பதாலும், அதில் வருஷத்தில் சிலகாலம் தண்ணீரில்லாமற் போவதாலும், போக்கு வருத்துக்கு அநுகூலமில்லை.

5. துறைமுகப்பட்டணங்கள்.

27-வது பக்கத்தில் சொல்லப்பட் டிருக்கிறபடி கிழக்குக் கடற்கரை யோரமாயாவது மேற்குக்கடற்கரை யோரமாயாவது சென்னப்பட்டணந்தவிர கப்பல்கள் கரைக்கருகில்வர ஏதுவில்லை. மற்ற துறைமுகப் பட்டணங்களில் கப்பல்களை கரைக்கு நாலைந்து மைல் தூரத்தில் நிறுத்த வேண்டியிருப்பதால் கப்பலிலிருந்து கரைக்கும் கரையிலிருந்து கப்பலுக்கும் சரக்குகளையும் ஜனங்களையும் படகுகளின் மூலமாகவே கொண்டுபோகவேண்டி யிருக்கிறது. இத்துறைமுகப்பட்டணங்களில் ஏற்றுமதி, இறக்குமதி விசேஷமாய் நடக்கின்றன.

இத்துறைமுகப் பட்டணங்களில் கிழக்குக்கரையில் கோபாலபுரம், விசாகப்பட்டணம், காகினடா, மசூலிப்பட்டணம், சென்னப்பட்டணம், புதுச்சேரி, நாகப்பட்டணம், தூத்துக்குடியும், மேற்குக்கரையில் மங்களூர், தலச்சேரி, கள்ளிக்கோட்டை, கொச்சியும், முக்கியமானவை. கிழக்குக்கரை ஜில்லாக்களில் விசேஷமாய் விளையும் பண்டங்கள் எவை ? மேற்குக் கரை நாடுகளில் விசேஷமாய் உண்டாகும் பொருள்கள் எவை ? ஆகையால் கிழக்குக் கரையில் இருக்கும் துறைமுகப் பட்டணங்களி லிருந்து என்ன ஏற்றுமதி யாகும் ? மேற்குக்கரை நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப் படுபவை என்ன ?

14. ஜனத்தொகை.

நமது இராஜதானியில் 1911-ம் வருஷத்து ஸென்ஸஸ் கணக்குப்படி 4,20,000,00 ஜனங்கள் வசிக்கிறார்கள். இதில் ஏறக்குறைய மூன்றிலிரண்டு பங்கு பெண் பிள்ளைகளும் ஒரு பங்கு ஆண் பிள்ளைகளு மிருக்கிறார்கள். இதில் ஆயிரத்தில்

சுமார் 120-பேர் புருஷர்களும் 10 பேர் ஸ்திரீகளும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். சென்னை இராஜதானியின் தென் பாகமும், அதிக மழையுள்ள மேற்குக்கரை நாடுகளும் மிகவும் செழிப்புள்ளவையாயிருப்பதால் அங்கு சதுரமைலுக்கு 430 பேர் விதமும், கிழக்குக்கரை நாடுகளில் சுமார் 400 பேர் வித



மும், உள்நாட்டில் சுமார் 300 பேர் விதமும், மழையில்லாத தக்ஷிண பீட பூமியில் 145-பேர் விதமும், வட சர்க்கார் மலை நாட்டில் 80-பேர் விதமும் வசிக்கிறார்கள். மேலேயுள்ள படத்தை நிலஸ்திதி, சீதோஷ்ண ஸ்திதி, முதலானவற்றைப்

போதிக்கும் படத்தோடு ஒத்திட்டுப் பார்த்தால், இயற்கைக் குணங்கள் ஜனங்களை எவ்வாறு பிரித்திருக்கின்றனவென்று தெரியும்.

மேலே சொன்ன ஜனங்களில் இந்துக்கள், மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் முதலிய பலவகைப்பட்ட ஜாதியார்கள் இருக்கிறார்கள். மொத்த ஜனசங்கியையில் 100-ல் 89-பேர்



இந்துக்களும், 7-பேர் மகம்மதியர்களும், 3-பேர் கிறிஸ்தவர்களும், மற்றது இதரர்களுமாய் இருக்கிறார்கள். இவ்வித ஜாதிகளில் ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகள் அநேகம் உண்டு.

15. பாஷை.

ஜாதிகள் அநேகம் இருப்பது போலவே அவர்கள் பேசும் பாஷைகளும் பலவகைப் பட்டவையா யிருக்கின்றன. அவற்றுள் முக்கியமாய்ப் பேசப்படும் பாஷைகள், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்று சொல்லப்படும் நான்கு திராவிட (பழமையான) பாஷைகள். மகம்மதியர்கள் பேசும் பாஷை ஹிந்துஸ்தானி. இவர்களில் கிழக்குப் பிரதேசங்களிலுள்ள லப்பைகள் தமிழும், மேற்குக் கரைப் பிரதேசங்களிலுள்ள மாப்பிள்ளைகள் மலையாளமும் பேசுகிறார்கள். வடமேற்குக் கோடியில் ஒரு பாகத்தில் துளுவம் பேசப் படுகிறது. வடகிழக்குக் கோடியின் ஒரு பகுதியில் ஒரியா பாஷை பேசப் படுகிறது. இராஜாங்க பாஷை இங்கிலீஷா யிருப்பதால் இப்பாஷை இராஜதானி முழுவதும் படித்தவர்களால் பேசப்படுகிறது. முன்பக்கத்திலுள்ள படத்தைப்பார்த்து மேலே சொன்ன பாஷைகள் பேசப்படு மிடங்களைத். தெரிந்து கொள்ளுக.

16. துரைத்தனம்.

நமது சென்னை இராஜதானி இந்து தேசத்தின் ஒரு பிரிவு என்று மேலே சொன்னோம். இவ்விந்தியா தேசம் இங்கிலாந்தின் ராஜாவாகிய ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியின் ஆளுகைக் குட்பட்டிருக்கிறது. இம்மன்னருக்குப் பல நாடுகளிருப்பதால் இவ்விந்தியா தேசத்தின் இராஜ்ஜிய நிர்வாகஞ் செய்ய இங்கிலாந்தில் இந்தியா மந்திரி (Secretary of State for India). என்ற ஒரு அதிகாரியை ஏற்படுத்தியிருக்கிறார். இங்கு நமது தேசத்தில் நமது சக்கிரவர்த்திக்குப் பிரதிநிதியாய் வைஸ்ராய் (ராஜப்பிரதிநிதி) என்னும் பட்டப்பெயர் கொண்ட ஒருவர் டில்லிமாநகரிலிருந்து இத்தேசம்

முழுமையும் ஆளுகிறார். இவருக்குக் கீழ் ஒவ்வொரு இராஜதானியையும் ஆள் ஒரு கவர்னர் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார். நமது இராஜதானியை இப்போது ஆளும் கவர்னர் பெண்டு லண்டு பிரபு (Lord Pentland). இக்கவர்னருக்கு இராஜ்ஜிய நிர்வாகத்தில் ஒத்தாசைசெய்ய ஆலோசனை சபையார் மூன்று பெயர்கள் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். இவர்களில் இருவர் சிறுவயதிலேயே இந்தியாவுக்கு வந்து கலெக்டர் உத்தியோகம் முதல் படிப்படியாய் இந்த உத்தியோகத்திற்கு வரும் வரையில், ஜனங்களுடைய நிலைமையையும்,இராஜ்ஜிய தந்திரங்களையும் நன்றாய் அறிந்த ஆங்கிலேயர்கள். மற்றொருவர் வெகுதிறமையுள்ள ஒரு ஸ்வதேசி. இவர்கள் மூவரும், கவர்னரும் ஐந்து வருஷத்திற் கொருமுறை மாறவேண்டுமென்று சட்ட மேற்படுத்தப்பட் டிருக்கிறது. கவர்ன ரொருவரே இராஜதானி முழுவதும் நேரில் ஆளுவது அஸாத்திய மாகையால், இவ்விராஜதானியைப் பல ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த ஜில்லாக்கள் ஒவ்வொன்றையும் பரிபாலனஞ் செய்ய ஒரு கலெக்டர் அல்லது டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டும், (ரிவினியூ அல்லது வரிவசூல் செய்யும் தொழிலால் கலெக்டரென்றும், குற்றங்களை விசாரிக்கும் தொழிலால் டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டு என்றும் பெயர்) நியாய விசாரணைசெய்ய ஒரு ஜில்லா ஜட்ஜியும் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். ஜில்லாவைச் சரிவரப் பரிபாலிக்க கலெக்டருக்கு ஒத்தாசையாய் ஸப் கலெக்டர், டிப்டிகலெக்டர், டிஸ்டிரிக்டு மெடிகல் ஆபீஸர், டிஸ்டிரிக்டு எஞ்சினீயர், போலீஸ் சூப்பரின் டெண்டெண்ட், டிஸ்டிரிக்டு பாரஸ்டு ஆபீசர் முதலியவர்கள் இருக்கிறார்கள். இஜ்ஜில்லாக்கள் ஒவ்வொன்றும் பல தாலூகாக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தாலூக்காவும் ஒவ்வொரு தாசில்தாராலும், இத்தாலூகாக்கள் ஒவ்வொன்றும் அனேக கிராமங்களாகப்

101 - 104 PAGES MISSING IN BOOK

கைத்தொழில் :—சாமல் கோட்டையில் வெல்லம், சர்க்கரை முதலியவைகள் செய்கிறார்கள்.

ஜனத்தொகை 14,46,000.

பட்டணங்கள் :—இந்த ஜில்லாவின் முக்கியப்பட்டணம் காகிநாடா. இது ஒரு துறைமுகப் பட்டணம். இப்பட்டணத்திற்கு ஸாமல்கோட்டையி லிருந்து ஒரு கிளை இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இப்பட்டணத்திலிருந்து கோதாவரி ஜில்லாவில் விளையும் புகையிலேயும் மற்ற தானியங்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு பிட்டாபுரம் மஹாராஜாவால் நடத்தப்படும் ஒரு கலாசாலே இருக்கிறது. இவ்வூரில் ஒருவித மெல்லிய துணி நெய்கிறார்கள்.



கோதாவரி நதியின் மீதுள்ள பாலம்.

ராஜமஹேந்திரபுரம் :—இது கோதாவரி நதிக்கரையில் இருக்கிறது. இப் பட்டணம் கோதாவரி ஜில்லாவின் பிரதான நகரம். இதில் துரைத்தனத்தார் உபாத்திமைத் தொழிலேப் பயிற்றுவிக்கும் ஒரு கலாசாலே வைத்து நடத்தி வரு

ளுர்கள். இந்த வூருக்கருகில் கோதாவரி நதியைக்கடக்க ஒரு பாலம் கட்டி யிருக்கிறுர்கள்.

இந்த ஜில்லாவில் பிரஞ்சுக்காரருக்கு சொந்தமான ஏனும் என்னும் ஒரு சிறியப்பட்டணம் இருக்கிறது.

4. கிருஷ்ண ஜில்லா.

இது கோதாவரி ஜில்லாவிற்குத் தெற்கிலிருக்கிறது. மலைகள், ஆறுகள், ஏரிகள் :—கிருஷ்ண நதி இந்த ஜில்லா வழியாய் ஓடுகிறது. இந்நதிக்கு எங்கே அணைகட்டியிருக்கிறுர்கள்? கோல்லேரு ஏரி இந்த ஜில்லாவிலிருக்கிறது.

விளைபோருள் :—நெல், சோளம், புகையிலை, அவுரி முதலியவைகள் உண்டாகின்றன. பெஜவாடாவில் கட்டிடத்திற்கு உபயோகப்படக்கூடிய கருங்கல்லுகள் கிடக்கின்றன.

கைத்தோழில் :—மசூலிப்பட்டணத்தில் சீட்டித் துணியும், ஏலூரில் ரத்தினக்கம்பளங்களும் நெய்கிறுர்கள்.

ஜனத்தொகை 20,00,000.

பட்டணங்கள் :—மசூலிப்பட்டணம் (பந்தர்) இது கிருஷ்ண ஜில்லாவிலுள்ள துறைமுகப்பட்டணம். இது ஆதிகாலம் முதல் பந்தர் சீட்டி என்னும் ஒருவகைச் சீட்டித் துணிக்குப் பெயர் போனது.

பேஜவாடா :—இது கிருஷ்ணநதியின் கரையிலிருக்கிறது. முன்பு சிறிய கிராமமாயிருந்த இவ்வூர் வருஷாவருஷம் கிருஷ்ண நதியினுல் கொண்டு ஒதுக்கப்பட்ட வண்டல் மண் சேர்ந்து இப்போது பெரிய பட்டணமாயிருக்கிறது. இது ஒரு பெரிய ரயில்வே ஜங்ஷனுனதால் இங்கு வர்த்தகம் மிகுதியாய் நடக்கிறது.

5. குண்டூர் ஜில்லா.

இது கிருஷ்ணா ஜில்லாவிற்குத் தெற்கிலிருக்கிறது.

மலைகள் ,ஆறுகள்:—கிழக்குத் தொடர்ச்சி மலை இந்த ஜில்லாவில் வியாபித்திருக்கிறது. கிருஷ்ணா நதி இஜ்ஜில்லாவின் வடபாகத்தில் ஓடுகிறது.

விளைபொருள் :—நெல், சோளம், கம்பு,பருத்தி, புகையிலை, எள்ளு,அவுரிமுதலியவைகள் விளைவிக்கிறார்கள்.

ஜனத்தொகை:—17, 00, 000.

பட்டணங்கள்:—குண்டூர் முக்கிய பட்டணம். இங்கு பருத்தி வியாபாரம் விசேஷமாய் நடப்பதால் இவ்வூரில் பஞ்சாலைகள் அநேகம் இருக்கின்றன.

தெனாலி:—இவ்வூர் அரிசிக்குப் பெயர் போனது. இங்கு நெல்குத்தும் இயந்திரங்கள் பல உண்டு.

மங்களகிரி :—இதில் ஒரு விஷ்ணு ஆலயம் இருக்கிறது.

ஓங்கோல்:—இது இந்த ஜில்லாவின் தெற்கேயுள்ள ஒரு முக்கிய பட்டணம். இது பெரியஜாதிமாடுகளுக்குப் பெயர்போனது.

கிழக்குக்கரையின் தெற்குப் பிரதேசம்.

6. நெல்லூர் ஜில்லா.

இது செங்கல்பட்டிற்கு வடக்கேயும் குண்டூர் ஜில்லாவிற்குத் தெற்கேயும் இருக்கிறது.

மலைகள், ஆறுகள், ஏரிகள் :—கிழக்குத் தொடர்ச்சிமலை இந்த ஜில்லாவிற்கும் கடப்பை, கர்நூல் ஜில்லாக்களுக்கும் மத்தியில் எல்லையா யிருக்கிறது. இதற்கு இந்த ஜில்லாவில் வெலிகோண்டா என்று பெயர்.

வடபெண்ணையாறு இந்த ஜில்லாவில் ஓடுகிறது. பழவேற்காடு ஏரி இந்த ஜில்லாவின் தெற்கே கடற்கரையோரத்திலிருக்கிறது.

விளைபொருள்:—நெல், சோளம், கம்பு, அவுரி முதலியவைகள் பயிரிடப்படுகின்றன. அபிரகம் கிடைக்கின்றது. இந்த ஜில்லா பெரியஜாதி மாடுகளுக்குப் பெயர்போனது.

கைத்தொழில்:—இந்த ஜில்லாவில் நெசவுத் தொழிலும், தோல் பதனிடுதலும் நடக்கின்றன.

ஜனத்தொகை 13,28,000.

பட்டணங்கள் :—நெல்லூர் இது இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இது நேர்த்தியான துணிகளுக்கும், அரிசிக்கும் பெயர் பெற்றது.

வெங்கடகிரி: இப்பட்டணத்தில் இந்த பெயர் கொண்ட ஜமீனின், ராஜா வசிக்கிறார்.

7. சென்னப்பட்டணம் ஜில்லா.

சென்னப்பட்டணம் :—இது நமது ராஜதானியின் பிரதான நகரம். இது கிழக்குக் கடற்கரையோரத்தில் இருக்கிறது. இப்பட்டணமே மற்ற பட்டணங்களைவிட அதிக ஜனங்களை உடையது. இது சுமார் 9 மைல் நீளமும், 4 மைல் அகலமுமுள்ளது. இப்பட்டணத்தின் மூலமாய் கூவம், அடையாறு என்னும் இரண்டு சிற்றாறுகள் ஓடி கடலில் விழுகின்றன. இவற்றில் வெய்யிற் காலத்தில் தண்ணீர் இராது. இவ்விரண்டுள் கூவம் நதியானது பட்டணத்தின் சாக்கடை தண்ணீருக்கு போக்கு வழியா யிருக்கிறது; தவிர இது பக்கிங்காம் கால்வாயோடு சம்பந்தப்பட்டிருப்பதால் படகுகள் ஷை பட்டணத்தின் நடுவே போக்குவரத்து செய்ய அநுகூலமா யிருக்கிறது. இவை தவிற இவ்வாற்

ழின் இரு பிரிவுகளுக்கும் நடுவில் ஒரு தீவு இருக்கிறது. இது பிள்ளைகள் பந்து விளையாடுவதற்கும், குதிரைப் பந்தயம் முதலியன நடத்துவதற்கும் உபயோகப்படுகிறது.

இப்பட்டணத்திற்கு ஏழுமைல் தூரத்திலுள்ள புழலேரியிலிருந்து குழாய் மூலமாய் நல்ல ஜலம் கொண்டுவரப்படுகிறது. இது முக்கிய பட்டணமாயிருப்பதால் நமது இராஜாங்கத்தைச் சேர்ந்த அநேக ஆபீசுகளும் இன்னும் பல பெரிய கட்டிடங்களும் இருக்கின்றன. இவற்றுள் செண்டு ஜியார்ஜ் கோட்டை பட்டணத்திற்கு நடுவில் இருக்கிறது. இதில் ராணுவத்தைச் சேர்ந்த உத்தியோக சாலைகளும், ஐரோப்பிய யுத்த வீரர்களும் இருக்கிறார்கள். இக்கோட்டைக்கு வடக்கே இவ்விராஜ தானியைச் சேர்ந்த ஜில்லாக்களில் இருக்கும் நியாயஸ்தலங்களுக்கு மேலான ஹைகோர்ட்டு என்ற நியாஸ்தலம் இருக்கிறது. இந்த நியாயஸ்தலத்திற்குள் இதிலிருந்த நியாயாதிபதிகளில் மிகவும் கீர்த்தி பெற்ற ஸர். டி. முத்துஸாமி அய்யரின் பிரதிமை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஹைகோர்ட்டின் சிகரங்களிலொன்றில் 166 அடி உயரத்தில் விளக்குக்கூண்டு (Light house) ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இக்கோர்ட்டுக்கு வடக்கேயுள்ள பாகத்திற்கு ஜியார்ஜுடவுன் என்று பெயர். இங்கே கடற்கரையோரமாய் அனேக பாங்கிகளும், வர்த்தகசாலைகளும், கடல் தீர்வை வாங்கும் கஸ்டம் ஆபீஸும், சென்னை கலெக்டர் ஆபீஸும், ஜெனரல் போஸ்டாபீஸும் இருக்கின்றன. இவை யன்றி பச்சையப்பன் காலேஜ், கிறிஸ்டியன் காலேஜ் என்ற இரண்டு கலாசாலைகளும் இருக்கின்றன. இந்த ஜியார்ஜுடவுன் என்னும் பாகம் மிகவும் ஜன நெருக்கமுள்ளது.

கோட்டைக்குத் தெற்கே கடற்கரை யோரத்தில் M. A., B. A., முதலிய பரீக்ஷைகளில் தேறினவர்களுக்குப்

பட்டம் கவர்னர் அவர்களால் கொடுக்கப்படும் ஸெனெட் ஹௌஸ், (சர்வகலாசாலை) பிரஸிடென்ஸி காலேஜ், ரிவின்யூ போர்டாபீஸ், முதலியன இருக்கின்றன.

இச்சென்னை ஸர்வகலாசாலையைச்சேர்ந்தமேலேசொன்ன ஸாதாரணகல்வி கற்பிக்கும் காலேஜ்ஜுகள் அல்லாமல் நியாயம் (Law College), வைத்தியம் (Medical College), சிற்பம் (Engineering College), சித்திரம் (Shool of Arts), முதலியவைகளைப் பயிற்றுவிக்கும் கலாசாலைகளும், நட்சத்திராபீஸும், (Observatory) இவ்விராஜதானியைச் சேர்ந்த முக்கிய ஆபீஸுகளும் இருக்கின்றன. ஜனங்கள் உல்லாஸமாய் உலாவிவர ராபின்ஸன் பார்க்கு, பீபில்ஸு பார்க்கு, நேபியர் பார்க்கு என்ற மூன்று சிங்காரத் தோட்டங்க ளிருக்கின்றன. இவையன்றி ஜனங்களின் கண்காக்ஷிக்கு பீபில்ஸு பார்க்கில் உயிருள்ளவைகளும், மியூஸியத்தில் உயிரில்லாதவைகளும், அக்குவயிரியத்தில் (மீன்சாலை) கணக்கில்லாத மீன் வகைகளும், இராஜாங்கத்தார் சேகரித்து வைத்திருக்கிறார்கள்.

இவற்றுள் மியூஸியத்தில் கன்னிமேரா புஸ்தகசாலையும், (Connemara Library) ஐரோப்பிய நாடகசாலை ஒன்றுமிருக்கிறது. இம்மியூஸியத்தில் கோட்டையிலிருந்த மார்க்குவிஸ் காரன்வாலீஸ் என்ற கவர்னர் ஜனரலின் பிரதிமையை, மைசூர் மஹாராஜாவாயிருந்த டிப்புசுல்தானின் இரண்டு குமாரர்களின் பிரதிமைகளோடு, சில வருஷத்திற்கு முன் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். இப்பிரதிமைகள் டிப்பு சுல்தான் 1792-ம் வருஷத்தில் நடந்த ஸ்ரீரங்கப் பட்டணத்தின் உடன்படிக்கைப்படி தான் நடப்பதற்கு ஜாமீனாக தன் இரண்டு குமாரர்களையும், கவர்னர் ஜனரலிடம் ஒப்பி வைத்ததைக் காண்பிக்கிறது. இவைகளன்றி ஸெனெட்

ஹௌஸுக்கு அருகில் விக்டோரியா மஹாராணியின் பிரதிமையும், கவர்னரின் உதவி மந்திரிகளில் ஒருவராயிருந்த கனம் பொருந்திய கிருஷ்ணஸ்வாமி அய்யர் பிரதிமையும், பிரஸிடென்ஸி காலேஜில் ஷை காலேஜ் பிரின்ஸிபல்களில் ஒருவரும் சென்னை ராஜதானி வித்தியா இலாகா அதிகாரியாயுமிருந்த பவல் துரையின் பிரதிமையும், கவர்ன்மெண்டு ஹௌஸுக்கு எதிரில் ஏழாம் எட்வர்டு சக்கிரவர்த்தியின் பிரதிமையும், தீவில் சென்னை கவர்னரில் ஒருவரான பெயர் பெற்ற மன்றோ பிரபுவின் பிரதிமை குதிரையின் மீதும், ஹைகோர்ட்டின் நியாயாதிபதிகளில் ஒருவராகிய போடாம் துரையின் பிரதிமை யொன்றும், மவுண்ரோட்டில் மதிராஸ் கிளப்புக்கு எதிரில் காப்டன் நீல் துரையின் பிரதிமையும், ரவுண்டு டாணாவுக்கு எதிரில் கீர்த்திபெற்ற ஜனாபிமானமுள்ள ராஜப்பிரதிநிதியா யிருந்த ரிப்பன் பிரபுவின் பிரதிமையும், எஸ்பிளனேட்டில் பச்சையப்பன் காலேஜிக்கு அருகில் ஐந்தாம் ஜியார்ஜ் சக்கிரவர்த்தியின் பிரதிமையும், கிறிஸ்டியன் காலேஜிக் கெதிரில் ஷை காலேஜில் பல வருஷங்கள் தலைமை உபாத்தியாயரா யிருந்த ரெவரெண்டு மில்லர் துரையின் பிரதிமையும் வைக்கப்பட்டிருக்கின்றன.

இப்பட்டணத்தில் ஜனரல் ஹாஸ்பிடல் என்ற பெரிய ஆஸ்பத்திரியைத்தவிர அநேக சிறிய ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன. திருவல்லிக்கேணியில் ஒரு பெரிய விஷ்ணு ஆலயமும், மைலாப்பூரில் ஒரு பெரிய சிவாலயமும் இருக்கின்றன. திருவல்லிக்கேணியில் மகம்மதியர்கள் தொழும் இரண்டு மசூதிகள் இருக்கின்றன. கோட்டைக்குள்ளும், எழும்பூரில் தென்னிந்தியா இருப்புப்பாதை ஸ்டேஷனுக்கு எதிரிலும் மைலாப்பூரிலும் உள்ள மாதா கோவில்கள் ஐரோப்பியர்கள் தொழுவதற்காக ஏற்பட்டவைகள். இப்பட்டணத்திலிருக்

கும் தெருக்களில் விசாலமானது மௌண்டு ரோட்டு என்னும் வீதி. இதில் அநேக பெரிய கடைகள் இருக்கின்றன. இவை பெரும்பாலும் ஐரோப்பியர்களால் நடத்தப்படும் கம்பெனிகளே.

இப்பட்டணம் முழுவதும் முக்கியமான பெரிய தெருக்கள் மூலமாய் டிராம் வண்டி மின்சார சக்தியினால் ஓடுகிறது. பட்டண முழுவதும் காந்த விளக்கு போடப் பட்டிருக்கிறது. இப்பட்டணத்தில் தெருக்கள் முதலியன நகர பரிபாலன சங்கத்தாரால் (Corporation of Madras) சுத்தமாய் வைக்கப்பட்டு வருகின்றன. இச்சங்கத்தினர் அநேகமாய் எல்லோரும் ஜனங்களால் நியமிக்கப்பட்டவர்கள். இப்பட்டணமானது இவ்விராஜதானியில் ஓடும் இருப்புப்பாதைகளுக்கு புறப்படுமிடமாயிருக்கிறது. இப்பட்டணத்திற்கருகிலுள்ள பெரம்பூரில் இருப்புப்பாதை வண்டிகள் முதலியன ஏராளமாய்ச் செய்யப்படுகின்றன. இவையன்றி இப்போது நடந்த ஐரோப்பிய யுத்தத்திற்கு வேண்டியிருந்த கருவிகளும் இங்கு செய்யப்பட்டன. இப்பட்டணத்தில் நூல்நூற்கும் இயந்திர சாலைகளும் துணி நெய்யும் இயந்திர சாலைகளும் இருக்கின்றன.

8. செங்கல்பட்டு ஜில்லா.

இது சென்னப்பட்டணத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிறது.

மலைகள், ஆறுகள், ஏரிகள் :--சிறு குன்றுகள் அங்கங்கே யிருக்கின்றன. பாலாறு. இந்த ஜில்லா வழியாய் ஓடுகிறது. புழலேரி, செம்பரம்பாக்கத்து ஏரி என்ற இரண்டு பெரிய ஏரிகள் இந்த ஜில்லாவில் இருக்கின்றன. இப்புழலேரியிலிருந்தே சென்னப்பட்டணத்திற்கு குழாய் மூலமாய் ஜலம் கொண்டு போகப்படுகிறது.

விளைபொருள் :—நெல்லும் அவுரியும் பயிரிடுகிறார்கள்.

கைத்தொழில் :—காஞ்சிபுரத்தில் பட்டுக்கரை வேஷ்டிகளும், புடவைகளும், நெய்கிறார்கள். சைதாப்பேட்டையில் வேஷ்டிகளுக்கு சாயம் போடுகிறார்கள். பல்லாவரத்தில் தோல் பதனிடுகிறார்கள்.

ஜனத்தொகை :—14,00,000.

பட்டணங்கள்:—சைதாப்பேட்டை. இது சென்னப்பட்டணத்திற்கு 5-மைல் தூரத்திலிருக்கிறது. இது செங்கல்பட்டு ஜில்லாவின் முக்கியபட்டணம். இதில் உபாத்திமைத் தொழிலைப்பயிற்றுவிக்கும் ஒரு பெரிய கலாசாலை இருக்கிறது.

செங்கல்பட்டு: -இது இந்த ஜில்லாவில் இரண்டாவதான பட்டணம். இதில் ஜில்லா ஜட்ஜியும், ஸப் கலெக்டரும் வஸிக்கிறார்கள். இங்குள்ள பழய கோட்டைக்குள் ஜில்லா கோர்ட்டும் தாலூக்கா கச்சேரியும் சிறைச்சாலையும், 18-வயதுக்குட்பட்ட குற்றவாளிகளுக்கு ஒரு பாடசாலையும் (Reformatory School) இருக்கின்றன. இப்பாடசாலையில் குற்றவாளிச் சிறுவர்களுக்குப்பிரதம படிப்பும், நானாவித கைத்தொழில்களும் இராஜாங்கத்தார் கற்றுக் கொடுக்கிறார்கள். இங்கு இரண்டு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. இது ஒரு ரெயில்வே ஜங்ஷன்.

காஞ்சீபுரம்:—இந்தியாவில் இந்துக்கள் கொண்டாடும் ஏழு புண்ணிய க்ஷேத்திரங்களில் இது ஒன்று. இது மிகவும் பழமையான பட்டணம். இது முதலில் சோழ ராஜாக்களுக்கும், பிறகு பல்லவ ராஜாக்களுக்கும் முக்கிய நகரமாயிருந்தது. இப்பட்டணத்தில் இவ்வரசர்களால் கட்டப்பட்ட அநேக பெரிய தேவாலயங்கள் இருக்கின்றன. இவற்றுள் ஒரு விஷ்ணு ஆலயமும் ஒரு சிவாலயமும் மிகவும் பிரசித்தி

பெற்றவை. இவ்விஷ்ணு ஆலயத்தில் வருஷந்தோறும் நடக்கும் உத்ஸவத்திற்கு இந்தியாவின் நாலாபக்கங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் வருகிறார்கள்.

திருவள்ளூர்:—இதில் ஒரு பெரிய விஷ்ணு ஆலயம் இருக்கிறது. ஒவ்வொரு அமாவாசை தோறும் திரளான ஜனங்கள் இங்குள்ள குளத்தில் ஸ்நானஞ் செய்து ஸ்வாமியை தரிசிக்கப் போகிறார்கள்.



மகாபலிபுரத்திலுள்ள கல் தேர்கள்.

ஸ்ரீ பெரும்பூதூர்:—இது வைஷ்ணவ மதத்தை ஸ்தாபித்த இராமானுஜர் அவதாரம் செய்த இடம்.

திருக்கழுக்குன்றம் (பட்சி தீர்த்தம்):—இதில் மலையின் மீதும் அடிவாரத்திலும் சிவாலயங்கள் இருக்கின்றன. இங்குள்ள குளத்தின் தண்ணீர் மேன்மையானது. இவ்

வூருக்கு இந்தியாவின் பல பக்கங்களினின்றும் ஜனங்கள் யாத்திரை செய்கிறார்கள்.

மகாபலிபுரம் (ஏழு கோவில் பட்டணம்):—இது முற்காலத்தில் கிழக்குக் கடற்கரையில் பிரசித்தியான துறைமுகமாயிருந்தது. இவ்வூரில் முன்பக்கத்திலுள்ள சித்திரத்தைப்போல ஒரே கல்லில் வெட்டப்பட்ட 7 தேர்களையும், அநேக பிம்பங்களையும் காணலாம். இவை பல்லவ ராஜாக்களால் செய்விக்கப்பட்டன.

பறங்கிமலை :—இது ஒரு ராணுவஸ்தலம். இங்கே சிப்பாய்களைத்தயார் செய்கிறார்கள். இங்குள்ள குன்றின் மீது ஒரு கிறிஸ்தவ ஆலயமிருக்கிறது.

9. தென்னாற்காடு ஜில்லா.

இது செங்கற்பட்டு ஜில்லாவிற்குத் தெற்கில் கடற்கரையில் இருக்கிறது.

மலைகள், ஆறுகள், ஏரிகள் :—கிழக்குத் தொடர்ச்சிமலையின் ஒருபாகத்திற்கு இந்த ஜில்லாவில் காளேரிமலை என்று பெயர். இது இஜ்ஜில்லாவில் மேற்கே தெற்குவடக்காய் வியாபித்திருக்கிறது.

தென்பெண்ணையாறு இந்த ஜில்லாவில் ஓடுகிறது. இது தவிற வெள்ளாறு, மணிமுத்தாநதி, கடிலநதி என்று பல சிற்றாறுகள் ஓடுகின்றன. இந்த ஜில்லாவில் வீராணம் என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது.

விளை பொருள் :—நெல், கேழ்வரகு, கம்பு, மணிலாக்கொட்டை, அவுரி, கரும்பு. மணிலாக்கொட்டை இந்த ஜில்லாவில் போல் வேறு எந்த ஜில்லாவிலும் இவ்வளவு அதிகமாய் உற்பத்தி செய்யப்படுவதில்லை. கரும்பும் ஏராளமாய் பயிரிடப்படுகிறது.

கைத்தொழில் :--நெல்லிகுப்பத்தில் வெல்லம், சர்க்கரை பெப்பர்மிட் முதலியன பாரிகம்பெனி(Parry & Co.,)யாரால் தயாரிக்கப்படுகின்றன.

ஜனத்தொகை, 24, 000, 00.

பட்டணங்கள்:—கூடலூர். இது இந்த ஜில்லாவின் முக்கியப்பட்டணம். இது தென்பெண்ணையாறும், கடிலம் நதியும் கூடும் இடத்தில் இருப்பதால் இதை கூடல்லூர்என்று சொல்லுகிறார்கள். இப்பட்டணத்தின் எல்லைக்குள் இந்துதேச சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் பிரசித்திபெற்ற ஸெயிண்டு டேவிட் கோட்டை இருந்தது. இவ்வூரிலிருந்து மணிலாக் கொட்டை ஏராளமாய் ஏற்றுமதியாகிறது.

புதுச்சேரி:—இது இந்தியாவில் பிராஞ்சுக் காரருக்கு முக்கிய பட்டணம். இது சென்னப்பட்டணத்திற்கு சுமார் நூறு மைல் தூரத்தில் கடற்கரையி லிருக்கும் ஒரு அழகான பட்டணம். இங்கு கரையோரத்தில் ஒதுங்கும் கப்பல்களி லிருந்து சரக்குகளை கரைக்குக் கொண்டுவர கடலில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. பிராஞ்சு அதிகாரத்தை இந்தியாவில் நிலைநாட்டின டியூப்ளே பிரபுவின் பிரதிமை யொன்று கடற்கரையில் வைக்கப்பட்டிருக்கிறது. இதுவன்றி இங்கு இந்தியாவில் பிராஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான நாடுகளின் முக்கிய உத்தியோக சாலைகளும், பிராஞ்சு கற்பிக்கும் ஒரு கலாசாலையும், நூல் நூற்றல், துணி நெய்தல், இரும்பு வேலை செய்தல் முதலிய அநேக தொழிற் சாலைகளும் இருக்கின்றன. இங்கு பிரஞ்சு கவர்னர் வசிக்கிறார். இப்பட்டணத்தில் தெருக்கள் வரிசை வரிசையாகவும், வீடுகள் முன் பின்னில்லாமல் ஒரே ஒழுங்காகவும் கட்டப்பட்டிருக்கின்றன. இவையன்றி பட்டண முழுவதும் காந்தவிளக்கும் தண்ணீர் குழா ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இக்குழாய்களுக்கு தண்

ணீர் இப்பட்டணத்திற்கு அருகில் இயற்கையாய் எப்போதும் தண்ணீர் பெருகிக்கொண்டிருக்கும் நீரூற்றுக்களில் (Artesian Wells) பூமிக்குள் ஆழத்தில் குழாய் இறக்கி அதினின்று கொண்டுவரப்படுகிறது. இவ்வித நீரூற்றுகள் நமது இராஜதானியில் இவ்விடத்திலும், காரைக்காலிலும் தவிர மற்ற இடங்களில் கிடையாது. இப்பட்டணத்திலிருந்து பிராஞ்சு தேசத்திற்கு நிலக்கடலை ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பிராஞ்சு தேசத்திலிருந்து நானா விதமான வாஸனைப் பொருள்களும், சாராயங்களும் இங்கு கொண்டுவரப்படுகின்றன.

சிதம்பரம் :—சைவமதஸ்தர் காஞ்சீபுரம், காளாஸ்திரி, ஜம்புகேசுவரம், திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய இவ்வைந்தையும் முக்கிய சிவ க்ஷேத்திரங்களாக மதித்திருக்கிறார்கள். சிதம்பரத்திலுள்ள சிவாலயத்தில் மூலஸ்தானம் தில்லையம்பலம் என்றும், சிதம்பர ரகஸியமென்றும் சொல்லப்படும். இங்குள்ள உத்ஸவ மூர்த்தி நடராஜர். இக்கோவிலை விசேஷ திரவியம் செலவுசெய்து நாட்டுக்கோட்டை செட்டிகள் புதுப்பித்திருக்கிறார்கள். இக்கோவில் தில்லை மூவாயிரவர் என்று வழங்குபவர்களின் வம்சஸ்தர்கள் ஆதீனத்தி லிருக்கிறது. இவர்கள் மலையாளிகளைப்போல் முன் குடுமி யுள்ளவர்கள் நடராஜர் ஸன்னிதானத்திற் கெதிரில் கோவிந்தராஜர் என்னும் விஷ்ணு மூர்த்தியின் ஸன்னிதானமும் அக்கோயிலுக்குள்ளேயே அமைந்திருக்கிறது.

செஞ்சி :—இது சரித்திர பிரசித்தியானது. இப்பட்டணம் முன்பு தேசிங்குராஜாவுக்கு முக்கியபட்டணமாயிருந்தது. இங்கு இப்போது அழிவுற்ற கோட்டை முதலியன காணப்படுகின்றன.

திருக்கோயிலூர் :—இது பெண்ணையாற்றின் கரையி லுள்ள ஒரு புராதன விஷ்ணுஸ்தலம்.

10. தஞ்சாவூர் ஜில்லா.

இது தென்னாற்காடு ஜில்லாவிற்குத் தெற்கே கடற்கரை யோரத்தி லிருக்கிறது.

மலைகள், ஆறுகள்:—இந்த ஜில்லாவில் மலை என்றபெய ரே கிடையாது. ஜில்லாமுழுவதும் சமவெளியா யிருக்கிறது. காவேரிநதி அநேக கிளைகளாய்ப் பிரிந்து இஜ்ஜில்லாவில் பரவி யிருக்கிறது. இக்கிளைகளில் அநேகம் சோழ ராஜாக்களால் வெட்டப்பட்டவை.

விளை பொருள்:-நெல்,தென்னை,வாழை,எள்ளு,மணிலாக் கொட்டை முதலியன உண்டாகின்றன. இந்த ஜில்லாவை தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்றும் சிங்காரத் தோ ட்ட மென்றும் சொல்லுவார்கள்.

கைத்தொழில்:--கும்பகோணத்தில் பித்தளை, ஈயம் முத லியவற்றால் நேர்த்தியான பாத்திரங்கள் செய்வதுடன் மேன் மையான பட்டும் நெய்கிறார்கள். தஞ்சாவூரில் நெட்டியினால் (சடை) பலவினோதப் பொருள்கள் செய்கிறார்கள். அழகான படங்களும் எழுதுகிறார்கள்.

ஜனத்தொகை, 23, 60, 000.

பட்டணங்கள்:-தஞ்சாவூர், இந்நகரம் கர்னாடகத்தில் மிக வும் பிரசித்தி பெற்றது. இதை ஆதிகாலத்தில் சோழ ராஜாக் கள் முக்கியபட்டணமாய் வைத்திருந்தார்கள். பிறகு வெகு காலம் வரையில் சிவாஜீ மஹாராஜாவின் வம்சஸ்தர்களான மகாராஷ்டிர அரசர்களின் ஆதீனத்திலிருந்தது. இவர்களிருந்த அழகான அரண்மனை இன்னும் இப்பட்டணத்தி லிருக்கிறது. இவ்வரண்மனையி லுள்ள ஸரஸ்வதி மால் என்னும் புராதன

புஸ்தகசாலையில் கணக்கில்லாத பழைய கிரந்தங்களைக் காண லாம். இம்மகாராஷ்டிர வம்சஸ்தரின் சந்ததி அற்றுப்போய் விட்டபடியால் இச்சமஸ்தானம் ஆங்கிலேய நாட்டுடன் சேர்க் கப் பட்டது. இப்பட்டணத்தில் சோழ ராஜாக்களால் கட் டப்பட்ட அநேக பெரிய தேவாலயங்க ளிருக்கின்றன. இவை



தஞ்சாவூர் கோயில்.

களில் பிரகத்தீசுவரர் கோயிலின் கோபுரத்தின் நிழல் தரை யில் விழாத வண்ணம் கட்டியிருக்கிறார்கள். இக்கோவிலினுள் ஒரே கல்லினால் செய்யப்பட் டிருக்கும் மிகப் பெரிய நந்தி யொன்றைக் காணலாம்.

கும்பகோணம்:—இது காவேரி நதிக்கரையில் இருக்கி றது. இப்பட்டணத்தில் மஹாமகக்குளம் என்று பிரசித்தி

பெற்ற ஒரு குளம் இருக்கிறது. இதில் 12 வருஷத்திற் கொருமுறை கங்கை வருகிற தென்றும், அன்றைய தினம் இக்குளத்தில் ஸ்நானஞ் செய்தால் சிலாக்கியமென்றும், இந்தியாவின் நாலுபக்கங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் வருகிறார்கள். இங்கு இராஜாங்கத்தாரால் நடத்தப்படும் ஒரு கலாசாலை இருக்கிறது.

நாகப்பட்டணம் :—இவ்விடத்தில் தென்னிந்தியாஇருப்புப்பாதை வண்டிகள் செய்கிறார்கள்.இங்குநாணயமான இரும்புப் பெட்டிகளும் செய்யப் படுகின்றன. இப்பட்டணத்திற்கு அருகிலுள்ள காரைக்கால் என்பது பிராஞ்சுக்காரருக்குரியது.

மாயவரம் :—இது காவேரி நதிக்கரையில் இருக்கிறது. ஐப்பசிமாதத்தில் காவேரியில் ஸ்னானஞ் செய்ய பலர் இங்கு வருகிறார்கள். இங்கு ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. இவ்வூருக் கருகிலுள்ள குறநாடு, பட்டுச் சேலைகளுக்குப் பேர்போனது.

மன்னார்குடி :—இதை இராஜமன்னார் கோவில் என்றும் சொல்வதுண்டு. இதில் ஒரு பெரிய விஷ்ணு ஆலயம் இருக்கிறது. இதில் ஒரு கலாசாலையுமிஇருக்கிறது.

சீர்காழி :—இது ஒரு சிவஸ்தலம். இதில் நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் அவதரித்தார். இவ்வூரில் இரண்டு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன.

திருவாலூர் :—இதுவும் ஒரு சிவஸ்தலம். இவ்வூரிலுள்ள தேர் மிகவும் அழகானது.

திருவையாறு:—இவ்வூருக் கருகில் காவேரி, கொள்ளிடம், வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி என்று ஐந்து ஆறுகள் ஓடுவதால் இவ்வூருக்கு (திரு+ஐயாறு) திருவையாறு என்ற பெயர்வந்தது. இதை பஞ்சநதம் என்றுஞ் சொல்

வதுண்டு. இது ஒரு பெரிய சிவஸ்தலம். இதில் ஒரு ஸமிஸ் கிருத கலாசாலை ஸ்தாபித் திருக்கிறார்கள்.

11. இராமநாதபுரம் ஜில்லா.

இது தஞ்சாவூர் ஜில்லாவிற்குத் தெற்கே கடற்கரையோ ரத்தி லிருக்கிறது.

மலைகள், ஆறுகள் :— இந்த ஜில்லாவிலும் மலைகள் கிடையாது. வைகையாறு இந்த ஜில்லாவழியாய் ஓடி கடலில் விழுகிறது.

விளைபொருள் :—பருத்தி, கரும்பு, புகையிலை முதலிய வைகள் விளைவிக்கப் படுகின்றன.

கைத்தொழில் :— பரமக்குடியில் சரிகை வேஷ்டிகள் செய்கிறார்கள்.

ஜனத்தொகை 16, 00, 500.

பட்டணங்கள்:— இராமநாதபுரம். இது இந்த ஜில்லா வின் முக்கியப்பட்டணம். இங்கு ஸேதுபதி என்னும் பட்டப் பெயர் பூண்ட இராமநாதபுரம் ஜமீன்தார் வசிக்கிறார். இஜ் ஜில்லாவில் இராமநாதபுரம் தவிர சிவகங்கை என்ற மற்றொரு ஜமீன் உண்டு.

ஸ்ரீவில்லிபுத்தூர் :—இதில் ஒரு பெரிய விஷ்ணு ஆல யம் இருக்கிறது. மார்கழி மாதத்தில் இங்கு திருவிழா நடக் கிறது.

விருதுப்பட்டி:—இங்கு பஞ்சாலைகள் இருக்கின்றன.

தேவக்கோட்டை :— இதில் நாட்டுக்கோட்டை செட்டி மார்கள் விசேஷம். இவர்கள் இந்தியா, பர்மா, ஸிலோன், ஸிங்கப்பூர், பினாங்கு முதலிய இடங்களுக்குப் போய் வியாபா ரஞ் செய்கிறார்கள். இவர்களுக்கு வியாபாரத்தில் மிக்க சாமர்

த்தியம் உண்டு. இவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் தர்மத்துக்கென்று ஒருபகுதி எடுத்துவைத்து அநேக சத்திரங்கள், சாவடிகள் கட்டியிருப்பதுடன் பல தேவாலயங்களைப் புதுப்பித்துமிருக்கிறார்கள்.

12. திருநெல்வேலி.

இதுவே நமது இராஜதானியின் தென்கோடியிலிருக்கும் ஜில்லா.

மலைகள், ஆறுகள்:—மேற்குத்தொடர்ச்சிமலை இந்த ஜில்லாவின் மேற்கே வியாபித்திருக்கிறது. இத்தொடரின் ஒரு பிரிவுக்கு இங்கு அகஸ்தியமலை என்று பெயர். இந்த ஜில்லாவில் ஓடும் நதி தாம்பிரவர்ணி.

விளைபொருள் :—நெல், கம்பு, பருத்தி முதலியன விளைவிக்கப்படுகின்றன. காரீயம் கிடைக்கிறது. இந்த ஜில்லாவில் பனை விசேஷமாய் உண்டாகின்றது.

கைத்தொழில் :—பனைவெல்லம், பனங்கற்கண்டு முதலியன செய்கிறார்கள்.

ஜனத்தொகை, 18, 000, 00.

பட்டணங்கள் :—திருநெல்வேலி தாம்பிரவர்ணி ஆற்றின் வடகரையி லிருக்கிறது. இது இவ்வாற்றிற்கு தென்கரையிலுள்ள பாளயங்கோட்டையுடன் ஒரு பாலத்தினால் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பாளையங்கோட்டை :—இதுவே திருநெல்வேலி ஜில்லாவின்முக்கிய பட்டணம். இதில்அநேக கிறிஸ்தவபாதிரிமார்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஊமைகளும், செவிடர்களும் படிக்க ஏதுவான ஒரு பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார்கள்.

தூத்துக்குடி :—தென்னிந்தியா இருப்புப்பாதை முடியுமிடங்களில் இது ஒன்று. இலங்கைத் தீவுக்கு இருப்புப்பாதை போடுமுன், இங்கிருந்தே ரயில் மார்க்கமாய் கொண்டு வரப்பட்ட சரக்குகள், கப்பல்களிலேற்றப்பட்டு இலங்கைக்குக் கொண்டுபோகப்பட்டன. இப்பட்டணத்திற்கு அருகில் கடலில் முத்துக் குளிக்கிறார்கள். இவ்விடத்திலிருந்து நெல்லும், அரிசியும் ஏராளமாய் கொளம்புக்கு ஏற்றுமதியாகிறது.

மத்தியப் பிரதேசம்.

13. மதுரை ஜில்லா.

இது மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி இராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு நடுவில் இருக்கிறது.



திருமலை நாயக்கர் மஹால்.

மலைகள், ஆறுகள் :--மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பிரிவுக்கு இங்கே பழனிமலை என்று பெயர். இப் பழனி மலையின் கிழக்குப் பக்கத்தில் சிறுமலையும் அழகர்மலையும் இருக்கின்றன. மேற்குப் புறத்தில் கோடைக்கானல் இருக் கிறது. சிறுமலையில் ஒருவகை வாழைப்பழம் உண்டாகிறது. கோடைக்கானல் வெய்யிற் காலத்தில் சௌக்கியத்திற்காக போகும் இடங்களில் ஒன்று. வைகையாறு, இந்த ஜில்லா மூலமாய் ஓடுகிறது.

விளைபொருள் :—நெல், சோளம், பருத்தி, புகையிலை, ஆமணக்கு, காப்பிக்கொட்டை.

கைத்தொழில் :—துணி நெய்கிறார்கள். சுருட்டுசெய் கிறார்கள். வெண்கலப் பாத்திரங்கள் வார்க்கிறார்கள்.

ஜனத்தொகை :—19,30,000.

பட்டணங்கள்:--மதுரை. இது வைகையாற்றின் கரையி லிருக்கிறது. இது முன்காலத்தில் பாண்டிய அரசர்களின் இராஜதானியாயிருந்தது. இதில் திருமலை நாயக்கன் மஹால் என்ற பெரிய கட்டிடமும், மீனாட்சியம்மன் தேவாலயமும், தெப்பக்குளமும், பார்க்கத்தக்கவை. இது சாய வேஷ்டிக ளுக்கும் பலவித வஸ்திரங்களுக்கும் பேர் போனது.

திண்டுக்கல் :—இது சமுத்திர மட்டத்திற்கு சுமார் 900-அடி உயரத்திலிருக்கிறது. இதில் ஒரு உயரமான பாறை யின் மீது பழய கோட்டை ஒன்றிருக்கிறது. இதில் நேர்த்தி யான வெண்கலப்பாத்திரங்கள் வார்க்கிறதுடன் சுருட்டும் செய்கிறார்கள். மேலான சரிகைத்துணிகளும் இங்கு நெய்யப் படுகின்றன.

கோடைக்கானல் :—இது கோடை காலத்தில் சௌக்கியத்திற்குப் போகும் மலையின்மீதுள்ள ஒரு இடம்.



கோடைக்கானல் மலைக்காட்சி.

பழனி :—இது சுப்பிரமணியர் தேவாலயத்தினால் பிரசித்தி பெற்றது.

14. திருச்சிராப்பள்ளி ஜில்லா.

இது கோயம்புத்தூர், சேலம், தென்னாற்காடு, தஞ்சாவூர், மதுரை ஜில்லாக்களுக்கு மத்தியில் இருக்கிறது.

மலைகள், ஆறுகள் :—இந்த ஜில்லாவிலிருக்கும் மலைக்கு பச்சைமலை என்று பெயர். காவேரி நதி இந்த ஜில்லா வழியாய் ஓடுகிறது. இந்நதி திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே இரண்டு கிளைகளாய்ப் பிரிகிறது. இவற்றுள் ஒன்றுக்கு

காவேரி என்றும் மற்றதற்கு கொள்ளிடம் என்றும் பெயர் இந்த கொள்ளிடம் என்னும் கிளைநதி இந்த ஜில்லா விற்கும் தஞ்சாவூர் ஜில்லாவிற்கும் இடையில் எல்லையாய் ஓடு கிறது. இவ்விரண்டு கிளை நதிகளுக்கும் நடுவிலிருக்கும் தீவே ஸ்ரீரங்கம். வெள்ளாறு இந்த ஜில்லாவிற்கு வடக்கே இதற் கும் தென்னுற்காடு ஜில்லாவிற்கும் மத்தியில் ஓடுகிறது.

விளை பொருள் :—சோளம், கேழ் வரகு, கம்பு, அரிசி, முதலியவைகள் பயிரிடப்படுகின்றன.

கைத்தொழில் :—திருச்சிராப்பள்ளி சுருட்டு செய்தல், ஜோடு தைத்தல் நகைகள் பண்ணுதல். முதலிய கைத்தொ ழில்களுக்குப் பேர்போனது.

ஜனத்தொகை :—21,00,000.

பட்டணங்கள் :--திருச்சிராப்பள்ளி. இது கர்னுடகத்தில் சரித்திர சம்பந்தமான பெயர்போன பட்டணம். இதின்நடுவில் ஒரு உயரமான மலைப்பாறையும், அப்பாறையின் உச்சியில் ஒரு சிவாலயமும், அதன் அடிவாரத்தில் ஒரு தெப்பக்குளமும் இருக் கின்றன. இங்கு இரண்டு கலாசாலைகள் உண்டு. இப்பட்டணத் திற்கு இரண்டு மைல் தூரத்தில் வடக்கே காவேரியாற்றின் நடுவில் ஸ்ரீரங்கம் என்ற ஒரு தீவு இருக்கிறது. இது ஏழு மதிள்களால் சூழப்பட்டு, நடுவில் விஷ்ணு கோவிலும், ஒவ் வொரு மதிலுக்கும் இடையில் வீடுகள், கடைகள் முதலியன வும் இருக்கும் ஒரு பட்டணம். இதற்கு அருகில் ஒரு பெரிய சிவாலயமுள்ள ஜம்புகேசுவரம் என்ற ஊரும் இருக்கிறது.

கருவூர் :—இது அமராவதி நதி காவேரியில் கூடு மிடத் தில் இருக்கிறது. இது ஒரு பெரிய வர்த்தகஸ்தலம்.

உடையார் பாளையம் :--இது இந்த ஜில்லாவிலுள்ள ஒரு ஜமீன்.

15. கோயம்புத்தூர்.

இது மேற்குத் தொடர்ச்சி மலைக்குக்கிழக்கே நீலகிரி, மைசூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை ஜில்லாக்களுக்கு நடுவில் இருக்கிறது.

மலைகள், ஆறுகள்:—மேற்குத்தொடர்ச்சி மலையின் ஒரு பிரிவாகிய ஆனைமலை இஜ்ஜில்லாவில் தென் மேற்கே இருக்கிறது. கிழக்குத் தொடர்ச்சிமலை வடபாகத்தில் வியாபித்திருக்கிறது. இதற்கு இங்கு பிளிகிரிரங்கன்மலை என்று பெயர். காவேரி நதி இந்த ஜில்லாவிற்கும் சேலம் ஜில்லாவிற்கும் மத்தியில் எல்லையாய் ஓடுகிறது. காவேரி நதியின் உபநதிகளாகிய பவானி, நோய்யல், அமராவதி, என்ற சிற்றாறுகள் இந்த ஜில்லா வழியாய் ஓடுகின்றன.

விளைபொருள் :—சோளம், கேழ்வரகு, கம்பு, பருத்தி, புகையிலை, எள்ளு, காப்பிக் கொட்டை முதலியவை உண்டாகின்றன. காங்கேயத்தில் நல்ல ஜாதி மாடுகள் உண்டு. கொள்ளேகால் என்னுமிடத்தில் பட்டு உற்பத்தி செய்கிறார்கள்.

கைத்தொழில் :—கோயம்புத்தூரில் துணியும், பவானியில் ஜமக்காளமும் செய்கிறார்கள்.

ஜனத்தொகை 21, 00, 000.

பட்டணங்கள்:—கோயம்புத்தூர். இது சமுத்திரமட்டத்திற்கு ஏறக்குறைய 1250 அடி உயரத்தி லிருக்கிறது. இதற்கு வடக்கே நீலகிரிமலையும் தெற்கே ஆனைமலையும் இருக்கின்றன. இவ்வூரில் காப்பிக் கொட்டயை இயந்திரத்தில் பக்குவமாய் வறுத்துப்பொடிபண்ணி டப்பிகளில் அடக்கஞ் செய்து வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். இப்பட்டணத்

தில் விவசாய சம்பந்தமான ஒரு கலாசாலையும் (Agricultural College), காட்டிலாகா பாடசாலையும் (Forest School) துரைத்தனத்தாரால் நடத்தப்பட்டு வருகின்றன.

ஈரோடு:—இது காவேரி நதிக்கரையி லிருக்கும் ஒரு வர்த்தகஸ்தலம். இது இருப்புப் பாதைகள் சந்திக்கு மிடத்தில் இருக்கிறது.

கோபிசெட்டிபாளயம்:—இது ஈரோட்டுக்கு 23 மைல் தூரத்தில் இருக்கிறது. இவ்வூருக்கருகில் நெல் ஏராளமாய் விளைகிறது.

பவானி:—இவ்வூர் ஈரோட்டுக்கு 9 மைல் தூரத்தில் காவேரியும் அதன் உபநதியாகிய பவானியும் சேருமிடத்தி லிருக்கிறது.

திருப்பூர்:—இது நொய்யலாற்றின் கரையி லிருக்கிறது. இங்கு பித்தளை யினாலும், தாமிரத்தினாலும் பாத்திரங்கள் செய்கிறார்கள். இது ஒரு வியாபாரஸ்தலம்.

தாராபுரம்:—இது திருப்பூருக்கு 30 மைல் தூரத்தி லிருக்கிறது. இவ்வூருக்கருகில் அமராவதி நதி ஓடுகிறது. இதுவும் ஒரு பெரிய வர்த்தகஸ்தலம்.

பொள்ளாச்சி:-இதுவும் இந்த ஜில்லாவில் ஒரு வர்த்தகஸ்தலம். இங்கு ஒவ்வொரு வாரமும் பெரிய சந்தை கூடுகிறது.

உடுமேல் பேட்டை:— இது பொள்ளாச்சிக்கு 16 மைல் தூரத்தி லிருக்கும் ஒரு வியாபாரஸ்தலம்.

16. நீலகிரி ஜில்லா.

இது இப்பெயர் கொண்ட மலையின் மீதுள்ள ஒரு ஜில்லா. இதன் உயரம் சராசரி 6500 அடி. இம்மலையின் மீது எப்போதும் குளிர்ச்சியாகவே யிருக்கும்.

விளைபொருள் :-காப்பி, தேயிலை, சின்கோனு, இயூகலிப்டஸ்செடி, கோதுமை, பார்லி முதலியவைகள் உண்டாகின்றன.

கைத்தொழில் :—சின்கோனுவி லிருந்து குயினு செய்யப்படுகிறது. இயூகலிப்டிஸ் எண்ணெய் செய்கிறுர்கள். பார்லியிலிருந்து ஒருவித சாராயம் காய்ச்சுகிறுர்கள்.

ஜனத்தொகை :—1, 18,000.

இம்மலைப்பிரதேசத்தில் கோடர், பாட்கர் என்ற பூர்வீக நாகரீகமற்ற ஜாதியார் வசிக்கிறுர்கள்.



உதக மண்டலத்தி லிருக்கும் இராஜாங்க அரண்மனை.

பட்டணங்கள் :--நீலகிரி மலையில் 6000 அடி உயரத்தில் கூனூரும், 6100 அடி உயரத்தில் வெல்லிங்டனும், 6500 அடி உயரத்தில் கோடகிரியும், 7000 அடி உயரத்தில் உதகமண்டலமும் இருக்கின்றன. இவைகள் கோடைகாலத்தில் சௌக்கியத்

திற்காகப் போய்த் தங்குமிடங்கள். இவற்றுள் கூனூரில் பயித்தியம்பிடித்த நாய் அல்லது நரி கடித்ததற்கு சிகிச்சை செய்ய ஆஸ்பத்திரி (Pasteur Institute) ஒன்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். வெல்லிங்டனில் இராஜாங்கத்தார் ஒரு ஐரோப்பிய ராணுவச்சேனையை வைத்திருக்கிறார்கள். கோடகிரிக்கு, அவ்விடத்தில் பார்லி, உருளைக் கிழங்கு முதலியவை பயிர் செய்து கொண்டிருக்கும் பூர்வீக குடிகளாகிய கோடர்கள் என்னும் ஜாதியாரால் இப்பெயர் உண்டாயிற்று. உதகமண்டலம் கோடை காலத்தில் சென்னை இராஜதானியின் இராஜாங்க ஸ்தானமா யிருப்பதால், இங்கு துரைத்தனத்தைச் சேர்ந்த சகல உத்தியோக சாலைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கு இம்மலைகளுக்கு நடுவிலிருக்கும் பள்ளத்தாக்கில் இம்மலையினின்று ஓடிவரும் அருவியின் நீரை அணைகட்டித்தேக்கி ஒரு ஏரி உண்டாக்கி யிருக்கிறார்கள். இம்மலையில்தான் இயூகலிப்டஸ்பிசின் உண்டாகிறது. இவையன்றி இம்மலை வேட்டைக்கு வசதியான இடமாயிருக்கிறது.

17. சேலம் ஜில்லா.

இது மைசூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு நடுவிலிருக்கிறது.

மலைகள், ஆறுகள் :—சேர்வராயன் மலை. இம்மலையின் மீதுள்ள ஏற்காட்டில் ஐரோப்பியர்கள் வசிக்கிறார்கள். இம்மலை தவிர இந்த ஜில்லாவில் திருச்செங்கோடு, சங்ககிரி, நாமக்கல் முதலிய குன்றுகள் இருக்கின்றன. காவேரிநதி இந்த ஜில்லாவிற்கும் கோயம்புத்தூர்ஜில்லா விற்கும் மத்தியில் எல்லையாய்ப் போகிறதென்று மேலேசொன்னோம். தென் பெண்ணையாறு இந்த ஜில்லா வழியாய் ஓடி தென் ஆற்காடு ஜில்லாவில் பிரவே

சிக்கிறது. இந்நதிகளினால் இந்த ஜில்லாவிற்கு விசேஷ பிரயோஜனமில்லை.

விளைபொருள்கள் :—கேழ்வரகு, கம்பு, புகையிலை, எள்ளு, காப்பி, தேயிலை முதலிய தானியங்களும் இரும்பும் கிடைக்கின்றன.

கைத்தொழில் :—சேலத்தில் நெசவுத்தொழில் விசேஷமாய் நடக்கிறது.

ஜனத்தொகை :—17,00,000,

பட்டணங்கள் சேலம்:—இது இந்த ஜில்லாவில் முக்கிய பட்டணம். இது சேர்வராயன் மலையின் அடிவாரத்திலிருக்கிறது. இங்கு ஒரு கலாசாலையிருக்கிறது.

தர்மபுரி :—இது மொரப்பூரிலிருந்து ஹோசூருக்குப் போகும் இருப்புப்பாதை மார்க்கத்திலிருக்கிறது. இது முன் காலத்தில் பெரிய பட்டணமாயிருந்தது.

ஹோசூர் :—இது பெங்களூருக்கு அருகிலிருக்கிறது. இங்கு இராஜங்கத்தார் இராணுவத்திற்கு வேண்டிய குதிரைகளை வைத்து வளர்க்கிறார்கள்.

கிருஷ்ணகிரி:—இவ்வூருக்கு திருப்பத்தூரிலிருந்து ஒரு கிளை இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இது ஒரு செங்குத்தான குன்றின் அடிவாரத்திலிருக்கிறது.

திருச்செங்கோடு:—இது ஒரு பெரிய சிவஸ்தலம். இங்கு மலையின் மீதும், அடிவாரத்திலும் ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

நாமக்கல்:—இது ஒரு விஷ்ணு ஸ்தலம். இவ்வாலயத்திலுள்ள அம்மன் மிகவும் வரப்பிரசாதி என்று பலர் இவ்வாலயத்திற்குப் போகிறார்கள்.

18. வட ஆற்காடு ஜில்லா.

இந்த ஜில்லா சித்தூர், செங்கல்பட்டு, தென் ஆற்காடு, சேலம் ஜில்லாக்களுக்கு மத்தியிலிருக்கிறது.

மலைகள், ஆறுகள் :—ஜவ்வாது மலை இந்த ஜில்லாவின் தென் மேற்கே இருக்கிறது. பாலாறு இந்த ஜில்லாவின் வழியாய் ஓடி செங்கல்பட்டு ஜில்லாவில் பிரவேசிக்கிறது.

விளைபொருள் :—நெல், கேழ்வரகு, மணிலாக்கொட்டை, எள்ளு, அவுரி. ஜவ்வாது மலையின் காடுகளில் விலையுயர்ந்த மரங்கள் உண்டாகின்றன.

கைத்தொழில் :—ஆரணியில் நேர்த்தியான வஸ்திரங்கள் நெய்கிறார்கள். வந்தவாசியில் கோரைப்பாய்கள் பின்னுகிறார்கள். வேலூர் சிறைச்சாலையில் ஜமக்காளங்கள், துவாலைகள் முதலியன குற்றவாளிகளைக் கொண்டு நெய்விக்கிறார்கள். திருப்பத்தூர் துவரம்பருப்புக்குப் பெயர் பெற்றது.

ஜனத்தொகை :—20,000,00.

பட்டணங்கள் :—வேலூர். இது இந்த ஜில்லாவின் முக்கியபட்டணம். இது பாலாற்றின் கரையிலிருக்கிறது. இங்கு ஒரு பழய கோட்டையிருக்கிறது. இதில்தான் நமது இராஜாங்கத்தார் போலீஸ் உத்தியோகஸ்தர்களைப் பழக்க ஒரு பாடசாலை வைத்திருக்கிறார்கள்.

ஆற்காடு :—இது கர்நாடக நவாபுகளின் இராஜதானியாயிருந்தது. இதில் அனேக யுத்தங்கள் நடந்தன.

திருவண்ணமலை :—இது ஒரு பெரிய சிவஸ்தலம். இங்குள்ள மலையின்மீது வைக்கப்படும் கார்த்திகை தீபத்தை தரிசிக்க திரளான ஜனங்கள் போகிறார்கள்.

சோளங்கிபுரம் :—இது ஒரு பிரஸித்தியான விஷ்ணு ஸ்தலம். இங்குள்ள குன்றுகள் இரண்டின் மேலும் இரண்டு விஷ்ணு ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

19. சித்தூர் ஜில்லா.

இந்த ஜில்லா அனந்தபுரம், கடப்பை, நெல்லூர், செங்கல்பட்டு, தென் ஆற்காடு ஜில்லாக்களுக்கும், மைசூர் நாட்டிற்கும் நடுவிலிருக்கிறது.

மலைகள் :—நகரிமலை, திருப்பதிமலை.

விளைபொருள் :—கேழ்வரகு, கம்பு, கரும்பு.

இந்த ஜில்லாவில் புங்கனூர் ஜாதி, என்ற குட்டையான பசுமாடுகள், உண்டு. அவைகள் ஏராளமாய்ப் பால் தரும்.

கைத்தொழில் :—நாராயண வனத்தில் மேன்மையான வஸ்திரங்கள் நெய்கிறார்கள்.

ஜனத்தொகை 12, 40, 000.

பட்டணங்கள் :—சித்தூர் இந்த ஜில்லாவின் முக்கியபட்டணம். இது வெல்லத்திற்குப் பேர்போனது.

திருப்பதி:— இது தென்னிந்தியாவிலுள்ள விஷ்ணுஸ்தலங்களில் சிறந்ததும் ஐசுவரிய முள்ளதுமாம். இது ஒரு திவ்விய க்ஷேத்திரம். இங்கு மலையடிவாரத்திலுள்ள ஊருக்கு கீழ்த்திருப்பதி என்றும், மலைமேலுள்ளதற்கு மேல் திருப்பதி அல்லது திருமலை யென்றும் பெயர். இந்த க்ஷேத்திரத்திற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் யாத்திரை போகிறார்கள். மலைமீதுள்ள கோவிலிலிருக்கும் ஸ்ரீ வெங்கடேச பெருமாளை பிரத்தியட்ச தெய்வமாகக் கருதி பலவிதமான பிரார்த்தனைகள் செய்து கொள்வதுண்டு. சிலர் உண்டியில் பணம் சேர்த்துக்கொண்டு போய் செலுத்துவார்கள். சிலர் ஆபரணங்களைச் செலுத்துவார்கள். சிலர் தங்கள் தலைமயிரை அங்கு வாங்குவதாக பிரார்த்தனை செய்துகொள்வது முண்டு.

திருத்தணிகையும், காளஹஸ்தியும் பெரிய சிவஸ்தலங்கள். காளஹஸ்தியை தட்சிண கைலாஸமென்று சிவமதஸ்தர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த ஜில்லாவில் காளஹஸ்தியும், கார்வேட்நகரமும் ஜமீன்கள்.

மதனபள்ளி.--இது இந்தஜில்லாவில் மேட்டுப்பிரதேசத்திலுள்ள ஒரு உஷ்ணமான பட்டணம். இதில் க்ஷய ரோகிகள் சிலகாலம் வசித்தால் அந்த வியாதி குணப்படுகிறது.

சந்திரகிரி.—இது திருப்பதி மலைக்கு அருகிலிருக்கிறது. இது முன்பு விஜயநகரத்தரசர்களுக்கு முக்கிய பட்டணமாயிருந்தது. இங்கிருந்த அரசர்களில் ஒருவர்தான் இங்கிலீஷ்காரருக்கு சென்னப் பட்டணத்தில் கோட்டை கட்டியிருக்குமிடத்தைக் கொடுத்தார்.

பீட பூமியிலுள்ள ஜில்லாக்கள்.

20. கடப்பை.

இந்த ஜில்லா கர்நூல், சித்தூர், அனந்தபுரம் ஜில்லாக்களுக்கு மத்தியில் இருக்கிறது.

மலைகள், ஆறுகள்:--கிழக்குத் தொடர்ச்சி மலைக்கு இந்த ஜில்லாவில் பால் கோண்டா என்றும், சேஷாசலம் என்றும் பெயர்கள். வடபெண்ணையாறு இந்த ஜில்லாவழியாய் ஓடுகிறது.

விளைபொருள்.—சோளம், கம்பு, பருத்தி, அவுரி, கட்டிடத்திற்கு உபயோகப்படக்கூடிய கறுங்கல்லுகள் கிடைக்கின்றன. இக்கல்லுகள் பலகை பலகையாய் உடைக்கப்பட்டு நமது இராஜதானி முழுவதும் அனுப்பப்படுகின்றன. சித்தவட்டம் முலாம்பழத்திற்குப் பேர் போனது.

கைத்தொழில்—புல்லம்பேட்டையில் நேர்த்தியானவஸ்திரங்கள் நெய்கிறார்கள்.

ஜனத்தொகை. 8, 93, 998.

கடப்பை :—இது இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இது மலைகளின் நடுவிலுள்ள ஒரு பள்ளபூமி. இவ்வூரில் முறைக் காய்ச்சல் வந்து கொண்டிருந்தது. இப்போது பட்டணத்தி லுள்ளவர்களின் உபயோகத்திற்கு நல்ல ஜலம் குழாய் மூலமாய் கொண்டு வரப்பட்டிருப்பதால் ஜுரம் அவ்வளவு அதிகமில்லை.

ஜம்மல்மடுகு :—வர்த்தகஸ்தலம். இங்கு நல்ல நெய் கிடைக்கிறது.

21. கர்நூல்.

இந்த ஜில்லா கிருஷ்ண நதிக்கும், குண்டூர், கிழக்குத் தொடர்ச்சி மலை, கடப்பை, அனந்தபுரம், பல்லாரி ஜில்லாக்களுக்கும் இடையிலிருக்கிறது.

மலைகள், ஆறுகள், ஏரிகள் :—இங்கு கிழக்குத் தொடர்ச்சி மலைக்கு நல்லமலை, எர்ரமலை என்று பெயர். இந்த ஜில்லாவின் வடக்கே கிருஷ்ணநதி எல்லையாய் ஓடுகிறது. இந்த ஜில்லாவில் கம்பம் என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது.

விளைபொருள்:—சோளம், பருத்தி, புகையிலை, அவுரி.

கைத்தொழில்:—கர்நூலில் கம்பளிகளும், பங்கனபள்ளியில் ஜமக்காளங்களும் நெய்கிறார்கள்.

ஜனத்தொகை 9, 35, 199.

பட்டணங்கள் :—இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணமாகிய கர்நூல் துங்கபத்திரா நதிக்கரையிலிருக்கிறது. இது முன்காலத்தில் மகம்மதிய அரசர்களின் ஆதீனத்திலிருந்தது.

பத்திகோண்டா:—இந்தஜில்லாவில் கலெக்டராயிருந்து, பிறகு சென்னை கவர்னரில் ஒருவராயிருந்த ஸர் தாமஸ் மன்ரோ பிரபு, இங்கு தன்னிடத்தில் அதிக பிரேமையுள்ள குடி

களைப் பார்க்கப்போன போது, விஷபேதி கண்டு இறந்துவிட்டார். இவர்பெயர் ஞாபகத்தி லிருக்கும் பொருட்டு இராஜாங்கத்தார் இந்த ஊரில் ஒரு தோப்பும், அதில் ஒரு சத்திரமும் ஒருகிணறும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நந்தியாலில் பருத்தி வியாபாரம் விசேஷமாய் நடக்கிறது.

இந்த ஜில்லாவில் அஹோபிலம் என்ற விஷ்ணுஸ்தலமும், ஸ்ரீசைலம் என்னும் சிவஸ்தலமும் இருக்கின்றன.

22. பல்லாரி.

இந்த ஜில்லா துங்கபத்திரா நதிக்கும், கர்நூல், அனந்தபுரம், ஜில்லாக்களுக்கும் மைசூர் நாட்டிற்கும் மத்தியிலிருக்கிறது.

மலைகள், ஆறுகள் :-சில குன்றுகள் இங்குமங்கும் இருக்கின்றன. இவற்றுள் சாந்தூர் மலை முக்கியமானது. துங்கபத்திராநதி, இந்தஜில்லாவில் ஓடுகிறது.

விளைபொருள்:—சோளம், கம்பு, பருத்தி. மாங்கனிஸ் கிடைக்கிறது.

கைத்தொழில்:—பல்லாரியில் கம்பளங்களும் ஆதவானியில் நேர்த்தியான ஜமக்காளங்களும் நெய்கிறார்கள்.

ஜனத்தொகை 9, 69, 456.

பட்டணங்கள் :—பல்லாரி. இது டெக்கான் பீட பூமியிலுள்ள ஜில்லாக்களி லிருக்கும் பட்டணங்களில் பெரியது. இதில் ஒரு பழய கோட்டையில் நமது துரைத்தனத்தார் ஒரு சேனையை வைத்திருக்கிறார்கள்.

ஆதவானி:—இப்பட்டணத்தின் ஒரு புறத்தில் கிருஷ்ணாவும், மற்றொரு பக்கத்தில் துங்கபத்திராவும் ஓடுகின்றன. தட்சிண பீடபூமியில் இப்பட்டணத்திலே தான்பருத்தி வியாபாரம் மிகுதியாய் நடக்கிறது.

ஹம்பி:—இது முற்காலத்தில் விஜயநகர மகாராஜாக்களுக்கு இராஜதானியா யிருந்தது. இப்போதும் இங்கு அழிவுற்ற கோட்டைகளைக் காணலாம்.

23. அனந்தபுரம் ஜில்லா.

இந்த ஜில்லா பல்லாரி, கர்நூல், கடப்பை, சித்தூர் ஜில்லாக்களுக்கும் மைசூர் நாட்டிற்கும் நடுவிலிருக்கிறது. மலைகள், ஆறுகள்:--இந்த ஜில்லாவில் சிலகுன்றுகள் இருக்கின்றன. இவற்றுள் பெனுகோண்டா முக்கியமானது. வட பெண்ணையாறு இந்த ஜில்லா வழியாயோடுகிறது.

விளைபொருள்:—சோளம், கேழ்வரகு, கம்பு, பருத்தி, எள்ளு முதலிய தானியங்களும், பொன்னும் கிடைக்கின்றன.

ஜனத்தொகை.—9, 63, 223.

பட்டணங்கள்:--அனந்தபுரம். இதுவே இந்த ஜில்லாவின் முக்கியபட்டணம். இதைப் பிரதான பட்டண மாக்கியவர் முதல்முதலில் இந்த ஜில்லாவுக்குக் கலெக்டராயும் பிறகு சென்னை கவர்னராயு மிருந்து இந்த ஜில்லாவிலேயே வந்து இறந்த ஸர் தாமஸ் மன்றோ பிரபு.

குத்தி:—இது ஒரு பெரிய வியாபாரஸ்தலம். இவ்வூருக்கருகில் ஒரு பலமான மலைக்கோட்டை யிருக்கிறது.

ஹிந்துபூர்:—இதுவும் ஒரு வர்த்தகஸ்தலம்.

மேற்குக்கரை பிரதேசம்.

24. தென்கன்னடம் ஜில்லா.

இந்த ஜில்லா மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையில் மலையாள ஜில்லாவிற்கு வடக்கே இருக்கிறது.

மலைகள், ஆறுகள் :—மேற்குத் தொடர்ச்சிமலை இந்த ஜில்லாவிற்குக் கிழக்கே யிருக்கிற தென்று மேலே சொன்னோம். நேத்திராவதி நதி ஓடுகிறது.

விளைபொருள்:—நெல், மிளகு, ஏலக்காய், பாக்கு, முதலியவைகள் உண்டாகின்றன. தென்னைமரம் விசேஷமாயுண்டு.

கைந்தொழில்:—மங்களூரில் ஓடு செய்கிறார்கள்.

ஜனத்தொகை:—11, 95, 227.

பட்டணங்கள் :—மங்களூர் இந்த ஜில்லாவின் முக்கியப் பட்டணமாயும் துறைமுகப் பட்டணமுமாயுமிருக்கிறது. இதில் இரண்டு கலாசாலைகளிருக்கின்றன.

உடேப்பி :—இது ஒரு பிரசித்திபெற்ற விஷ்ணு ஸ்தலம். இங்குள்ள கிருஷ்ண ஸ்வாமியின் தேவாலயம் மத்துவமதத்தை ஸ்தாபித்த மத்துவாசாரியரால் கட்டப்பட்டது.

குந்தாபுரம்:—இது இந்த ஜில்லாவின் வடகோடியிலுள்ள ஒரு பெரிய பட்டணம்.

25. மலையாளம்.

இந்த ஜில்லா தென் கன்னடம் ஜில்லாவிற்குத் தெற்கே மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் நடுவிலிருக்கிறது.

மலைகள் ஆறுகள்:—மேற்குத்தொடர்ச்சிமலை இந்த ஜில்லாவின் கிழக்கே இருக்கிறது. இதிலுள்ள பீடபூமிக்கு வயநாடு என்று பெயர். மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள பாலக்காட்டுக் கணவாய் இந்த ஜில்லாவின் எல்லைக்குட்பட்டது. பொன்னானிநதி ஆனைமலையில் உற்பத்தியாகி இந்த ஜில்லா வழியாய் ஓடி கடலில் விழுகிறது.

விளைபொருள்:— நெல், கரும்பு, மிளகு, ஏலக்காய், காப்பிக் கொட்டை முதலியவைகள் விளைகின்றன. தென்னை விசேஷமாய் உண்டு. இங்குள்ள காடுகளில் யானைகள் அதிகம்.

கைத்தொழில் :—கள்ளிக்கோட்டையில் ஓடும், சவுக்காரமும், (சோப்பும்) செய்கிறார்கள். பாலக்கட்டில் பாத்திரங்களும் ஓடும், செய்யப்படுகின்றன. கண்ணனூரில் காடி செய்கிறார்கள்.

ஜனத்தொகை —30,00,000.

இங்குள்ள ஹிந்துக்களில் பிராம்மணர்களுக்கு நம்பூரிகளென்றும், உயர்ந்த ஜாதி சூத்திரர்களுக்கு நாயர்கள் என்றும், பஞ்சமர்களுக்கு தீயர்கள் என்றும் பெயர்கள். இம்மலையாளிகள் தலையின் முன் புறத்தில் குடுமி வைத்திருப்பார்கள். நம்பூரிகளில் ஒரு குடும்பத்தில் மூத்த பிள்ளைக்கு மாத்திரந்தான் கலியாணஞ் செய்து கொண்டு அக்குடும்ப சொத்தை யடையபாத்தியமுண்டு. மற்றவர்களுக்கு விவாகஞ் செய்து கொள்ளக்கூடபாத்தியதை கிடையாது. இவர்கள் பெண்களில் சிலர் வெகு காலம் வரையில் கலியாணஞ் செய்து கொள்ளாமல் இருக்கிறார்கள். இம்மலையாள நாட்டில் ஒருவன் சொத்தை யடைய அவன் பிள்ளைகளுக்கு பாத்தியதை கிடையாது. ஆனால் அவன் சகோதரியின் பிள்ளைகளே அவனுடைய உத்திரகிரியைகளை நடத்தி அவன் சொத்தையடைய பாத்தியஸ்தர்கள்.

பட்டணங்கள்:-கள்ளிக்கோட்டை. இது இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இப்பட்டணம் முன்னொரு காலத்தில் கள்ளிக்கோட்டைத் தம்பிரான் என்று பட்டப்பெயர் பெற்ற அதிகாரியின் பிரதான பட்டணமாயிருந்தது. இங்கிருந்து காப்பிக்கொட்டை வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஐரோப்பியர்கள் இத்தேசத்திற்கு முதலில் வந்த

போது இப்பட்டணத்தில்தான் இறங்கினதாக இத்தேச சரித்திரத்தால் தெரிய வருகிறது. இங்கு ஒரு கலாசாலையிருக்கிறது.

தலைச்சேரி :— இது முன்காலத்தில் கிழக்கு இந்தியா கம்பெனியாருக்கு முக்கிய வியாபாரஸ்தலமா யிருந்தது. இத்துறை முகத்திலிருந்து விசேஷமாய் காப்பிக்கொட்டையும், மிளகும் வெளிதேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இப்பட்டணத்திற் கருகிலிருக்கும் மாஹி என்பது பிரான்சுக்காரருக்குரிய பட்டணம்.

கண்ணனூர் :—இது முன்காலத்தில் பெரிய ராணுவஸ்தலமாயிருந்தது.

பாலக்காடு:— இது ஒரு பெரிய வர்த்தகஸ்தலம். இவ்வூருக்கு ஒலவக் கோட்டிலிருந்து ஒரு கிளை இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இங்கு ஒரு கலாசாலை இருக்கிறது.

26. அஞ்சங்கோ.

மேற்குக் கடற் கரையில் திருவாங்கூர் இராஜ்ஜியத்தைச் சேர்ந்த கொல்லத்திற்கு அருகி லிருக்கும் தங்கச்சேரி, அஞ்சங்கோ முதலிய சில சிறிய ஊர்களைச் சேர்த்து அவற்றை அஞ்சங்கோ என்ற ஜில்லாவாக்கி யிருக்கிறார்கள். இந்த ஜில்லா கொல்லத்தி லிருக்கும் திருவாங்கூர் இராஜ்ஜியத்தின் ஆங்கிலேய பிரதிநிதியின் (ரெஸிடெண்டு) பரிபாலனத்திற்குட்பட்டது.

சுதேச இராஜ்ஜியங்கள்.

சென்னை இராஜதானியிலுள்ள சுதேச இராஜ்யங்கள் திருவாங்கூர், கோச்சி, புதுக்கோட்டை, மைசூர், குடகு, பங்கனபள்ளி, சாந்தூர் என ஏழு.

திருவாங்கூர் இராஜ்ஜியம்:--இது நமது இராஜதானியில் தென்மேற்கி லிருக்கிறது. இவ்விராஜ்ஜியத்திற்கு முக்கிய பட்டணம் திருவநந்தபுரம். இதை அநந்த சயனம் என்றும் சொல்லுவதுண்டு. இங்கு ஒரு சாதாரண கலாசாலையும், ஒரு சட்ட கலாசாலையும், ஒரு வைத்தியசாலையும் இருக்கின்றன. இவ்விராஜ்ஜியத்தில் மேற்குக் கடற்கரையிலுள்ள கொல்லம் வரையில் திருநெல்வேலியிலிருந்து ஒரு இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இவ்விராஜ்ஜியம் ஒரு அரசரால் ஆளப்பட்டு வருகிறது. இவர் பிரிட்டிஷ் இராஜாங்கத்தாருக்கு காப்புச்சேனைக்காககப்பம் கொடுத்துவருகிறார். இங்கு பேசப் படும் பாஷை மலையாளம்.

கோச்சி இராஜ்ஜியம்:— இவ்விராஜ்ஜியத்தின் வடக்கிலும், கிழக்கிலும், மலையாளம் ஜில்லா இருக்கிறது. இந்த இராஜ்ஜியத்திற்கு மேற்கெல்லை எது? இதற்குதெற்கே இருக்கும் இராஜ்ஜியம், திருவாங்கூர். இவ்விராஜ்ஜியத்தில் கோச்சி முக்கிய பட்டணம். இப்பட்டணத்திற்கு ஷோரனூரிலிருந்து ஒரு கிளை இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இவ்விராஜ்ஜியமும் ஒரு சுதேச அரசரால் ஆளப்பட்டு வருகிறது. இவரும் பிரட்டிஷ் இராஜாங்கத்தாருக்குக் காப்புச் சேனைக்காக கப்பம் கட்டுகிறார்.

புதுக்கோட்டை:-இந்த இராஜ்ஜியம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களுக்கு இடையிலிருக்கிறது. முன்காலத்தில் இது தொண்டமான் சக்கிரவர்த்தியால் பரிபாலித்து வரப்பட்டு வந்தது. அக்காலத்தில் இதற்கு தொண்டமண்டலம் என்று பெயர். இப்போது இதை ஆளுபவர் பிரிட்டிஷ் இராஜாங்கத்திற்கு கப்பம் கட்டுகிறார். இந்நாட்டில் அம்மன் பதிப்பிக்கப்பட்ட செப்பு நாணயம் உபயோகிக்கப் படுகிறது.

மைசூர் :—இவ்விராஜ்ஜியம் தட்சிண பீடபூமியின்தென் பாகத்திலுள்ள மலைநாடு. இது ஏறக்குறைய முக்கோண வடிவமா யிருக்கிறது. இதன் தென்பாகத்தில் கிழக்குத்தொடர்ச்சி மலையும் மேற்கு தொடர்ச்சி மலையும் ஒன்ருய்ச் சேருகின்றன. இந்நாட்டில் பூமி அநேகமாய் கற்பாங்கானது. இவ்விராஜ்ஜியத்தில் ஓடும் காவேரிநதியில் பல இடங்களில் அணை கட்டி ஜலத்தைப் பாய்ச்சலுக்கு உபயோகித்து வருகிருர்கள். இவ்விராஜ்ஜியத்தின் மூலமாய் தென் மஹாராஷ்டிர இருப்புப் பாதையின் கிளைப்பாதைகள் ஓடுகின்றன. இவ்விராஜ்ஜியத்தில் மைசூரும், பெங்களூரும் முக்கிய பட்டணங்கள். இங்கே பேசப்படும் பாஷை கன்னடம். இது இந்தியா ராஜாங்கத்திற்குள்பட்டது. இது ஒரு அரசரால் ஆளப்பட்டு வருகிறது.

குடகு:-இந்த நாடு மைசூர் இராஜ்ஜியத்தின் தென் மேற்கேயுள்ளது. இது மேற்குத் தொடர்ச்சிமலையின் மீதும் அதன் கிழக்குச் சரிவிலும் இருக்கும் மலைநாடு. இது சென்னை இராஜதானியின் ஆளுகைக்குட்பட்டு ஒரு கமிஷனரால் ஆளப்பட்டு வருகிறது. இந்நாட்டிற்கு முக்கிய பட்டணம் மடகேரி.

பங்கனபள்ளி :—இந்த ஸமஸ்தானம் கர்நூல் ஜில்லாவிலிருக்கிறது. கொஞ்ச காலத்திற்குமுன் இந்த நாடு ஹைதராபாத்து நவாபால் தன்னுடைய ராணுவத்தில் உண்மையாயுழைத்த ஒரு துருக்க சேனைபதிக்கு விடப்பட்டது. பிறகு இந்த வம்சத்துத் தலைவர்களுக்கு இராஜாங்கத்தாரால் நவாபு பட்டம் கொடுக்கப்பட்டது.

சாந்தூர்:—இது பல்லாரி ஜில்லாவிற்கும் மைசூர் இராஜ்ஜியத்தின் ஒரு பாகத்திற்கும் நடுவி லிருக்கிறது. தவிரவும் இது இரண்டு மலைகளுக்கு நடுவிலிருக்கும் பள்ளத்தாக்கு. இது ஒரு மகாராஷ்டிரத்தலைவரின் ஆதீனத்தி லிருக்கிறது.

INDIA PRINTING WORKS, MADRAS.